# சிதம்பர சுப்பிரமணியன்
## புகழ்க் கதம்பம்

15810



S. IYER LIBRARY
24497

கி. வா. ஜகந்நாதன்

V.K

# சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க் கதம்பம்

கி. வா. ஜகந்நாதன்

இந்நூலின் வருவாய் யாழ்ப்பாணம் உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குரியது.

பதிப்பாசிரியர்:
செ. தனபாலசிங்கன்
உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயில்

முதற் பதிப்பு: 1966
உரிமை ஆசிரியர்க்கே

விலை ரூபா மூன்று

ஸ்ரீ லங்கா அச்சகம்,
234, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

# முன்னுரை

சென்ற டிசம்பர் மாதம் (1964) எனக்கு வெப்புநோய் உண்டா யிற்று. மருத்துவர்கள் 'டைபாயிடு' என்று கூறினர்கள். உணவுக்கட் டுப்பாடு, பேச்சுக்கட்டுப்பாடு, நடையாடுதலுக்குக் கட்டுப்பாடுயாவும் இருந்தன. ஆனால் என்மனத்தில் எண்ணங்கள் தோன்றுவதைக் கட்டுப் படுத்தவில்லை. அது அவர்களால் முடியாது. ஏன், என்னாலும் முடியாது தானே!

படுக்கையில் கிடந்தபடியே பலதலங்களுக்குச் சென்று வந்தேன் மனம் என்றும் இல்லாத வேகத்தில் சிறகுகட்டிப்பறந்தது. அருமையான கற்பனை, ஊற்றுப்போல எழுந்தது. அப்போது அன்பர், திரு. தனபால சிங்கத்தின் வேண்டுகோள் நினைவுக்கு வந்தது. "எங்கள் சிதம்பர சுப் பிரமணியனைப்பற்றி நூறுபாடல்களேனும் எழுதி அளியுங்கள்" என்று அவர் நேரில் கேட்டதோடு, அடிக்கடி எழுதியும் வந்தார். அதற்கு இது தான் வாய்ப்பான சமயம் என்று எண்ணிப் பேனவை எடுத்தேன்.

பேன விரைவாக ஓடியது. நூறு, இருநூறு என்று பாடல்கள் வந்துகொண்டே இருந்தன. சிலநாள் இருநூறு முந்நூறு என்று கூடப் பாடினேன். ஒருவாரத்தில் ஆயிரம் பாடல்கள் பாடி முடித்துவிட்டேன். அவற்றைப் படி எடுக்க மாதக்கணக்கில் ஆகிவிட்டது!

அன்பர், திரு. தனபாலசிங்கன் இவற்றைப் புத்தக உருவில் கொண்டு வருகிறார். அவருடைய அன்பைப் போற்றுகிறேன். "விளையாட்டாய்க் கவிதையினை விரைந்து பாடித், தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு" என்ற பாடல் எனக்கு நினைவுக்கு வருகிறது.

நோய்வாய்ப்பட்ட காலத்திலும் முருகனை நினைப்பதற்கு இந்தப் படைப்பு ஒரு காரணமாக உதவியது. அவ்வளவுதான் எனக்குச் சொல் லத் தோன்றுகிறது. மற்றவை இவற்றைப் படிக்கிறவர்களின் உணர்ச் சியைக் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டியவை.

முருகன் அருளை வாழ்த்துகிறேன். அன்பர், திரு. தனபாலசிங்க னுடைய அன்பைப் பாராட்டுகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

*'காந்தமலை'*
*கல்யாண நகர்,*
*சென்னை 28.*

# உள்ளுறை


| | |
|---|---|
| முன்னுரை ... | iii |
| உள்ளுறை ... | iv |
| அறிமுகம் ... | v |
| காப்பு ... | xiii |
| சிதம்பர் சுப்பிரமணியன் | |
| உயிர்வருக்க மாலை ... | 1 |
| சேவடிமாலை ... | 18 |
| அபிடேகமாலை ... | 32 |
| அருச்சனைமாலை ... | 49 |
| பழமொழிமாலை ... | 62 |
| தூதுமாலை ... | 75 |
| இருசீர் அந்தாதி ... | 88 |
| முச்சீர் அந்தாதி ... | 101 |
| நாற்சீர் அந்தாதி ... | 114 |
| வெண்பா அந்தாதி ... | 127 |

உ
சிவமயம்

# அறிமுகம்

தமிழ்க்கடவுள் முருகன் கலியுகவரதன். அவன் பாதத்தின் மகிமையும் மேன்மையும் உமாபதி அறிவார்; ஓங்கு கலைஞானமும் ஆறுகுணபேதமும் பிரம்மா அறிவார்; கர பலமும் வீரமும் சூரபன்மன் கை அறிந்திடும்; கடைக்கண் ஒழுகு ஞானமும் தீக்கையும் தமிழ்முனிவன் உள்ளம் அறியும்; அவன் பேரழகை மன்மதன் அறிவான்; வாழ்வும் ஆனந்தசுகமும் வள்ளி தெய்வயானை அறிவர். ஆனால் கலைமகள் ஆசிரியர், திரு. கி. வா. ஜகந்நாதன் அவன் பெருமை அத்தனையும் அறிவார், முருகன் அடியார் ஆதலால்! புகழ்க் கதம்பமே அதனை நமக்குச் சொல்லிவிட்டது.

இத் தெய்வீகப் பாடல்கள் எழுந்ததே ஓர் அற்புதம்! அதை எழுத நானார்? அவர் கடிதங்களே பேசட்டும்!

கல்யாணநகர்,
சென்னை 28,
18-1-65.

ஆதரத்துடன் சோதியுற்றவை வேலினற்கரன் அடியிலே
காதலுற்றவர் காலனச்சமும் காமனச்சமும் மேவுறார்
சீதளத்திருத் தாமரைக்கிணை யானமூவிரு முகத்தினன்
யாதுனுற்றின னேஅதைச்செயல் ஏழையெற்கொரு கடனரோ.

அன்புமிக்க ஸ்ரீ தனபாலசிங்கன் அவர்களுக்கு,
ஆசிபல; நலம்.

நீங்கள் எழுதிய கடிதங்கள் கிடைத்தன. திருக்குறள் பதிப்பைப் படித்து இன்புற்றது தெரிந்தது.

சென்ற டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் உடல் நலமின்றி இருக்கிறேன். முதலில் ஆறுநாள் ஜுரம் வந்து நான்கு நாள் விலகி மீண்டும் வந்துவிட்டது. 'டைபாய்டு' ஜுரம் என்று டாக்டர்கள் கண்டுபிடித்து மருந்து கொடுத்தனர். இன்னும் படுக்கையில்தான் இருக்கிறேன். அதனால் தான் உங்கள் கடிதத்துக்கு முன்பே பதில் எழுத இயலவில்லை.

இப்போது ஜுரம் இல்லாவிட்டாலும் உடல்வெப்பம் 98 இலிருந்து 99 வரையில் ஏறிஇறங்குகிறது. ஆரஞ்சுச் சாறும் பார்லித்தண்ணீரும்தான் உணவு. உடம்பு மெலிவாலும் உள்ளம் மிகமிக அமைதியாக இருக்கிறது. எப்போதும் முருகனுடைய தியானத்தில் ஆழ்ந்திருக்கிறேன். மனம் தெளிவாக இருக்கிறது. இரண்டுநாளைக்குமுன் ஒரே நாளில் சிதம்பர சுப்பிரமணியன் உயிர்வருக்கமாலை என்று 120 பாடலில் ஒரு பிரபந்தம் எழுதிமுடித்தேன். அடுத்த நாள் சிதம்பர சுப்பிரமணியன் அபிஷேகமாலை என்று 100 பாடலில் ஒரு பிரபந்தம் எழுதினேன். இப்படியே சென்றால் 1000 பாடலுக்கு மேல் எழுதிவிடுவேன். நான் எழுதுவதைக் கண்டு டாக்டர் தடுத்துவிட்டார். மற்றவர்களும் தடை செய்கிறார்கள்.

இந்த ஓய்வு முருகனாக எனக்கு அருளியது என்றே எண்ணுகிறேன். சுகமாக இருந்தால் யாரும் என்னைச் சும்மா விடமாட்டார்கள். இப்போது எனக்கு ஒரு வலியும் இல்லை. உடலயர்வைத் தவிரத் துன்புறுத்தும் ஊறுபாடு ஏதும் இல்லை. தியானத்துக்காக அமைந்த ஒரு வாய்ப்பு என்றே தோன்றுகிறது.

இரண்டு நூல்களையும் பாதுகாப்பாக அனுப்புகிறேன். இனியும் எழுதினால் சேர்த்து அனுப்புகிறேன். 1000 பாடல்கள் அதாவது 10 பிரபந்தங்களை எதிர்பார்த்திருங்கள்.

அன்பன்,
**கி. வா. ஜகந்நாதன்.**

கல்யாண நகர்,
சென்னை 28,
23-1-65.

என்னைப் பணிகொண் டெனதிடர் தீர்ப்பன; ஏழ்பிறவி
இன்னல் களைவன; வல்லிருள் மாய்ப்பன; இம்மையிலும்
மன்னும் மறுமையும் வாழ்வை அளிப்பன; மன்னும்பை
துன்னும் சிதம்பர சுப்பிர மண்ணியன் தூவடியே.

அன்புமிக்க சிரஞ்சீவி தனபாலசிங்கன் அவர்களுக்கு,
ஆசிபல; நலம்.

இதற்கு முன் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். 'டைபாய்டு' என்னும் நச்சுக் காய்ச்சலால் நலிவுபெற்றுப் பாயலில் தங்கி

யிருப்பதையும், முருகனைப் பாடிப் பொழுது போக்குவதை யும் அதில் சொல்லியிருந்தேன். விமானத் தபாலில்தான் அதை அனுப்பினேன். அது கிடைத்தவிபரம் தெரியவில்லை.

எனக்கு உடல்நிலை இப்போது குணம்பெற்று வருகிறது. இன்னும் வெளியில் செல்லவில்லை ஓய்வு பெற்றே இருக் கிறேன்.

சிதம்பர சுப்பிரமணியனைப்பற்றி ஆயிரம் பாடல் பாடி விட்டேன். எத்தனை ஆயிரம் பாடினாலும் பாடலாம் என்று தோன்றுகிறது. பத்துப் பிரபந்தங்கள் பாடியிருக்கிறேன். மொத்தம் 1020 பாடல்கள். அவற்றை மெல்ல மெல்லப் படியெடுத்து அனுப்புகிறேன்.

இதனுடன் பிரபந்தங்களின் பெயர்களையும், ஒவ்வொரு நூலிலுமுள்ள முதற்பாட்டையும் எழுதிவைத்திருக்கிறேன். முதலில் எழுதியபோது வெள்ளம்போன்ற வேகத்துடன் பாடல்கள் வந்தன. அவற்றைப் பிரதி செய்வது எளிதன்று. மெல்ல மெல்லத்தான் எழுதவேண்டும். பொறுத்திருங்கள்; கிடைக்கும்.

அன்பன்,
**கி. வா. ஜகந்நாதன்.**

இவற்றைப் படிக்கும்போது நீங்கள் உங்கள் வாயில் விரல் வைப்பதும் உடல் புளகாங்கிதம் கொள்வதும் தெரி கிறது. அந்தக் காலத்திலே பண்ணிசைத்துப் பாமாலை சூடிய நாயன்மார்கள், ஆழ்வார்கள், அருணகிரிநாதர் போன்றோர் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அந்தஞானச் சங்கிலி அறுந்து போகாது காப்பாற்ற, எம்மத்தியில் திரு. கி. வா. ஜகந்நா தன் அவர்களைத் தந்த திருவருளை என்னென்போம்! அப் பரும் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையும் அருள்மணி வாசக ரும் எப்படிப்பாடினரோ என்று வியப்புற்றோம்! அந்த இர கசியமும் இப்போது நமக்குத் தெரிந்துவிடுகிறது. நால்வர் பெருமக்கள் முதலாயினோர் பாடியருளிய திருமுறைகள் சிவபிரான் திருமொழியேயாகும். இது சம்பந்தப் பெருமான் திருவாய்மலர்ந்த 'கழுமலநகர்ப் பழுதிலிறை யெழுதுமொழி

தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே' எனவும், 'நித்தமா ஏத்தும் ஊருளான் எனதுரை தனதுரையாக' எனவும் வரும் மறைமொழிகளால், நன்கு புலனுகும். 'தன் சொல்லால் தான்தன்னைக் கீர்த்தித்த மாயன்' என்றும், 'நாமுதல் வந்து புகுந்து நல்லின்கவி தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்ன' என்றும் எம்பெருமான் தன்னையேதான் பாடிக்கொண்டான் எனச் சொல்வார் ஆழ்வார்.

இறைவன் தன் திருநாவும் திருவாயும் கொண்டு மறை பாடுவதில்லை. அவ்வுறுப்புக்களைக் கொண்ட மெய்யடியவர் தம் பொய்யில் திருவுள்ளத்து அருளுருவாய்நின்று பாடுவது மறைக்குக் காரணமாகும். இதனையே நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தர் 'சொற்பிரிவிலாத மறைபாடி நடமாடுவர்' என்று தம் தேவாரத்திலே குறிப்பிடுவார். சுருக்கமாகச் சொன்னுல், தவத்தால் தூயராய், சார்ந்தோர்க்கருளும் சான்றோராய், திருவடியுணர்வு கைவந்த சிவத்திருவினராய், வேதாந்த சித்தாந்த நூல்களை ஓதும் ஒண்மையராய், இவற்றின் வாய்மைகளை வழங்கும் வண்மையராய் விளங்கா நிற்கும் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களைக் கருவியாக வைத்துத் தன்அழியா அழகையும் அடங்கா ஆற்றலையும் வேலின் வலிமையையும் அடியார்க்கருளும் அருளின் அருமையையும் அந்த வெற்றி வடிவேலனே பாடிவிட்டான் இந்தப் புகழ்க் கதம்பத்திலே!

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களை அறியாத தமிழர்கள் இருக்கமுடியாது. இலக்கியச்சுவை கெடாமல் பக்திச்சுவையைக் கலந்து தன் இனிய சரளமான நடையால் படிப்பவர் கேட்பவர் எல்லோரையும் இன்பத்தில் ஆழ்த்துஞ் சக்தி இவர் பேனுவுக்கு உண்டு. எத்துறையை நோக்கினுலும் இவருக்கு ஒப்பு இவரே! மனிதவர்க்கத்தை எதிர் நோக்கும் பொன்யுகம் குறித்து எத்தனையோ கனவுகளை மகாகவிகள், தீர்க்கதரிசிகள், பேரறிஞர்கள் காண்கிருர்கள். மக்களின் எதிர்காலம் இராமராஜ்யமாக வேண்டும் என்பது மகாத்மா காந்தியின் கனவு. பக்தர்களின் இலட்சிய சமுதாயம் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் ஆனந்தக் கனவு. இந்தக் கனவு நனவாகவேண்டி எழுந்தன அவர் படைப்புக்கள்.

தாய்நாட்டுப் பெரியார் ஒருவர் சேய்நாட்டிலே திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் முருகனைப் பாடுகிறார் என்றால் இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும். பாடி முடித்துவிட்டு இந்நூலின் வருவாயைத் திருப்பணிக்கே உபயோகியுங்கள் என்று அன்புக்கட்டளையும் இடுகிறார். இதுமர்மமாகவே இருக்கிறது. சிதம்பரசுப்பிரமணியன் புகழ்க் கதம்பம் உங்களுடையதே! உங்களுக்கெல்லா உரிமையும் உண்டு என்றும் எழுதுகிறார்கள். இதுவும் மர்மமாகவே இருக்கிறது. தனக்கென வாழாப்பிறர்க்குரியாளராம் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பிறர்க்கென முயல்வார் உண்மையானே உலகம் உண்டு என்பதைக் காட்டித்தந்துவிட்டார்கள்.

ஆச்சரியத்துள் ஆச்சரியம்! இப்பாடல்களைப் பாடித் தந்த இப்பெரியார் எப்போதாவது சிதம்பர சுப்பிரமணியன் திருக்கோயிலுக்கு வழிபாட்டுக்கு வந்தவர் அல்லர். இப்பிரபந்தங்களைப் பாடித்தாருங்கள் என்று நாம் கேட்டோம். அப்பெருமான் உள்நின்றுணர்த்தக் காதலாகிக் கசிந்து பாடினார். முருகன் ஆட்டத்தையும், அடியார் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பெருமையையும் நாயினேனோ நவிலவல்லேன்!

இலக்கிய உலகில் இன்று நிலவுகின்ற புதுமை வேட்கை இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படை என்பது சிறியேன் கருத்து. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின்பின் எழுந்தது திருக்குறள் வீரத்தையும் காதலையும் விழுமியதாகப் போற்றிய சங்ககாலச் சான்றோர்கள் எட்டுத் தொகையையும் பத்துப் பாட்டையும் எழில் பொலியத் தந்தார்கள். பின் எழுந்தன சிலப்பதிகாரம், மணிமேகலை. நால்வர் பெருமக்கள் நானிலம் வாழ அன்பு சொட்டப்பாடிச் சைவ இலக்கியம் கண்டார்கள். பக்தியில் மூழ்கிய ஆழ்வார்கள் பைந்தமிழ்ப் பாசுரம் பொழிந்து வைணவத்தை வளர்த்தார்கள். கலையின் கவின்காணக் கம்பன்கவிதை எழுந்தது. தாயுமானார் சமரச கீதம்பாட உமறுப் புலவர் சீறாவும், வீரமாமுனிவர் தேம்பாவணியும் பாடினார்கள் பரணிகள், உலாக்கள், பிள்ளைத்தமிழ்கள், கலம்பகங்கள், கோவைகள், பள்ளுகள்,

குறவஞ்சிகள் முதலிய இலக்கியவகைகள் பைந்தமிழ்ச் சோலை யின் பசுமையைக் காட்ட எழுந்தன. புதுமை வேட்கையின் பயன் இப்படைப்புக்களுக்கெல்லாம் காரணமாயது. முன் னோர் கையாண்ட முறைகளிலிருந்து மாற்றத்தை விழைந்த பின்னோர் படைப்புக்கள், இலக்கியஉலகில் புதுமை வேட் கையை மேலும் எழுப்பின. பழமையும் வெறுத் தொதுக்கப் படாது நின்று நிலவியது. ஒரு நாட்டின் பெருமைக்கு அந்நாட் டின் பழமையும் ஒரு காரணமாகும் என்பதைத் தமிழ்ப்பெருங் குடிமக்கள் அறிவார்கள்.

> "தொன்மையவா மெனுமெவையும் நன்றாகா
> இன்று தோன்றிய நூலெனு மெவையும் தீதாகா"

என்றுதானே கொற்றவன்குடி உமாபதிசிவனார் கூறுகிறார்.

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுடைய புகழ்க்கதம் பத்திலே புதுமையும் பொலிகிறது; பழமையும் நடை போடு கிறது. இந்நூல் அளிக்கும் விருந்து உண்ண உண்ணத் தெவிட்டாதது. தேம்புகின்ற வாழ்வுக்கு ஒரு தெம்பினைத் தருகிறது. கட்டுரை வன்மையுடன் பாவன்மையும் நாவன் மையும் வாய்க்கப்பெற்ற இப்பெரியார், தமிழகத்தில் மட்டு மன்றி கடல்கடந்த நாடுகளிலும் கன்னித் தமிழையும் காலம் கடந்த சிவநெறியையும் வளர்த்துவருகிறார்கள். இதனைப் படிக்கும் போது வேலவன் நம் மனக்கண் முன் துள்ளிவரு வதைக் காணலாம். முருகன் அருளினால் எழுந்த இப்பாடல் கள், மலமாயை வெப்பத்தைத்தணித்து, உள்ளத்தைக் குளிர் விக்கின்றன; மாலமுதப் பெருங்கடலை மண்ணிலே காணும் வாய்ப்பும் கிட்டுகிறது.

இத்தெய்வீக நூலைக் கரத்தால் பற்றிக் கருத்தூன்றிப் படிக்கும் பெருமக்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். நூலை அச்சிடும்போது அச்சுப்பிழைபார்க்க வேண்டி, பரந்த உள்ளம் படைத்த பண்புடையாளர் ஒருவரிடம் குறைஇரந் தோம். அவர் தம் இசைவைத் தெரிவித்து ஆவன செய் தார். அவர் புங்குடுதீவு அன்பர், வித்துவான், பொன். அ. கனகசபை, அவர் தலையாய அறிவுடையோரால் பேணித்

தமராகக் கொளற்குரிய பெருமை உடையவர். சிவப்பணியின் உயர்வுக்குப் பணியாற்றும் பேராளர். அவருக்கு எம் இதயம் கனிந்த அன்பைச் சொல்வதோடு வள்ளிக்கு வாய்த்தவன் வளமெலாம் வாரிவழங்க வழுத்துகிறோம்.

சிதம்பர சுப்பிரமணியன் திருத்தொண்டு நான் பெற்ற பேறு. திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் அன்பு என் வாழ்வில் நான் பெற்ற வளம். இதைவிட வாழ்வில் எனக்கு வேறென்ன வேண்டும்? திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு செந்தமிழ்ச் சைவ உலகமே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கும்போது எளியேன் என் அன்பையும் நன்றியையும் சொல்ல அஞ்சுகிறேன். தமிழ் மொழிவளர, கட்டுரைகள் கவிதைகள் வரலாறுகள் முதலிய பல வழிகளின் வாயிலாகப் பெரும்பணி புரிந்து வரும் இப்பெரியார், சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க்கதம்பமாம் நல்லமிர்தத்தைத் தந்து, இறைப்பற்று எங்கும் பொலிய, எல்லோரும் அன்பிலே திகழ, தமிழும் சைவமும் தழைத்தோங்க நல்வழி காட்டியமைக்குத் தமிழ் மக்கள் சார்பாக உளங்கனிந்த நன்றியை உவந்தளிக்கின்றோம். செந்தமிழ்ச் சைவ உலகம் அவருக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பதை எளிதில் சொல்லிவிட முடியாது.

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் அல்லும் பகலும் நல்லுளத்தால் எண்ணியும் எழுதியும் இயற்றியும் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு ஆற்றுகின்ற சேவை எழுத்தில் அடங்காது; இது காலத்தால் கரையாது; என்றும் நிலைத்து நிற்கும். அழுக்கிலாமனமும் வழுக்கிலா வாழ்வும் கொண்ட அறிவுசால் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழாவினை அலங்காரமாகக் கொண்டாடும் இந்த நல்லாண்டில் இந்நூல் வெளிவருவது அன்பர்கள் எல்லோர்க்கும் பெருமகிழ்ச்சி தருவதொன்றாகும். தமிழும் சைவமும் பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டு வாழ்ந்து வரும் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் முருகன் திருவருளாலே பன்னெடுங்காலம் வாழ்ந்து பெருந்தொண்டாற்ற வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம்.

இந்நூலினை மிகச் சுருங்கிய காலத்திலே மிகக் குறைந்த செல வில் திறம்பட அச்சிட்டு உதவுகிறார் திரு. நா.தெய்வேந்திரனார்- ஸ்ரீ லங்கா புத்தகசாலை அச்சக உரிமையாளர். 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்ற தெய்வத் திருக்குறளுக்குத் திரு. தெய்வேந்திரனார் இலக் கியமாக வாழ்கின்றார். அவர் வாழ்க! வாழ்க! என்று வாழ்த் துவதுடன் நன்றியையும் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறோம்.

இந் நூலினைச் செந்தமிழன்பர்களும் செந்நெறிச் செல்வர் களும் வாங்கி எம்பணிக்கு உதவுவார்களாக!


எல்லாம் முருகன் திருவருள் !

வணக்கம்.


செ. தனபாலசிங்கன்.



உரும்பராய் சிதம்பர சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்




திருக்கோயில் முற்புறத் தோற்றம்



திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

## காப்பு

வானுர் உரும்பைச் சிதம்பர சுப்பிர மண்ணியனைத்
தேனுர் தமிழால் துதிக்கத் திருவருள் செய்துவக்கும்
கூனுர் மதியும் அறுகும் அணிஒரு கோட்டுமதக்
கானுர் கபோலக் கரடக் கரிமுகக் கற்பகமே.

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்
# உயிர் வருக்க மாலை

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

அம்புய மாமலர் ஆதவன் செங்கதி ரால்மலர் வாயதுபோல்
வெம்பிய என்மனம் நின்னரு ளின்கதிர் மேவ விரிந்திடுமே;
பம்பிய ஈழ மணித்திரு நாட்டில் உரும்பராய்ப் பண்ணவனே,
வம்புறு நீப, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (1)

அக்கு வடம்புனை முக்கண ஞர்பணி வார வணங்கஅவர்க்
கெக்குய மானதோர் பொருளினைப் பேசினை என்ப தியம்பிடுவாய்;
மிக்குயர் பூம்பொழில் சூழும் உரும்பராய் மேவிய காவலனே,
வற்குறு தோள, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (2)

அங்கம் எடுத்தித னுலுனை யேபணி அக்கட மைபுரியா
திங்குறும் ஐம்புல வேட்கையி லேயுழல் ஏழையை மீட்குவையோ?
சங்கர னூர்திரு மைந்த, கணுதிபன் தம்பி எனுந்துரையே,
மங்கல மேவு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (3)

அச்சம் இலாமலென் ஆருயி ருக்கரு ளாமரண் அருளுவையோ?
இச்சையி லேயவ மேபொழு தைச்செல விடும்வழி நீக்குவையோ?
பச்சைம யிற்பரி ஊருமெய்ச் சேவக, பார்ப்பதி யாள்குமரா,
வச்சல மிக்க சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (4)

அச்சிது என்றறி யாது தியங்கி அவப்பொழு தேபோக்கி
இச்சிறு போகம் நுகர்ந்து திரிந்த தினிப்பெற வேண்டகிலேன்;
நச்சிய அன்பர்கள் எய்த்துறு போழ்தினில் நன்மை பெறும்வண்ணம்
வச்சபொன் ஒத்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (5)

---

2. குயம் - குஹ்யம்; இரகசியம். 2. வற்கு - திண்மை,
4. வச்சலம் - வாத்ஸல்யம்.

அஞ்ச மதைப்பரி என்றிவர் நான்முகன் ஆணவம் நீக்கினநீ
பஞ்சையென் ஆணவம் நீக்கி அருள்தரப் பார்த்திடிற் பழியுறுமோ?
கஞ்ச மலர்மிகு பண்ணை யுரும்பராய்க் கண்ணினி தேதிகழும்
மஞ்ச, குமார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (6)

அஞ்சல் எனத்தகு தீரம் மிகுத்தவன் ஆறு முகக்கடவுள்
தஞ்சம் எனக்கழல் தொழுவென் நெஞ்சு சழக்கற ஓதுகிறேன்;
மிஞ்சி வசப்படல் இன்றி மிடுக்குறும்; மேவுமுன் அடியிலிடாய்;
வஞ்சனை நீக்கு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (7)

அஞ்சு பொறிக்கு மயங்கி இரைதர ஆதுரம் மேவியயான்
தஞ்சம் எனச்சுடர் வீசுநின் சேவடி சார்தரல் என்றுகொலோ?
கஞ்ச மலர்ப்பிர மன்தொழு தேத்திய காவல, கருணையிலே
மஞ்சை நிகர்த்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (8)

அஞ்செழுத் தேயுன தாறெழுத் தாகிய அதிசயம் யானறியேன்;
பிஞ்செழுத் தென்று பெருந்தவர் கூறிய பேரெழுத் தையுணரேன்;
நஞ்செழுத் தாகிய நான்முக னுரெழுத் தால்மிக நலிகின்றேன்;
வஞ்சமற் றோர்சொல் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (9)

அட்டில்என் கோயில்; உணுப்பிர சாதம்; அரும்புல னேதெய்வம்;
மட்டி, மயற்கிரை தேடி இளைப்புறு வாழ்வினன் என்செய்வேன்!
முட்டுறல் நீக்கியவ் வும்பரை வாழ்வுற முன்னிய இன்னருளாய்,
மட்டறு சீர்கொள் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (10)

அட்டை உடம்பினில் முட்டி இரத்தம் அனைத்தும் உறிஞ்சுதல்போல்
ஒட்டிய காமமென் அறிவை விழுங்கி உரம்பெறல் நீக்கியருள்;
கிட்டி வணங்க அழும்திரு வாளர் கிளர்ந்தெழ அருள்பவனே,
மட்டுறு நீப, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (11)

அண்டர்கள் கொண்ட தருக்கை அடக்கிட அசுரரை யேபடைத்து
மிண்டிய துன்பு விளைத்தம ரர்சரண் என்றடி மேவியபின்
திண்டிற லாரசு ரர்வலி ஓய்வுறச் சேவகம் செய்தனைநீ;
வண்டுறும் நீப, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (12)

---

6. அஞ்சம் - அன்னம்.

10. மட்டி - அறியாதவன்.

11. நீப - கடம்பமாலையை அணிபவனே.

12. சேவகம் - வீரம்.

அண்டிய ஏழைகள் துன்பது கண்டுளம் ஆர இரங்கிஅவர்க்
குண்டியும் ஆடையும் ஈயும் உளந்தர உன்றனை வேண்டுகிறேன்;
எண்டிசை யோர்சொல் உரும்பராய் மேவிய எந்தை, தயாபரனே,
மண்டிய சீர்கொள் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (13)

அத்தம் அறிந்திலன்; சொற்சுவை தேர்ந்திலன்; ஆரண மும்படியேன்;
சுத்த முறுங்குணம் இன்ன எனத்தெரி யாத சுணங்கனைநீ
இத்துயர் போக எடுத்தரு ளாவிடின் யாருழை யேபுகுவேன்?
மத்தர் புதல்வ, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (14)

அத்தியின் மாமலர் காணலும் ஆகும்;இவ் வந்தக னேன்மனத்தில்
வைத்துறும் ஆசையின் மூல மதைத்தெளி வுறல்மிகு வாதனையே;
சித்தர்கள் போற்றிய அத்த, உரும்பராய்ச் சீர்த்தலம் மேவுகுகா,
மத்தம் அகற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (15)

அந்தகன் என்னுயிர் மேல்வரு காலையில் அஞ்சல் எனப்பசுமை
உந்திய மாமயில் மீது விரைந்தட ஓடுக என்றருள்வாய்;
செந்திலில் ஏரக வெற்பினில் ஆவினன் குடியினில் திகழ்பவனே,
மைந்துறு தோள, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (16)

அப்பினி லேகரை உப்பென என்னை அகத்தில் அடக்கியருள்;
வெப்புறு மாயை விளைத்த கொதிப்பினில் வேசறல் போதுமினி;
கப்புறு மூவிலை வேல்கொள் கரத்தினன் காதல்கொள் கண்மணியே,
வைப்பென நாடு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (17)

அம்பென நோக்கிய கண்ணுடை மங்கையர் ஆதரம் மேவிமனம்
வம்புற நாளும் அலைந்து திரிந்து மயங்கிய நிலைசாலும்;
கம்பம் இலாத படிக்குன தாளிணை காட்டி அணைத்திடுவாய்;
வம்புறு நீப, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (18)

அயர்வில தாகிய முத்தி எனும்பதம் ஆரறி வார்;உனையே
மயர்வற அன்புசெய் துருகி நெகிழ்ந்துறு மகிழ்வினில் நின்றிடுவேன்;
வயல்பல ஓங்கும் உரும்பராய் மேவிய மாகரு ணாகரனே,
மயலொழி தேவ, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (19)

அரனென அரியென அயனென மேவிய ஆருமுன் ஆருருவே;
இரகசி யமிதனை ஓர உணர்த்தினை; என்றும் மறக்ககிலேன்;
உருவென அருவென உளதென் இலதென ஓங்கிய பாங்குடையோய்,
மருவுறு நீப, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (20)

அலம்அலம் இந்த நெடும்பிற வித்துயர்; அவலம் அடைந்ததினி
அலம்அலம்; நின்இரு தாளிணை யேபுக லாக அடைந்தனன்யான்;
வலம்வரும் அன்பர் மலிந்த உரும்பராய் மாப்பதி வாழ்குகனே,
மலமழி நாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (21)

அவமென நாள்பல போக்கின னாயினும் அறிவுற இன்றுநினை
நவமுற அண்டி நினைந்து நெகிழ்ந்து நலம்பெற வந்தனனே;
தவமிது போன்றது வேறிலை; நின்னடி சரணம் எனப்புக்கேன்;
வவல்இலர் போற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (22)

அழகினி லேஇணை யாரும் இலாதநின் அற்புத உருவம்நினைந்
தெழுமயல் யாவும் அடங்க மடங்கும் உளத்தினி லேஅமைதி
கெழுமிட வாழ்தர நீயருள் புரிகுதி; கேடில் அருட்செல்வா,
வழுவிலர் போற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (23)

அளவறு பிறவியில் அடியிணை தொழுதவர் அடைகுவர் சிறிதறிவென்
றுளதொரு மொழியினை நினைதொறு மெனதுளம் உருகி மயங்குமரோ!
பளகுறும் ஏழையுன் பதவிணை வழிபடு பாங்கொரு சிறிதும்இலேன்;
வளமருள் நாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (24)

அற்றவர் பற்றை அறுத்தவ ருக்கொரு பற்றென ஆர்ந்துநினைக்
கற்றவர் தேர்கிலர்; செல்வர்கள் நாடிலர்; கண்ணினில் நீர்பொழிய
உற்றுரு கிப்பணி அன்பர் அறிந்தனர்; உண்மையி தோர்ந்தனன்யான்;
மற்றிணை அற்ற சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (25)

அன்னம் உறுஞ்சுவை யான்அறி வேன்,உன தற்புத நாமத்தின்
வன்னம் உறுஞ்சுவை யேயறி யாத மயக்கனை ஆள்குவையோ?
சொன்ன மிகும்பலர் தன்மம் வழங்கு முரும்பராய்ச் சோதியனே,
மன்ன, குமார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (26)

அன்னை உமைக்கொரு விழியின் மணிக்குக, ஆறு முகச்சிவனே
மன்னி எனைப்பிழை செய்தன உள்ளம் மறந்து வழங்கருளே,
என்ன அடுத்தனன்; ஏழையை வாழ்வுற ஏற்றுதல் நின்பரமே;
வன்ன மயூர, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (27)

---

*21. அலம் - போதும்.*

*22. வவல் - வவ்வல்; பிறர் பொருளைக் கொள்ளுதல்.*

*24. "பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கின், நல்லறிவு சற்றே நகும்".*

ஆகிய யாவுமுன் ஆரரு ளால்வினை வாவன என்றுணர
நீகரு ணைசெயின் அன்றி அவத்தனென் நெஞ்சினில் உணர்வருமோ?
மாகம் அணைந்துயர் வானவர் சேகர மாமணி ஆனவனே,
வாகை அணிந்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (28)

ஆங்கில மா,வட மொழிகொல், செழுந்தமி ழா,எது சீரிதெனத்
தீங்குற வேசிலு கிப்பொழு தோவுறச் செய்யும் மகாபாவி,
ஈங்குன சீர்சொலும் எம்மொழி யேனும் இனித்த தெனஉணரேன்;
மாங்கனி போன்ற சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (29)

ஆசுவித் தாரம்நற் சித்திரம் இன்மது ரக்கவி, ஆறெனவே
வீசிய பாவல ராயினும் உன்னருள் மேவிலர் பாவியரே;
கூசுகின் றேனுனைப் பாடிட; நாய்என கோதுறு கவிஏற்பாய்;
மாசறு தேச, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (30)

ஆதவ ஞர்ஒரு கோடியின் மேலும் அணைந்து சுடர்ந்தாலும்
ஓதுவ மைசொலல் சால்பல என்றுரை உத்தமர் உரைகண்டேன்;
ஈது குணக்குறை யேன்அநு பூதியில் எய்தி உணர்வதுவோ?
வாதனை போக்கு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (31)

ஆந்தனை யும்துயர் ஏந்திய ஏழையர் அவலம் அறுத்தினிய
சாந்த உரைகள் இயம்பியன் பேசெயும் தகைமையை எற்கருள்வாய்;
காந்த மலைக்குரு நாத, உரும்பராய் காதலித் தெழுந்தருள
மாந்தர் பணிந்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (32)

ஆப்பினை நீக்கி இடர்ப்படு மந்தியின் அம்புவி மாயையிலே
யாப்புறும் ஏழையை நீயல தாரினி இன்ன லகற்றிடுவார்?
பூப்புரை கண்ணினர் வள்ளிதெய் வானை மணந்தருள் புண்ணியனே,
மாப்பொரு ளான சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (33)

ஆம்பொருள் ஈதென நாடி அறிந்துணர் அத்தகு மதியில்லேன்;
தீம்பக லுங்கம லப்பத மேபுகல் என்று செறிந்துருக
லாம்படி நீயருள்; ஆறு முகப்பெரு மா,கரு ணாலயனே,
மாம்பழ மான சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (34)

---

*29.* *சிலுகி - சண்டையிட்டு.*

*32.* *காந்தமலை - மோகனூரில் உள்ளது (என் உபாசனைத்தலம்).*

ஆய்பலர்; தந்தை பலப்பலர்; தேகம் அடைந்தன எத்தனையோ!
நோயெனும் இப்பிற விக்கடல் ஏறிட நுனது பதந்தருவாய்;
வாயச மாய்முனி குண்டிகை யைக்கவிழ் வாரண னுக்கினையோய்,
மாயம் அகன்ற சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (35)

ஆரமுன் புன்னகை; அம்புன் விழித்துணை; அமுதமுன் மேனிஎன
நாரிய ரைத்தொழு தேமயல் கொள்ளுமந் நடலை தவிர்த்தருளாய்;
ஆரமு தே,கனி யே,மது வே,சுவை அண்ணிய பாகனையாய்,
மாரன் மயங்கு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (36)

ஆலம் எனத்தகு காம அனற்படும் ஆதனை நீதயையால்
நீல மயிற்பரி மேலுறு காட்சியை நெஞ்சுற வைத்துமயல்
கால உணர்ச்சி பழுத்துறு மாறு கனிந்தருள் செய்குவையோ?
மாலை அகற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (37)

ஆவியை யுற்றிடும் ஆணவ மாகும் அழுக்கினை ஞானவனல்
நீவி அகற்றியுன் மாகரு ணைக்குளி கைகொடு நேர்படவே
தூவியல் பத்தரை மாற்றுயர் பொன்னியல் துன்ன அருள்தருவாய்;
மாவை அடர்த்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (38)

ஆழம் அறிந்திடல் அரிதெனும் உள்ள மடந்தையர் ஆர்வவலை
வீழும் அவத்தன் அவத்தையி னைப்பொடி வேரற நீக்கியருள்;
பாழினி லேவெறும் பாழென நின்ற பரம்பொரு ளே,குகனே,
வாழ வழங்கு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே (39)

ஆளென என்னை அணைந்து தடுத்தடி மைகொளல் அறமல்வோ?
நீள நினைந்தனன்; நின்னடி யன்றி நிரம்பிய துணையுளதோ?
நாளலர் தாமரை போன்முகம் ஆறுறு நாத உடற்றசுரர்
மாள அழித்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (40)

ஆறு முகங்களும் ஆதரம் ஆறினில் அமர்தரல் யோகியர்கள்
வீறிய உண்முக நோக்கினி லேயுணர் வாரென விளம்புவரால்;
தேறிய ஞானம் இலேனது காணுறத் திருவருள் நல்குவையோ?,
மாறிலர் போற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (41)

---

37. *கால - நீக்க.*

39, *பொடிவேர் - சல்லிவேர்,*

ஆனனம் ஆறும் அநாதி எனும்புகழ் அருண கிரிக்குரவன்
தானுற ஓதினன்; ஆர்அறி வார்அவன் தன்பெரு மை!அவனை
ஞானி எனும்படி ஆக்கிய நின்அருள் நாயனை யாளுமதோ?
மானியர் போற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (42)

இக்கினை வில்லென ஏந்திய பாவி எனைத்துயர் செய்கின்றான்;
அக்கினி மாவிழி யால்முனம் நீறென ஆக்கியும் வாழ்கின்றான்;
இக்கண மேநுதல் மேவிய கண்ணினை ஏற விழித்தழிப்பாய்;
மக்கள் விரும்பு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (43)

இங்குளன் அங்குளன் என்றறி யாமல் எழுந்து திரிந்துலவி
எங்குளன் என்று தெரிந்திலர் நின்றனர்; இதய மலர்நடுவண்
தங்கினை என்று பணிந்தவர் நின்னருட் டாரகம் கொண்டுய்வார்;
மங்கல மேவு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (44)

இச்சை வழிப்படு நெஞ்சை அடக்கி இருத்திநின் ஏருருவம்
வச்சு மடக்கி ஒருக்கிய நன்னிலை வாய்த்திட வேண்டுகிறேன்;
நச்சணி கண்டன் வணங்கு குருத்தனி ஞான தயாபரனே,
வச்சை இலாத சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (45)

இஞ்சியை நுங்கு குரங்கென ஆசையில் ஏங்கி மனம்திரியும்;
வஞ்சியை அம்பொனை மாமனை யாதி வகுத்த உடைமைகளை
எஞ்சுறல் இன்றி விரும்பி உழன்று மயங்கல் இனிப்போதும்;
மஞ்ச, குமார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (46)

இட்ட விதிப்படி யாவும் நடப்பன என்ப திரும்புவியில்
பட்டு நுகர்தரு துன்பமும் இன்பமும் பற்றிய உண்மையன்றோ?
சுட்டி இயற்று செயற்கது சால்பல; துணைநின தருளாகும்;
மட்டில் தயாள, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (47)

இண்டுமுள் ளிற்புடை வைபடின் மெல்ல எடுப்பது தான்நியதி;
வண்டென இப்பிர பஞ்சவெவ் வாசனை மதுவினில் வீழ்ந்தமனம்
தண்டை அணிந்தநின் தாமரைச் செம்பதம் தன்னில் உறப்புரிவாய்;
மண்டிய ஏர்கொள் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (48)

---

*43. முருகனுக்கும் முக்கண் உண்டு.*

*45. வச்சு - வைத்து. வச்சை - உலோபம்,*

இத்துயர் யார்க்கும் இலே;அடி யேன்ஒரு வற்கி திசைந்ததெனு
மெத்த வருத்த முறும்பலர் மற்றவர் வேதனே அறிவாரோ?
உத்தம ளுகிய நின்னரு ளாணே உறும்படி செய்வஅவை;
மத்த முரூர்சொல் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (49)

இந்தனம் நெய்யிவை இட்டழ லேநுதுப் பேமென முயலுதல்போல்
பந்தமு றும்பொறி யானேக ளுக்கு நுகர்பொருட் பால்உரிமை
தந்தத ஞலவை ஆர்வம் அடங்குதல் சாத்திய மோசொல்லாய்;
மந்தனே ஆண்ட சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (50)

இப்படி இப்படி வாழ்என என்கன வினில்வரு கைதந்து
செப்பிஎன் புன்மை தவிர்த்திடின் ஏழை சிறந்து விளங்குவனுல்;
முப்பொரு ளாகி முதற்பொரு ளாகி முளேத்த குகச்சுடரே,
வைப்பன வேல, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (51)

இம்மையில் எப்படி வாழ்வது வென்ற இயல்பறி யேன்எளியேன்;
அம்மையில் வாழ்வுற என்செய வேண்டுமென் றறப்பமு மேயறியேன்;
வெம்மை தவிர்ந்துப சாந்த நிலேபெறும் மேன்மை எனக்குளதோ?
மைம்மயி லேறு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (52)

இயலிசை நாடகம் ஆகிய முத்தமி ழிற்புல மைபெற்றேன்,
உயர்வுறு செய்யுள் கணத்தில் இயற்றி உருக்கும் வகைஅறிவேன்,
பெயர்புகழ் பெற்றவன் என்றிடிற் காலன் பெயர்ந்து திரும்புவனே?
மயலழி போத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (53)

இரவு பகற்பொழு தறியகி லாததொர் இன்பம் அடைந்தனமென்
றுரவிய நெஞ்சினர் பற்பலர் சொற்றனர்; உற்றஅந் நிலேநாயேன்
மருவுறல் இப்பிற விக்குள் வருங்கொல்?என் மன்னுயி ருக்குயிரே,
வரகுரு நாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (54)

இலவு பழுக்கும் எனத்தனி காத்த இளக்கிளி போலாகா
துலக சுகத்தை மறந்துன் அருட்குள் உறைந்திட வேண்டுகிறேன்;
பலபல கற்றும் மனத்தை அடக்கு பழக்கம் இலாதவர்என்?
மலமொழி வேல, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (55)

இவ்வணம் இவ்வுரு இவ்வடி வென்றெழு திடல்அறி யாதவன்நீ;
எவ்வணம் எவ்வுரு எப்படி அன்பர்கள் இதயம் நினேத்திடுவார்
அவ்வணம் அவ்வுரு அப்படி போந்தருள் ஆர வழங்கிடுவாய்;
வவ்விலர் போற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (56)

இழவென உடல்உயிர் போம்பொழு திற்புலம் பித்துயர் எய்துகிறார்;
பழவுயிர் வந்ததை யாரறி வார்?அது பாறிய தாரறிவார்?
எழுமுட லாடை யிகந்துபுத் தாடையை எய்துமிச் சீவனன்றோ?
மழவழி யாத சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (57)

இளமையில் அழகினில் அழிவறு சோதி எனப்பலர் ஏத்துவதை
அளவறு காலம் அறிந்தன னுயினும் அவ்வுருக் கண்டறியேன்;
பளகறு மாறு சுடர்த்திரு மேனிஎன் பார்வையி லேவருமோ?
வளமுற வேசெய் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (58)

இற்றது வாழ்வு, பிணப்படு மேனி எடுத்தெறி வோம்,வருவீர்,
மற்றவை பிற்பட ஆகுக என்று மனித்தர் நிகழ்த்துவதை
முற்றும் உணர்ந்தும்இவ் வாழ்வினை மெய்யென முன்னுதல் நீதியதோ?
வற்றலில் அன்ப, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (59)

இன்று வருங்கொல், இனிச்சில நாட்கள் இகந்து வருங்கொல்லோ,
என்றுநின் இன்னருட் கேங்குகின் றேன்;என தேசற வைப்போக்காய்;
மன்று நிறைந்த நடப்பெரு மான்தரு மைந்த, குமார,குகா,
வன்றிணி தோள, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (60)

ஈகை பயின்றிலே என்று சொலாத இயல்பும்நல் இன்னுரையே
வாகுட னேமொழி தன்மையும் மேவுற மாவருள் ஈகுவையோ?
மாக புரந்தர னூர்பழ வாழ்வினை மறுபடி தந்துதவும்
வாகை யணிந்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (61)

ஈசன் உளப்படி யாவும் நடக்கும்என் றியாவையும் ஏற்றுமனம்
நாசம் உறும்படி யோகு பயின்றிட நல்லருள் ஈகுவையோ?
காசணி வள்ளி பதம்பணி யுங்கரு ணுகர, கந்த,குகா,
மாசறி யாத சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (62)

ஈடரு ஞான விளக்கினை ஏந்தி இருட்பவம் யாவுமற
நாடரு பிரணவ சோதியி லேமனம் னைந்து கரைந்துருக
வீடிது வேயெனும் இன்ப நிலைக்குள் விழும்படி அருளுதியோ?
வாட லிலார்சொல் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (63)

ஈண்டிய தொல்வினை எத்தனை யாயினென்? என்உயி ருக்குயிர்நீ
வேண்டியிவ் வேழையை ஆண்டருள் செய்திடின், விழல்எரி யுற்றதுபோல்
மூண்ட வினைக்குவை தீய்ந்தழி வாகும்;இவ் வேட்கைதான் முற்றுறுமோ
மாண்டறி யாத சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (64)

ஈதலும் ஏத்தலும் யார்க்கும் அருந்துணை என்ன இருப்பதுவும்
மேதகு பண்பென நன்கறிந் தேன்;அவை மேவ அருள்புரியாய்;
ஓதிய ஞானம்வை வேலென ஏந்திய உத்தம, சித்துருவே,
மாதுயர் நீக்கு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (65)

ஈந்து பழுத்தது போல அடுக்கிய கோடி யினப்பொருளை
ஏந்தும்உ லோபியி னுல்எவர் என்பெறு வார்கள்?அவ் வேழையுமே
மாந்துவ னேசுகம்? ஈதறி யாமல் வறும்பொருள் தேடுவனே?
மாந்தரை யாண்ட சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (66)

ஈய மதைக்கண் டிளித்தது பித்தனை என்பது போல்நாயேன்
மாயையின் உட்படு வேன்பிற மக்களை மாசினர் என்றுசொல்வேன்;
தாயையன் னுய்அருள் பெற்றிலர் யாவரும் சாரும் நடைப்பிணமே;
மாயம் அறுத்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (67)

ஈர மனத்தினர் நின்னுடை அன்பர்கள் இருதயம் உறைகின்ற
வீரம் இணைத்தென யார்அறி வார்?நமன் மிண்டி வருங்காலை
யார்அட, இங்குனை யாரழைத் தார்என ஏசி வெருட்டுவரால்;
வாரருள் நாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (68)

ஈழ மணித்திரு நாட்டினி லேபல ஏற்ற முறும்பதிகள்
வாழுறும் நின்றனை ஏத்தி வணங்கு மகாதவம் பெற்றனன்யான்,
கேழுறும் யாழ்ப்பதி யண்மை உரும்பராய்க் கேத்திரம் மேவுகுகா,
வாழிய வேல, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (69)

ஈளை அடைந்திடர் மேவ விரும்பிய தேதென் வேஉறவோர்
மூளை உரைத்து வினவ மயற்படு முன்வரு வாயருள்வாய்;
பாளை யிருட்குழல் வள்ளி பதம்பணி பத்த, பராபரனே,
மாளல் அறுத்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (70)

ஈறும் இலாய்;முதல் இல்லை எனச்சொலி ஏத்துதல் யானறியேன்;
வீறு மயிற்படை உண்மை இதாமெனும் மெய்ம்மையும் யானறியேன்;
ஆறு முகப்பெரு மானுன தன்பர் குழுப்பட அருளுவையே;
மாறு படாத சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (71)

ஈனர் பழக்கம் உருமல்உன் அன்பர் இனத்தினி லேபயில
லான பழக்கம் எனக்கரு ளாய்;அவர் அன்பினில் நான்உயர்வேன்;
மோன அகத்திய மாமுனி கற்றிட முத்தமிழ் ஓதுகுகா,
வானவர் ஏத்து சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (72)

உக்கதை எண்ணி வருந்துதல் இன்றிஇஃ துனதருள் என்றமையத்
தக்க மனந்தர வேண்டுகின் றேன்;உன தாமரைத் தாளிணையில்
நெக்குரு கிக்கசிந் தழுதகண் ணீரொடு நிற்பதை நீயருளாய்;
வக்கணை மேவு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (73)

உங்க ளுடைக்கட வுள்,நம தெய்வமென் றோதி யிகல்சாற்றி
மங்க லுருத படிக்கொரு மைப்படு மாண்பினை ஈந்தருள்வாய்;
சங்கர னார்குரு வே,குழ கா,குக, சத்தி யயிற்கரனே,
மங்கல மேவு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (74)

உச்சியில் நின்னடி வைத்தத னாற்சுரர் உண்டு சுகிக்கின்றார்;
நிச்சலும் நின்னுரு நெஞ்சினில் வைத்தவர் நிறையருள் நுகர்கின்றார்;
எச்சிலை நாடிய நாயென ஏங்கி இருந்தழி வேன்;அறமோ?
வைச்சுடர் வேல, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (75)

உண்டியைக் கண்ட இடஞ்சுக சொர்க்கமென் றுண்டுறங் கிப்பொழுதை
மிண்டு மயற்கிரை யாக்கிய பாவியை வீட்டில் இருத்துவையோ?
அண்டிய நாதம் எழிற்கொடி யாக எடுத்தருள் அற்புதனே,
மண்டருள் ஏறு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (76)

உத்தமர் ஆர்எனின் நித்தலும் நின்னடி ஓவற எண்ணுபவர்;
அத்தகும் அன்பர் இனத்தில் இருத்திடின் ஆரிருள் நீங்கிஉய்வேன்;
சித்த சிகாமணி, சித்தர்கள் சேகர, சித்தி தருங்குமரா,
மத்தனை யாண்ட சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (77)

உந்திய ஊர்தியும் மாளிகை யும்பிற உடைமையும் சதமெனவே
முந்திய எண்ணம் மறைந்தது, நின்னருள் மூண்ட சிறப்பதனால்;
இந்த முறைப்படி இன்னும் எனைப்பர இன்ப நிலைக்கிடுவாய்;
வந்தெனை ஆண்ட சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (78)

உப்பள மேன்மழை பெயின்அடை உப்புரு ஒன்றும் இலாதவணம்
அப்படி யேகரை வாகும்; அதற்கிணை யாகநின் அருள்மழையை
வெப்புறு மாசை விளைநில மாம்மன வெளியினிற் பெய்தருளாய்;
வைப்பெனும் நாத சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (79)

---

73. வக்கணை - முறை

உம்பர்தம் வாழ்வு பழம்படி மீள உவந்தருள் சேவகன்நீ
இம்பர் எனக்குயர் வாழ்வருள் வண்ணம் உனக்கெளி தேயலவோ?
நம்பிய அன்பர் பணிந்த உரும்பையில் நண்ணிய புண்ணியனே,
வம்பலர் தார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (80)

உன்னை மனத்தில் உறப்பெறு வேனெனின் ஊறெது வும்படரா
தென்னை எனக்கருள் செய்திட வேண்டும்; எழிற்கும ரா,குகனே,
பன்னக ஆபர ணர்தரு மைந்த, பவக்கடல் நற்புணையா
மன்னிய பாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (81)

ஊக்க முறத்திரு வுருவம் மனத்தெணி ஓமெனும் அவ்வொளியில்
ஏக்கம் அறத்தனி மேவிஎன் னை அற இன்பம் நுகர்ந்துறவே
ஆக்கம் அளித்தருள்; அற்புத, ஞான அயிற்படை ஏந்துகுகா,
வாக்கருள் தேவ, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (82)

ஊசல் எனத்தடு மாறிய நெஞ்சை உனைத்தினம் நாடியொரு
தேசு படைக்க விளக்கம் உறுத்து திறம்நின் அருட்கரிதோ?
வாசவ ணுர்மகள் குஞ்சரி வள்ளி மணுள, மனக்கினியாய்,
மாசகல் தேவ, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (83)

ஊதையி லேபறந் தோடிய துய்யென உன்னரு ளுக்கெதிரே
வாதனை யாவும் ஒழிந்திடும் என்றொரு வாய்மையை யானறிவேன்;
ஆதலின் உன்னை வணங்கி அருள்பெற ஆசைகொண் டேங்குகிறேன்;
வாதறி யாத சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (84)

ஊமையை யேபொரு மோன நிலைக்குள் உறைந்துள ஞானவிழி
வாம முறத்தனிச் சோதி நடந்தரி சித்து மகிழ்குவனோ?
சாமி எனச்சிவ ஞர்பணி வித்தக, தாமரை யாமடியாய்,
மாமறை நாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (85)

ஊழை ஒதுக்க மருந்திலை என்பர்;அஃ துண்மைஎன் றேசொலினும்
ஆழிய பத்தியி ஞல்அடர் இன்னலின் வலியை அரக்கிடலாம்;
சூழுறும் இச்சை குறத்தி,தெய் வக்கரி கிரியை, எனச்சொலவே
வாழுறு தேவ, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (86)

---

80. உரும்பை - உரும்பராய்.

ஊனறி யாத சுகத்தினி லேமனம் ஒன்றும் இலாதழியத்
தேனறி யாத மதுப்பொழி விற்படு தெய்வ நிலைவருமோ?
நானறி யாத தவத்தினர் உள்ளுற நண்ணிய மெய்ச்சோதி,
வானவர் போற்று சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (87)

எக்கண மாயினும் நின்னினை வின்றி இருந்தறி யேன்; அறிவாய்;
மைக்கரு மேகம் எனும்படி காலன் வரும்பொழு தேர்மயில்மேல்
மிக்கு விரைந்து வெருட்டி அடித்தவன் வீரிட வேல்எறிவாய்;
மக்கள்வந் தேத்து சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (88)

எங்கணும் நீயுறை கின்றனை என்ப தெனக்குணர் வாகவிலை;
பொங்கிய மாமுரு கத்திருக் கோலம்நின் பூரண உருவெனவே
தங்குற நெஞ்சினில் வைத்து வணங்கினன்; தாமரைத் தாளருள்வாய்;
மங்குவ தற்ற சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (89)

எச்சம யத்திலும் அன்பர் பணிந்துரு கியவுள்உன் உருவென்றே
நிச்சய புத்தி படைத்திட வேயருள் நின்தயை ஏதுசொல்வேன்!
கொச்சை மொழிக்குற மாதுன் அருள்பெறக் கூர்மய லாமுருவில்
வச்ச தயாளா, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (90)

எதுபுரி வேனெனி னும்மரு காக இருந்தனை நீயெனவே
மதியினில் எண்ணிஇவ் வாழ்வு கழிக்கும் வணத்தை வழங்கினையே;
இதுதரும் நிற்கெதிர் நன்றி புரிந்திட ஏழை எதைத்தருவேன்?
மதுரவி நோத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (91)

எந்தை இவன், தரும்அன்னை இவள், மனை இவள்என எண்ணுபவர்
முந்தை நிகழ்ந்த பிறப்பினில் இத்தனை பேரெனின் முற்றுறுமோ?
எந்த இடத்தினும் எப்பொழு தும்துணை ஏயும் அனைதந்தைநீ;
மந்தண மான சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (92)

எப்பொழு தில்நம னூர்வரு வார்என யார்அறி வார்? அதனுல்
இப்பொழு தேயுன சேவடி நற்றுணை எய்த அவாவுகிறேன்;
விப்பிரர் மாமறை ஓத மகிழ்ந்து விரைந்தருள் பெய்வதிலே
மைப்புயல் போன்ற சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (93)

---

90. இயவுள் - கடவுள்
92. மந்தணம் - இரகசியம்

எம்முழி அன்பிவன் வைத்தது போல எவர்க்கும் அருள்வதிலாச்
செம்மையன் என்றடி யார்களில் ஒவ்வொரு சீர்மைய ரும்சொலவே
அம்ம தனித்தனி யன்பினை வைத்தனை; அற்புதம் அற்புதமே!
வைம்மலி வேல, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (94)

எழுகதிர் ஆயிரம் என்ன எழில்கொளும் மேனி யினைமனமாம்
விழுமிய கோயிலில் ஏற்றியன் புப்புனல் வீழ்த்தபி டேகித்து
முழுமையு மர்ப்பண மாக்குறு பூசை முடிப்பதெப் போதுசொலாய்;
வழுவறு வேல, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (95)

எள்ளினுள் எண்ணெய் எனும்படி எங்கும் இயைந்த நினக்கெளியேன்
விள்ளுறு கின்ற குறைகள் செவிப்பட மேவிய தில்லைகொலோ?
கள்ளவிர் மாலை புனைந்த குழற்குற வள்ளியைக் காதலுறு
வள்ளல், உதார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (96)

என்று பிறந்தனம் அன்று முதல்மர ணத்தை எதிர்ப்படுநாள்
இன்றென வேஎணி உன்றன் மலர்ப்பத இன்றுணை நாடுவதே
நன்றென நம்பி அடைந்தனன்; என்றனை நழுவ விடேல்;முருகா,
மன்றினன் மைந்த, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (97)

ஏக்கம் அறுத்தவர் ஆக்க முறப்பத ஏணியை யேதழுவி
மோக்கம் எனப்படு மாட மிசைச்செல முந்துவர்; யான்எளியேன்
தாக்கு மயற்கிரை ஆயினன்; நீயருள் தந்து புரந்திடுவாய்;
மாக்கணி நாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (98)

ஏங்கி இளைத்துன தருள்பெறல் இன்றெனின் இன்னுயிர் மாய்த்திடுவேன்,
தாங்கி அணைத்தருள் என்று வெறிப்படு தன்மைகொள் பத்தியிலேன்
நீங்கரு மாயையில் நின்றனன்; நீவலி தாள நினைந்தருள்வாய்;
வாங்கரு தேச, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (99)

ஏசிடி னுந்திரு நாமம் மொழிந்துயர் இன்பம் அடைந்திடுவேன்;
மாசுறி னுந்திரு மேனி நினைந்து மனப்புனி தம்பெறுவேன்;
ஈச, குணகர, தேச, தயாபர, ஏறு மயிற்பரியாய்,
வாசமெய் யாள, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (100)

---

98. மா - மாவடு, மான்.

ஏத்துதல் மெய்புள கம்பெற விம்முதல் யாவும் மறந்துருகித்
தோத்திரம் செய்கையு மோஙழு வப்புலத் தொல்லை தவிர்ந்தருளே
காத்திர மாகும் வரந்தர வேண்டினன்; காதற் குறவள்ளியை
மாத்திரம் வேண்டு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (101)

ஏந்தி எடுத்த அன்னையுடை மாதுயை யார்க்கும் இல்லெனவே
போந்தசொல் ஆய்ந்தனன்; அன்னை மகப்பெறும் போதினில் பாலுணவை
ஈந்திட வேவகை செய்தனை நீயெனின் ஏற்றமுன் னுல்வந்ததே;
மாந்தரை ஆண்ட சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (102)

ஏம நெடுங்கிரி இமயம் எனுங்கிரி ஏரக வெற்பரவ
நாம முறுங்கிரி யாவினு மேலது, நைந்துறும் அன்பர்மன
மாமென அங்கு மகிழ்ந்துறை வாய்எனும் அதிசயம் ஆரறிவார்?
மாமரம் மாய்த்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (103)

ஏயெனு முன்வர நீமயில் வாகனம் ஏறி உலாவுகிறுய்;
நீயருள் செய்ய நினைவுறின் ஏழை நிமைப்பொழு தினிலுய்வேன்;
தாயனை யாயுனை யன்றி எனக்கொரு சார்பினி வேறுளரோ?
மாய விநோத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (104)

ஏறு நடைபட ஏகி யவர்பிணி எய்தி இடர்ப்படவும்
வீறிய செல்வர் தரித்திர ராகி விளம்பரு துன்புறவும்
கூறிய நூலுணர் பண்டிதர் பித்தனை கோலமும் எய்துவரால்;
மாறில ஞன சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (105)

ஏனம் அறிந்தில தன்னம் உணர்ந்தில தென்நெறி ஆயபிரான்
கூனி வணங்கிய ஞான குருக்கள், குமார குகப்பெருமான்;
யானவ னைப்பணி மெய்யடி யான்என ஏக்கழுத் தம்பெறுவேன்;
வானம் அளாவு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (106)

ஐங்கரன் தம்பி எனும்படி நின்றனை; அம்மையின் மடிமேலே
தங்கு குழந்தை எனும்வணம் கொண்டனை; தந்தையை நன்குபணி
துங்கன் எனும்புகழ் கொண்டனை; ஆயினும் தோற்றம் உயர்ந்தனைநீ;
மங்கல வாண, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (107)

ஐந்து முகம்பெறு பரசிவ மேமுனம் ஆறு முகங்கொண்டு
முந்தும் அருள்மழை பின்னும் மலிந்துற மூர்த்தி கரித்தனன்என்
றந்தமெய் தேர்ந்தனன்; ஆதலின் உன்னை அடைந்து வணங்கினனுல்;
மைந்த, குமார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (108)

ஐம்பொறி யாலலை யுண்ட மனத்தை அடக்குவ தற்குவழி
நம்பிநின் சேவடி மற்றதன் மேற்பட நாட்டலென் றேதெளிந்தேன்;
கம்ப மதக்களி யானையும் மஞ்ஞையும் ஊர்ந்தருள் கந்த,குகா,
வம்புறு தார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (109)

ஐயம் இலாது தெளிந்தமெய்ஞ் ஞானநல் அனுபவம் வந்தடியேன்
உய்ய நினைத்தருள் வாயெனின் ஓர்கணம் உன்னிலொன் றுய்விடுவேன்;
*மையணி கண்ணி குறத்தி தினைக்கு மயங்கிய மணவாளா,*
வையம் அளித்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (110)

ஐவழி யாஉயிர் சோர யமன்தமர் ஆவி கொளப்பட
மெய்ப்பிண மாகுமுன் நின்னுருக் காட்சியை வேண்டுகின்றேன்; குமரா,
பொய்வழி நீத்த தபோதனர் போற்றிய புண்ணிய, கண்ணியனே,
மைவழி போக்கு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (111)

ஒட்டிய பத்தினி உடல்பிண மாக உணர்ந்து வெருண்டிடுவாள்;
கிட்டிய மைந்தர் தழற்கொளு விப்பினர் கேண்மை மறந்திடுவார்;
நட்டவிவ் வாழ்வினில் ஆருற வாவர்? நயந்தருள் நினையன்றி
மட்டவிழ் தார, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (112)

ஒருமை மனத்தினில் உருவம் நினைத்துல குறுநினை வற்றுனையே
தெருள வணங்கியுன் னுட்கரை வாகு திறந்தர வேண்டுவன்யான்;
மருளறு மாதவர் யோகியர் சித்தர் வணங்கு குணக்கடலே,
மருவுறு நீப, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (113)

ஒழிவில் ஒடுக்க முறுந்தவம் மேவுறும் உள்ளம் எனக்கிலைகாண்;
அழிவில தாகிய நின்னெழில் மேனி அகக்கணி லேகண்டு
பிழிய *வழிந்திழி கண்புனல்* சோர்தரு பெற்றியை ஈந்தருள்வாய்;
வழியுரை தேவ, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (114)

ஒன்றுமெய் யான பரம்பொருள்; நீஅது; உருவம் எனைப்பலவாய்
நின்றது பற்பல வான மனத்தியல் நேர்படு மாறலவோ?
குன்றம் அனைத்துநின் கோயில் எனக்கொள் குமார, குகப்பெருமான்,
வன்றிறல் வேல, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (115)

---

*111.* ஐ ॰ கபம்.

ஓணத் திருவினன் நான்முகன் ருத்திரன் உற்ற மகேசனொடு
காணற் கரிய சதாசிவன் என்றுரை கடவுளர் யாவரும்நீ;
மாணத் தொழுதுனை ஏத்திடின் அத்தனை வானவ ருங்களிப்பார்;
வாணிக் கருள்செய் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (116)

ஓதலும் ஈதலும் காதலும் மேவிய உத்தமர் பக்கலிலே
நீதயை யோடு புரந்திட நின்றனை; நேயம் இலாதஎனை
யாதென எண்ணுவை? என்னினும் உன்மகன் ஏழை இவற்கருளாய்;
மாதுயர் போக்கு சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (117)

ஓவிய மேளன மேவிய யோகியர் உள்ளுறு சோதியுரு
நாவியல் நாமம் நவின்று நெகிழ்ந்தவர் நன்கு தெளிந்தறிவார்
ஆவ தறிந்தனன்; அன்பினில் என்னை இழந்தயர் வாகஅருள்;
மாவளி நாத, சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (118)

ஔவியம் இன்றி அடங்கி யவிந்த அரும்பொறி யாளரையே
செவ்வி தெரிந்து வணங்கி அடைந்து திகழ்தர நீயருள்வாய்;
கொவ்வை யிதழ்க்குற மாதினை வேடுவர் குலம்அறி யாதபடி
வவ்வி அணைந்த சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (119)

ஔவை அகந்தை அடங்குற ஆய்க்குல அண்ண லெனுவந்தாய்;
பவ்வ மெனுங்கலை கற்றும் அகந்தை பரிப்பவர் பாவியரே;
எவ்வழி யேனும் அகந்தை பெருதுயர் இயல்பெனை மேவஅருள்;
வவ்வும் எழில்கொள் சிதம்பர சுப்பிர மண்ணிய நாயகனே! (120)

**16 - 1 - 65.**

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்

# சேவடி மாலை

(கட்டளைக் கலித்துறை)

செந்தா மரையொரு நூறு யிரம்பொய்கை சேர்ந்தலர்ந்து
வந்தா லெனஎழில் வாய்ப்பன, வானவர் மண்ணவர்தம்
சந்தாபம் தீர்ப்பன, ஈழத் துரும்பராய் சாரும்அருள்
சிந்தாச் சிதம்பர சுப்பிர மண்ணியன் சேவடியே. (1)

ஆதவர் கோடி விசும்பில் விளங்கி யடர்ந்துசுடர்
காதிய வெப்பமில் லாமல் ஒளிர்ந்து கவினுதல்போல்
சீதள சோதி படர்வன, வள்ளிச் சிறுகுறத்தி
நாதன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்கழலே. (2)

மைவந்த ஒண்கண் மலைமகள் மென்மடி வைத்தன்பொடு
தைவந் துவப்பன, பாம்பணி சேவகன் சார்ந்துகந்து
செய்வந் தனைகொண் டவன்தோள் இருப்பன, தெய்வங்களின்
தெய்வம் சிதம்பர சுப்பிர மண்ணியன் சேவடியே. (3)

எவ்வத் திரையில் அலையாமல் காம எறிசுறவாற்
கவ்வப் படாமல் சினக்குழி ஆழாமல் காண்பிறவிப்
பவ்வத்தை ஏறக் கடக்கும் புணையெனும் பண்பின,என்
தெய்வம் சிதம்பர சுப்பிர மண்ணியன் சிற்றடியே. (4)

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக் குஞ்சுத்த ஞானமெனும்
தண்டையம் புண்டரி கங்களென் றேகவி சாற்றிமுனம்
மண்டருள் கொண்ட அருண கிரிநாதன் வாழ்த்துவன,
அண்டன் சிதம்பர சுப்பிர மண்ணியன் அங்கழலே. (5)

கீரன் சொலுமுரு காற்றுப் படையிற் கெழுமிநின்று
சேரன்பின் அன்னோ னெடுபல் புலவர் சிறைவிடுத்துக்
கூரயி லாற்பூதம் மாயக் குதிப்பன, கூறிணையில்
தீரன் சிதம்பர சுப்பிர மண்ணியன் தெள்ளடியே. (6)

குமர குருபரன் மூங்கையாய் நின்ற குறைதவிர
அமரர் பரவும் உருக்காட்டி யன்னோன் அகமுருகிப்
பமரம் படுதேன் எனக்கவி சொல்லப் பரிந்தன,வேற்
குமரன் சிதம்பர சுப்பிர மண்ணியக் கோனடியே. (7)

ஔவை தருக்கை அடக்கக் கடத்தினில் ஆயனெனத்
தவ்விப் புகுந்து கரியநா வற்கனி தாமுதிரச்
செவ்வி உறஅம் மரமே றின,சூர்த் திறல்கெடுக்கும்
தெவ்வன் சிதம்பர சுப்பிர மண்ணியத் தேவடியே. (8)

மயில்மேல் படாத்தினைப் போர்த்துப் புகழ்கொள் மகிபதியாம்
செயிரேதும் இல்லாத ஆவியர் கோன்பேகன் செய்பணியை
அயிராது கொண்டு பொதினி எனும்பதி ஆர்ந்தன,கூர்
அயிலோன் சிதம்பர சுப்பிர மண்ணியன் அம்பதமே. (9)

நல்லந் துவனுர் பரங்குன்றம் ஏத்தி நவின்றசுவைச்
சொல்லும் பொருளும் செறிபரி பாடலில் தோன்றுவன
நெல்லும் கரும்பும் பொலியும் உரும்பராய் நின்றருள
வல்லன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வார்கழலே. (10)

பெருந்தேவ னென்னும் பெயர்க்கவி ஞன்தேன் பிலிற்றுகவி
விருந்தே புரையும் குறுந்தொகை நூன்முன் விழைந்துசொல
வருந்தா மரைபுரை யும்மெனும் நற்புகழ் வாய்ந்தன,எம்
அருந்தேன் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஆய்கழலே. (11)

பொய்யா மொழியாம் புலவன் தருக்கினைப் போக்குதற்குப்
பெய்யாத பாலைத் தனிவழி யேமுட்டைப் பேரினொடும்
நையாமற் சென்று நடந்தன, மேனி நனிமிகவும்
செய்யான் சிதம்பர சுப்பிர மண்ணியன் சீர்ப்பதமே. (12)

கற்பகம் போக அமுதவாழ் வேகக் கதிர்மணியும்
பொற்பறத் தேனு நலங்கெடத் தேவர் புலம்புகையில்
அற்பர்க ளாமவு ணப்பகை சீத்தே அருளுவன,
வெற்பன் சிதம்பர சுப்பிர மண்ணிய வேளடியே. (13)

தெள்ளித் தருதினை மாவும் மதுவும் சிறந்தருத்தும்
வள்ளிக் குறத்தி தனைத்தேடி அன்று வனத்தினிற்கூர்
முள்ளும் பரலும் உறுத்தத் திரிந்தன, முன்னமறி
வள்ளல் சிதம்பர சுப்பிர மண்ணியன் வான்பதமே. (14)

தேவர்கள் உண்ணமு தத்திற் சிறந்த திருப்புகழை
மாவரு விப்புன லாச்சொல் அருணை வளர்முனிவன்
பாவடி யேட்டிற் படுவன, மாமறை பாடும்அருள்
தேவன் சிதம்பர சுப்பிர மண்ணியன் செங்கழலே. (15)

ஞானத் திருவுரு ஆகி அவிச்சை நவிர்கெடவே
சானத்தில் நிற்பவர் நெஞ்சில் விளக்காய்ச் சவிவழங்கி
ஈனத்தைத் தேய்ப்பன, ஈழத் துரும்பராய் எய்துமமு
தான சிதம்பர சுப்பிர மண்ணியன் ஆர்கழலே. (16)

தாமே அவிர்அன்பின் நல்லுரு வாகித் தகையளித்துத்
தாமே உயர்ஞானப் பேருரு வாகத் தயங்கின,பின்
தாமே பரமுத்தி என்னத் தழைப்பன, தஞ்சமென
யாமேய் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஈர்ம்பதமே. (17)

செம்பவ ளத்தின் துணிபோல் விரலின, சேர்பிறையின்
பம்பும் எழில்கவர் எரார் நகத்தின, பாய்கமடத்
தும்பர் முதுகின் எழில்சார் புறத்தின, ஓங்குரும்பை
நம்பன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நல்லடியே. (18)

செல்வம் தருவன, போகம் அளிப்பன, சீர்பரவும்
கல்வி கொடுப்பன, வீரம் வழங்குவ, காய்பகையை
வெல்லும் திறலினை ஈவன, வேலவன் வித்தையெலாம்
வல்லன் சிதம்பர சுப்பிர மண்ணியன் மாண்கழலே. (19)

சித்தி தருவன, சத்தி அளிப்பன, செம்பதமாம்
முத்தி அருள்வன, புத்தி கொடுப்பன, மூண்டபல
பத்தி சிறந்தவர் சேரும் உரும்பராய்ப் பண்ணவனும்
சித்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் செம்பதமே. (20)

---

*14.* முன்னம் - குறிப்பு.

*16.* *நவிர் - குளிர்; சானம் - தியானம்.*

இம்மையில் வாழ்வு நிரம்பத் தருவன, இம்மையின்பின்
அம்மை அமரர் அமுதவாழ் வின்பம் அருளுவன,
செம்மை உறும்பத மாகிய முத்தியும் சேர்த்துவன,
நம்ஐ சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்கழலே. (21)

ஆசு மதுரம்வித் தாரம்நற் சித்திர மாங்கவிகள்
பேசுதல் போல விரைவில் வரவருள் பெய்குவன,
மீசுர மான தருக்கத் திறன்தந்து மேவுவன,
ஈசன் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஏணடியே. (22)

தத்துவம் யாவும் கடந்துமுப் பாழும் தணந்திரண்டாம்
அத்திறம் இன்றி மிசையே இவர்ந்துபின் ஆர்ந்தபர
முத்தியில் ஏறுதற் கேணியாய் நிற்பன, மூத்தலிலாச்
சத்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் தண்கழலே. (23)

பாச வெயிலற வீசும் மழையெனப் பந்தமெனும்
கூசுங் குளிரற மேவுந் தழலெனக் கூரவிச்சை
மாசு கழுவுறப் பாயும் புனலென வாழுவன,
தேசன் சிதம்பர சுப்பிர மண்ணியன் தேனடியே. (24)

முப்பத்து முக்கோடி தேவர் வணங்கும் முடிக்கதிரின்
வெப்பத்திற் கன்றி அழகு படைப்பன, வேதமிசை
செப்பத் திகழ்வன, ஈழத் துரும்பராய்ச் சீர்த்தலத்தில்
அப்பன் சிதம்பர சுப்பிர மண்ணியன் அம்பதமே. (25)

வள்ளி திருக்கை வருடச் சிவப்பன, வாரணத்தின்
ஒள்ளிழை செங்கரம் மேவக் குளிர்வன, உத்தமர்தம்
உள்ளத் திருந்து நடிப்பன, என்றும் ஒழிவில்அருள்
வெள்ளன் சிதம்பர சுப்பிர மண்ணிய வேளடியே. (26)

ஓங்கார மேயுரு ஆகிய மாமயில் ஊர்ந்துவரு
பாங்கார் வன,சுடர் வெள்ளத் திடையே படர்ந்தடியார்
தேங்கார்வத் தோடு தெரிசிக்க நிற்பன, சீரிளமை
நீங்காச் சிதம்பர சுப்பிர மண்ணியன் நீள்கழலே. (27)

---

21. ஐ - தலைவன்.

நாதத் தனியுரு வாகிய சேவல் நயங்கொழிக்க
ஓதும் குரலினைக் கொக்கறு கோவெனும் ஒண்தொடரைக்
காத லொடுதுளிர்ந் தேற்கும்அன் பர்தம் கருத்தன,எம்
நாதன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்கழலே. (28)

தாமரை போலச் சிறந்தெளி வந்து தயங்கடியார்
பூமழை பெய்யப் பொலிந்து விளங்கின, போற்றிநிற்கும்
மாமறை யாம்இன்னும் கண்டறி யோமென வாழ்த்துவன,
வாமன் சிதம்பர சுப்பிர மண்ணியன் மாண்கழலே. (29)

வேத முதலாம் பிரணவ மாகி விளங்குவன,
வேதக் கிளையாம் பரப்பிற் கரந்து மிளிருவன,
வேதச் சிரமாம் உபநிட தத்து மிசையவிர்வ,
வேதன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வெல்கழலே. (30)

வித்தாய் முளைத்து, முளையாய் நிமிர்வன, வேர்கொளுவிச்
சத்தார் மரமாய் வளர்வன, தண்டழை தாமெனவாய்த்
தொத்தாய் மலராய்க் கனியாய்த் திகழ்வன, சூழொளிசேர்
முத்தாம் சிதம்பர சுப்பிர மண்ணியன் மொய்கழலே. (31)

தேனாய் இனிப்பன, பாலாய்ச் சுவைப்பன, தேங்கமுதந்
தானாய் மரணந் தவிர்ப்பன, அன்பர் தனிவிருந்தாய்
ஊனே கெடுப்பன, ஈழத் துரும்பராய் உற்றெளிர்எம்
மானும் சிதம்பர சுப்பிர மண்ணியன் மாண்பதமே. (32)

இந்திர னார்பதம் ஈவன, நான்முகன் என்பவன்றன்
சந்த முறும்பத முந்தந்து மேவின, சார்திருமால்
சொந்த நிலையும் தருவன, அச்சிவச் சோதியெனும்
மைந்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வார்கழலே, (33)

நோயை அறுப்பன, செல்லல் தவிர்ப்பன, நூறுபகை
தேய அருள்வன, அறியாமை நீக்கித் தெளிவருள்வ,
ஏயும் கவலை ஒழிப்பன, வள்ளி யெனும்குறத்தி
நேயன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நீள்கழலே. (34)

கோணல் நிமிர்ப்பன, குற்றம் அறுத்துக் குணங்களெலாம்
மாணத் தருவன, சீரும் செழிப்பும் வழங்குவன,
பேணத் தகும்பல நல்வளம் ஈவன, பீடுரும்பை
வானன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வாழடியே, (35)

பற்றை ஒழிப்பன, பந்தம் அழிப்பன, பாழ்நரகச்
சுற்றை ஒளிப்பன, சோர்வு கெடுப்பன, சோம்பலெனும்
புற்றை இடிப்பன, ஈழத் துரும்பராய்ப் பூம்பதியிற்
பற்றன் சிதம்பர சுப்பிர மண்ணியன் பைங்கழலே. (36)

மந்தம் இலாமதி அன்பர் மனமெனும் மாண்குளத்தில்
கந்தம் எனுமெய் யுணர்வு பரம்பக் கதிப்பன,வேற்
கந்தன் முருகன் கடம்பன் உரும்பராய்க் காவலனும்
மைந்தன் சிதம்பர சுப்பிர மண்ணிய மன்னடியே. (37)

ஆதாரம் ஆறிலும் அங்கங்கே நின்றன்பர் ஆற்றுதவம்
சேதாரம் இன்றிச் சிறக்கத் திகழ்வன, சேருநிலை
*மீதான ஆயிர மாவிதழ்த் தாமரை யாருவன,*
தீதோய் சிதம்பர சுப்பிர மண்ணியன் சேவடியே. (38)

வாசியோ கஞ்செய்யும் யோகியர் குண்டலி மாவரவைக்
கூசிய போதினில் முன்னே நடந்து குரைகழலின்
ஓசையைக் காட்டி வழிகாட்டி நிற்பன, உத்தமர்சீர்
பேசும் சிதம்பர சுப்பிர மண்ணியன் பீடடியே. (39)

பத்தியி னுலுரு கிப்பணிந் தேத்திப் பலதுதிகள்
நத்திப் புகழ்ந்து புளகேறிக் கண்கள் நனைந்தருவி
ஒத்துப் பொழியும் புனலினில் ஆடி உவப்பன,எம்
அத்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஆளடியே. (40)

கல்லுங் தியஅரு விப்புனல் தேடிக் கடும்புனத்தில்
செல்லுங் தகையன, *சேரலர் யாரும் சிதைந்தழியக்*
கொல்லுந் திறலின, ஈழத் துரும்பராய்க் கோயில்நிற்கும்
நல்லன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நல்லடியே. (41)

இச்சை அறுப்பன, அச்சம் தவிர்ப்பன, ஏழைமையின்
கொச்சை அழிப்பன, கோபம் தொலைப்பன, கூர்பவமாம்
அச்சை அறுப்பன, ஈழத் துரும்பராய் அண்ணல்எங்கள்
அச்சன் சிதம்பர சுப்பிர மண்ணியன் அங்கழலே. (42)

காமப் பயிர்முளை யோடழி யக்கதிர் காலுவன,
தீமைச் சினத்தீ யழியப் புனலைச் சிதறுவன,
ஏமம் அறுக்கும் உலோபக் கழுதை எரிப்பன,பன்
னுமன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்பதமே. (43)

சொல்லற் கரிய பொருளாய் ஒளிர்வன, சொற்கடந்த
எல்லைக்குட் செல்ல விடுப்பன, எல்லை இலாதநலம்
புல்லத் தருவன, ஈழத் துரும்பராய்ப் பூம்பதியில்
வில்லன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வெல்பதமே. (44)

பரங்குன்றில் ஆர்வன, செந்திற் றிகழ்ந்து பழனியிலே
உரங்கொண்டு மேவின, ஏரகம் ஏய்வன, ஓங்கலெலாம்
வரந்தர ஆடின, சோலை மலையில் மணந்தன,நம்
பரன்சேய் சிதம்பர சுப்பிர மண்ணியன் பாவடியே. (45)

குறிஞ்சி மதுவால் குறவர் முழுக்கக் குளிருவன,
குறிஞ்சி மலரால் அருச்சனை செய்யக் குலவுவன,
குறிஞ்சித் திணையெலாம் ஆடித் திளைப்பன, கோதையெலாம்
உறிஞ்சும் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஒள்ளடியே. (46)

பத்தர்பால் பெய்வன, கங்கைநீர் ஆடிப்பஞ் சாமுதத்தின்
தித்திப்பில் ஆழ்வன, தேனிற் குளிப்பன, சீர்த்தபன்னீர்
தத்தித் திளைப்பன, ஈழத் துரும்பராய்த் தண்பதியில்
வித்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வீறடியே. (47)

குராமலர் வேய்வன, வெட்சி புனைவன, கோகனதப்
பராமலர் தாழ்வன, நீபத்தண் பூவிற் படிவன,பூண்
அராவுடை யான்தரு மைந்தன் குமாரன் அமுதனைய
பிரான்எம் சிதம்பர சுப்பிர மண்ணியன் பெய்கழலே. (48)

பொன்னிற் பொலிவன, முத்திற் சிறப்பன, பூணுமணி
தன்னிற் றிகழ்வன, துப்பினை ஒப்பன, சால்வயிரம்
என்னும் திருவின, ஈழத் துரும்பராய் ஏறிவளர்
மன்னன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வான்பதமே. (49)

ஆயிரம் ஆயிரம் மாமலர் தூவி அருச்சனைசெய்
தேஇரங் காய்என அன்பர்கள் ஏத்த இனிதலர்ந்து
தூயன யாவும் தருந்திறல் பெற்றன சுந்தரன்செவ்
வாயன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வார்கழலே. (50)

---

*44. வில்லன் - விற்படை ஏந்தியவன்.*

நான்முகன் ஏத்திப் பணிவன, இந்திரன் நாடுவன,
மான்மலி அன்பொடு தோயத் திகழ்வன, மன்னுமரன்
தான்குரு வென்று பணிந்து தொழுவன, தண்ணருளெம்
மான்அம் சிதம்பர சுப்பிர மண்ணியன் வார்கழலே. (51)

வாக்கும் மனமும் கழிய நிலவும் வளத்தன,தேன்
தேக்கும் அருள்பொழிந் தானந்தம் அன்பர் திளைக்கவளித்
தாக்கும் சிறப்பின, ஈழத் துரும்பராய் ஆர்ந்தஅருள்
நோக்கன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நோன்கழலே (52)

காணத் தகுவன, கண்டுகண் டுள்ளக் கடிமலரிற்
பூணத் தகுவன, பூண்டு நினைந்து பொருமியழு
தேனுற்ற இன்பம் நுகரத் தருவன, ஏர்க்குமதன்
நாணும் சிதம்பர சுப்பிர மண்ணியன் நம்படியே. (53)

ஓதா துணரும் உணர்வை அளிப்பன, ஓதுபவர்க்
கீதாம் பொருளென் றெளிதில் தெளிய இசைப்பன,வெஞ்
சூதான வெல்லாம் துணிய அருள்வன, சுந்தரச்செம்
போதாம் சிதம்பர சுப்பிர மண்ணியன் பொன்னடியே. (54)

மந்திரம் ஆவன, யந்திரம் ஆவன, மாமறைநற்
றந்திரம் ஆவன, சாத்திரம் ஆவன, தாங்கறிவின்
சுந்தரம் ஆவன, ஈழத் துரும்பராய்த் தொல்பதிசேர்
கந்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் கான்மலரே. (55)

சிலம்பொலி காட்டித் திகழ்வன, தண்டை சிலம்புவன,
பொலம்பொலி வெண்டயம் சார்வன, காலாழி பூணுவன,
இலம்படல் இன்றி யடியாரைக் காக்கும் இசையுடையான்
சிலம்பன் சிதம்பர சுப்பிர மண்ணியன் சீரடியே. (56)

ஒளிவெள்ளம் காட்டி ஒளிர்வன, இன்னிய ஓசையெலாம்
தெளிவண்ணம் கூட்டிச் சிறப்பன, மோனத்தின் சேக்கையினில்
வெளிவண்ண மாகி மிளிர்வன, தன்னுடை மெய்யன்பர்கட்
கெளியன் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஈர்ம்பதமே. (57)

மருந்தாய் மணியாகி மந்திர மாகி வருந்துமவர்
விருந்தாய் அமுதாய் விளைமது வாகி மிளிர்குவன,
பொருந்தா அசுரர் குலத்தைக் கெடுத்துப் பொரும்நமனுய்
இருந்தான் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஏரடியே. (58)

கரும்பாய் இனித்துக் கனியும்அன் பர்க்குக் கனிச்சுவையாய்
அரும்பாகு போலின் றல்லாத பேர்கட் கடர்வன்புசெய்
இரும்பாய் இறுகிச் சிறப்பன, தன்னடி யார்இனைய
விரும்பான் சிதம்பர சுப்பிர மண்ணியன் வீறடியே. (59)

துரும்பை மலையாய்ப் பருக்கப் புரிவன, தோன்றுமலை
துரும்பென் றிளைக்கச் சுருக்கும் திறத்தின, சோதியொளி
அரும்பித் திகழ்வன, ஈழத் துரும்பரா யாம்பதியை
விரும்பும் சிதம்பர சுப்பிர மண்ணியன் வெல்பதமே. (60)

நல்லவர் பொல்லா தவர்க்கு நடுவாய் நடப்பன,மெய்
வல்லவர் மெல்லியர் யாரும் தொழஅருள் மாட்டுவன,
தொல்லை யமரர் தம்வாழ்வு சேரத் துணிந்தருள
வல்லன் சிதம்பர சுப்பிர மண்ணியன் மாவடியே. (61)

பாழும் மனத்தை நிறுத்தப் பயிலும் பரிவினர்க்குக்
காழொன் றியதூண் எனவே மடுத்தன்பிற் கட்டுவன,
வாழும் படிக்கு வகையை வகுப்பன, வள்ளியணை
தோழன் சிதம்பர சுப்பிர மண்ணியன் தூவடியே. (62)

நூல்பல கற்றும் அறியாத் தெளிவினை நுண்மைபெறச்
சால்புறக் காட்டும் திறத்தின, ஞானத் தனிப்பதமாய்
நால்வன, நான்மறை மீதில் நடம்பயில் நாட்டத்தன,
சீலன் சிதம்பர சுப்பிர மண்ணியன் சேவடியே. (63)

ஆயிரம் ஆயிர மாவுருத் தாங்கி அனைத்துலகும்
தோய ஒளிர்வன, எல்லாப் பதமும் தொலைந்தபின்னும்
சேயொளி வீசிச் சிறப்பன, தந்தை செறியும்அன்புத்
தாய்எம் சிதம்பர சுப்பிர மண்ணியன் தாண்மலரே. (64)

பண்பகம் மேவிப் பலபடி பாடிப் பணிந்துருகிக்
கண்பெற நல்லெழில் கண்டு மகிழ்ந்து கசிந்தஅன்பர்
செண்பக மாலை புனையச் சிறப்பன, தேவர்கரி
நண்பன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்கழலே. (65)

திடம்பட நெஞ்சை நிறுத்தி உனையன்றித் தேடலின்றி
இடம்படக் கோயில்கள் ஏறிப் பணிந்துபின் ஏர்மணஞ்சார்
கடம்பணிந் தன்பர் மகிழச் சிறப்பன, காட்டினிலே
நடந்த சிதம்பர சுப்பிர மண்ணியன் நம்படியே. (66)

உட்சிதை வின்றி ஒருமித்த நெஞ்சில் உருத்தெரிசித்
துட்கொழிந் தேத்தி உருகிய அன்பர் உரிமையுடன்
வெட்சி மலரிளைச் சாத்த விளங்கின, வேட்டவள்ளி
பட்சன் சிதம்பர சுப்பிர மண்ணியன் பாங்கடியே. (67)

மாமறை ஓதித் திருமஞ் சனமாட்டி மாண்புடனே
தூமடி சாத்தித் திருநாமஞ் சொல்லிச் சுடர்மலராம்
தாமரை யன்பர் புனையத் தளிர்ப்பன, தாங்குபல
நாமன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்பதமே. (68)

உருத்திரஞ் சொல்லிக் குடத்தினிற் பூரித் துறுபுனலைத்
திருத்திபெற் றந்தணர் மஞ்சனம் ஆட்டச் சிறப்பன,என்
கருத்தில் இருந்து பழுதெலாம் போக்கிக் கருணைசெய்யும்
திருத்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் செங்கழலே. (69)

பாயிர நான்மறை யாளர்கள் மந்திரம் பண்ணுடனே
தூயன மேவநன் கோதி மலர்தூய்த் துதிக்கஅவர்க்
காயின செய்வன, ஈழத் துரும்பராய் ஆர்ந்தகுகன்
நாயன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்பதமே. (70)

ஞாலம் அளப்பன, நீரைக் கடப்பன, நாள்முதலாம்
காலம் அளப்பன, காலங் கடந்தன, காசினியைச்
சாலப் பரிப்பன, ஈழத் துரும்பராய் சார்ந்துறையும்
வேலன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வெல்பதமே. (71)

எல்லாப் பொருட்கும் முதலாய் இருப்பன, ஏற்குமுதல்
இல்லா திருப்பன, எல்லாப் பொருட்குமீ ருகிநின்று
சொல்லீ றிலாத படியே திகழ்வன, தொண்டர்கட்கு
நல்லான் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்கழலே. (72)

கதிர்காமக் கோயிலில் ராசிய மாகக் கலந்துநின்று
மதியேறு பற்பல் மதத்தர் பணிய வளருவன,
துதியேறி நிற்பன, ஈழத் துரும்பராய்த் தோன்றுவன,
கதியாம் சிதம்பர சுப்பிர மண்ணியன் காலிணையே. (73)

---

73, ராசியும் - இரகசியம்.

விளம்பழம் உண்ட கரிபோல அன்பர் வினையறுத்துத்
துளங்கிய தம்மில் அடக்கி இரண்டறத் துன்னவைத்துக்
களங்கெட நிற்பன, சூரனை மாய்த்துக் கதிரயிலால்
களங்கொள் சிதம்பர சுப்பிர மண்ணியன் கான்மலரே. (74)

மாமயில் மீதில் இவர்வன, யானையின் மத்தகத்தில்
வாமம் உறத்திகழ்ந் தூர்வன, முன்னர் மகத்துவந்து
தீமை புரிதகர் மேலேறி நிற்பன, செப்பும்இன்ப
நாமன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்கழலே. (75)

வணங்கினர் தங்கள் திறத்தே துணையாய் வளருவன,
குணங்கெட நின்ற குணக்கர் அறியாத கோலத்தன,
மணங்கமழ் சோலை உரும்பராய்க் கோயில் வளரவுளம்
இணங்கும் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஏரடியே. (76)

கொல்லா நலத்தினர்க் குள்ளே திகழ்வன, கூற்றினிற்பொய்
சொல்லாத் திறத்தினர் பேரரண் ஆவன, கூற்றுதைக்கும்
வல்லாண்மை பெற்றன, ஈழத் துரும்பராய் வாழ்முருகன்
நல்லான் சிதம்பர சுப்பிர மண்ணியன் நண்கழலே. (77)

எவ்வுயிர் மாட்டுமெய் அன்புசெய் தின்னற் கிரங்குமனச்
செவ்வி யுடையார்க் கினியன தந்து சிறப்பன,என்
எவ்வம் அறுப்பன, செஞ்சுடர் வேலன் எழிலின்உளம்
கவ்வும் சிதம்பர சுப்பிர மண்ணியன் கான்மலரே. (78)

சீலந் திருந்திய சான்றோர்கள் அன்புறு சிந்தையென்னும்
கோலம் பெறுங்கோயி லுள்ளே மகிழ்ந்து குளிருவன,
ஆலம் குடித்தவன் மைந்தன் மலைமகள் அன்புசெய்யும்
பாலன் சிதம்பர சுப்பிர மண்ணியன் பாதங்களே. (79)

பாவம் அறுப்பன, புண்ணியம் ஈவன, பத்தர்கள்தம்
ஆவல் நிறைப்பன, நற்றவத் தின்பயன் ஆற்றுவன,
தேவர்தம் சேனை பதிஅவர் தெய்வம் திருவுரும்பை
மேவும் சிதம்பர சுப்பிர மண்ணியன் வீறடியே. (80)

---

74. களம் கெட - கள்ளம் கெட,

என்னித யத்தில் எழுந்தரு ளித்துயர் யாவுங்கெட
மன்னி இருப்பன, மாமறை போற்றி வணங்குவன,
துன்னும் இலங்கையிற் சாரும் உரும்பராய் தோன்றுசுக
மன்னன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வான்கழலே. (81)

ஔவியம் தீர்ப்பன, ஔவைக் கருளின், அங்கமலச்
செவ்வி அழிப்பன, செங்கதிர் கூசத் திகழுவன,
பவ்வ மெனும்பிற விக்கரை ஏறப் பணிப்பன,ஏர்
தெவ்வும் சிதம்பர சுப்பிர மண்ணியன் செம்பதமே. (82)

இருவினை யொப்பும் மலபரி பாகமும் ஈந்துபினர்த்
திருவுறு சத்திநி பாதம் தழைக்கும் தெருளருளி
வருமுணர் வேற்றும் திறத்தின, அன்பர்க்கு மாட்சியெலாம்
தருமன் சிதம்பர சுப்பிர மண்ணியன் தாளிணையே. (83)

நோற்பவர் தங்குட்கு நோன்பாய் இருப்பன, நூல்வழியே
பாற்படு வேள்விசெய் வார்க்கந்த வேள்வியாய்ப் பாரிப்பன,
ஏற்பவர் தங்கட் கிடுமீகை யாவன, எங்கள்பவம்
தீர்ப்பன் சிதம்பர சுப்பிர மண்ணியன் செங்கழலே. (84)

சீவன்முத் திப்பேறு பெற்றவர்க் குள்ளே சிறந்துநின்று
மேவுறு வாதனை யாமலம் போக்கி விளங்குவன,
பாவியல் சீர்த்தி படைப்பன, ஆறு பதுமமுகத்
தேவன் சிதம்பர சுப்பிர மண்ணியன் செம்பதமே. (85)

ஞானியர்க் குள்ளேமெய்ஞ் ஞான விளக்காக நண்ணுவன,
மோன முறுஞ்சிவ யோகியர் யோகம் முடித்தருளித்
தேனமு தச்சிவ போகம் பெறும்வணம் சேர்த்துவன,
ஞானன் சிதம்பர சுப்பிர மண்ணியன் நம்படியே. (86)

உயிரினிற் பெண்மைபெற் றுய்யும் பருவமுற் றேங்குமன்பர்
செயிரற நின்று பணியப்பே ரின்பம் தெளிந்துபெற்றே
அயர்வறச் செய்வன, ஈழத் துரும்பராய் ஆர்ந்தகதிர்
அயிலன் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஆர்கழலே. (87)

அன்னம் எனுமன்பர் உள்ளத்துக் கின்பம் அலர்பொய்கையாய்
மன்னிய தொண்டர்க்குப் பேரின்ப ஊற்றாய் மலிகடலாய்த்
துன்னி ஒளிர்வன, ஈழத் துரும்பராய்ச் சோதிஇவன்
என்னும் சிதம்பர சுப்பிர மண்ணியன் ஈர்ங்கழலே. (88)

கால பரிச்சின்னம் தேச பரிச்சின்னம் கான்றுயர்ந்து
ஞாலம் எலாம்நிறைந் தப்பாலும் நின்று நளினமலர்
போலஅன் பர்க்குள்ளே தோன்றிப் பொலிவன, பொன்சுடரும்
வேலன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வெல்கழலே. (89)

படைப்புத் தொழிலைப் புரிவன, பின்நின்று பாலிப்பன,
துடைப்பும் புரிவன, தோன்றுத் திரோபவம் துன்னுவன,
நடைப்படும் அன்பர்க் கருளும் கொடுப்பன, நைந்தவர்நோய்
துடைக்கும் சிதம்பர சுப்பிர மண்ணியன் தூவடியே. (90)

நான்முக னுக்கு நிகராய்ப் படைக்கும் நலம்கொண்டன,
மான்மலி பாலன முஞ்செய்ய வல்லன, மாருத்திரன்
தான்புரி சங்கார மும்புரி சால்பின, தண்ணருளிற்
சான்மன் சிதம்பர சுப்பிர மண்ணியன் தாண்மலரே. (91)

தேனிற் சிவந்து பொலிவன, பாலினிற் சீர்த்தவெண்மை
தானுற் றௌிர்வன, வில்வக் குவையில் தழைபசுமை
மேனத்தி நிற்பன, பொற்பணி யால்மஞ்சட் பூப்புரைவ,
கோன்எம் சிதம்பர சுப்பிர மண்ணியன் கொள்பதமே. (92)

ஆகம மாகியே அண்ணிப் பன,தமி ழாமொழியாய்ப்
பாகி லுறுஞ்சுவை பாரிப் பன,பன் மொழியுமுவந்
தேக மெனக்கொள வைப்பன, ஈழத் திலகுரும்பை
மோகன் சிதம்பர சுப்பிர மண்ணியன் மொய்கழலே. (93)

ஆறெழுத் தாகி அலர்வன, நான்முக னுர்எழுத்தை
நூறி அழியச் செகுப்பன, நூறுபன் னூறுவிதம்
ஏறும் எழிலின, ஈழத் துரும்பராய் ஏந்தல்மணம்
நாறும் சிதம்பர சுப்பிர மண்ணியன் நற்பதமே. (94)

காமன் திறங்கெட ஏறி மிதிப்பன, காலன்வரின்
நாமம் மொழிபவர் முன்னே நடந்தவன் நைந்துவிழச்
சேமம் தருவன, ஈழத் துரும்பைச் சினகரத்து
வாமன் சிதம்பர சுப்பிர மண்ணியன் மாணடியே. (95)

அயிரா வதத்தில் அலர்வன, வெள்ளி யருமலையின்
அயிரா வணத்திலும் ஏறித் திகழ்வன, அஞ்சமனுப்
பெயரேறு வாகனம் ஊர்வன, ஞானப் பெருமுனிவர்
துயர்தீர் சிதம்பர சுப்பிர மண்ணியன் தூவடியே. (96)

நான்என்ற எண்ணம் இறந்தவர் முன்சென்று நண்ணிநனி
ஏனென்று கேட்பன, ஆணவம் நீப்பன, ஏழ்பொழிலும்
வான்உந்த வைப்பன, ஈழத் துரும்பராய் வண்பதியில்
கோன்எம் சிதம்பர சுப்பிர மண்ணியன் கோழடியே. (97)

பத்தர்க்குப் பஞ்சென மென்மைய ஆகிப் பரிந்தருளி
மத்தர்க்குக் கல்லென வன்மைய ஆகி மதிப்பன,அப்
பித்தர்க்குப் பிள்ளை பிரமற்கு மைத்துனன் பேணுமருள்
வித்தன் சிதம்பர சுப்பிர மண்ணிய வேள்பதமே. (98)

ஈரம் படைப்பன அன்பர்க்குச் சூரன் இறந்தொழிய
வீரம் சிறப்பன, தொண்டர்க்கெந் நாளும் வெருவல்அறத்
தீரம் கொடுப்பன, ஈழத் துரும்பராய்ச் சேந்தன்மயில்
வீரன் சிதம்பர சுப்பிர மண்ணியன் வெல்கழலே. (99)

காந்தள் அணிவன, சாந்து திமிர்ந்தன, காசில்அலர்
வேய்ந்து சிறந்தன, தூபம் கெழுமின, மேவுவினக்
கேய்ந்து விளங்கின, பூசையை ஏற்றன, ஏருரும்பைச்
சேந்தன் சிதம்பர சுப்பிர மண்ணியன் சேவடியே. (100)

19 - 1 - 65.

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்

# அபிடேக மாலை

(கொச்சகக் கலிப்பா)

செங்கமலத் தாள்நிலவும் சீரார் உரும்பராய்த்
திங்கள்முகம் ஆறுடைய சிதம்பரசுப் பிரமணியா,
பொங்குமன்பின் நீபோந்த புனிதமுறு வானதியாம்
**கங்கை**நறு நீர்கொணர்ந்தேம்; கவினுறவே ஆடியருள்;
கட்டழுக்கு யாம்நீங்கும் காட்சிதர ஆடியருள். (1)

ஆள்இந் திரியம் அறுத்தவர்கள் தம்மொடுபுத்
தேளிரெலாம் போற்றும் சிதம்பரசுப் பிரமணியா,
தோளுந்திக் கண்ணன் துளைந்த பெருந்தூய
**காளிந்தி** நீரினிலே காதலொடும் ஆடியருள்;
கட்டறுத்து யாமுய்யும் காட்சிதர ஆடியருள். (2)

பந்தமெலாம் போக்குவிழி பன்னிரண்டு கொண்டவனே,
செந்துவர்வாய் வள்ளியணை சிதம்பரசுப் பிரமணியா,
முந்துமயில் ஊர்வாய், முருகனே, பாஞ்சாலச்
**சிந்துநதித்** தூயபுனல் சித்தமுவந் தாடியருள்;
சித்தமலம் யாம்நீங்கச் சீர்பெறவே ஆடியருள், (3)

பரமபவித் திரமான பலநாமம் கொண்டவனே,
சிரமந்தீர்க் குங்குமரா, சிதம்பரசுப் பிரமணியா,
வரமுடைய இமயமலை வாழ்வுடைய பெருநதியாம்
**பிரமபுத்** திரைநீரில் பேணியுவந் தாடியருள்;
பெரும்பவநோய் யாம்தீரப் பெட்புடனே ஆடியருள். (4)

---

2. *காளிந்தி = யமுனை.*

திலகமெனத் தேவரெலாம் தினம்வணங்கும் பரம்பரனே,
செலவுவர வில்லாத சிதம்பரசுப் பிரமணியா,
நலவிமய மாமலையில் நண்ணிவிரைந் தோடிவரும்
**அலகநந்தை** யின்னறுநீர் அன்புடனே ஆடியருள்;
அழகுருவம் யாம்காண ஆதரவோ டாடியருள். (5)

ஒருமதமும் வேறில்லா தொன்றும் அரும்பொருளே,
திருமகள்சே ருரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
குருபரன்என் றேசிவனுர் கூறுமுயர் ஞானமயா,
**நருமதை**யின் பூம்புனலில் நாடியுவந் தாடியருள்;
நன்மையெலாம் யாம்புணர நன்கனமே ஆடியருள். (6)

மங்கைகுற வள்ளி மணந்தணையும் திண்டோளா,
செங்கையயில் வேலோய், சிதம்பரசுப் பிரமணியா,
பொங்குவளக் கருநடத்திற் போந்து வளம்பெருக்கும்
**துங்கை**நறு நீர்கொணர்ந்தேம்; சுந்தரனே, ஆடியருள்;
தூய்மையினை யாம்பெறவே தோற்றமுற ஆடியருள். (7)

எத்திசையும் ஏத்துகின்ற ஏற்றமுள எம்துரையே,
சித்துருவே, முத்தா, சிதம்பரசுப் பிரமணியா,
வித்துரும வாய்வள்ளி வேட்டணைந்த கற்பகமே,
**பத்திரை**மா நதிநீரில் பாங்குடனே ஆடியருள்;
பாவமெலாம் யாம்கழுவிப் பண்புபெற ஆடியருள். (8)

வந்ததுயர் அன்பருக்கு மாற்றி அருள்குமரா,
சிந்தரிய பேரழகா, சிதம்பரசுப் பிரமணியா,
கந்தனெனும் பேராய், கடவுளர்தம் மாமணியே,
**அந்தபதி** நீரில் அளைந்தினிதே ஆடியருள்;
ஆணவம்யாம் நீங்கியுற அன்புடனே ஆடியருள். (9)

தீமதியன் சூரன் செருக்கடக்கி வாழ்வித்த
சேமதுரை சாமீ, சிதம்பரசுப் பிரமணியா,
மாமதிசேர் ஞானியர்கள் வந்துபணி யுங்குருவே,
**கோமதி**யாற் றின்புனலில் கூடிமகிழ்ந் தாடியருள்;
குளிர்ச்சிளங்கள் விழிபெறவே கோலமுடன் ஆடியருள். (10)

---

8. வித்துருமம் - பவளம். 9. தபதி - ஓராறு.

தகாதனசெய் தேஅமரர் தம்வாழ்வைக் குலைத்தஅச்சூர்ச்
செகாமயிலாய்ச் செய்த சிதம்பரசுப் பிரமணியா,
குகா,குமரா, சரவணனே, குறைவில்லா நிறைவுடையாய்,
**மகாநதி**யின் தீம்புனலில் மாண்புறவே ஆடியருள்;
மலமூன்றும் யாமொழிய மனமுவந்தே ஆடியருள். (11)

தீதான சேராத் திருவுளத்தார் போற்றுபரா,
சேதாரம் இல்லாச் சிதம்பரசுப் பிரமணியா,
ஆதார மாறினிலும் ஆறுமுக மாய்நின்ருய்,
**கோதா வரி**நதிநீர் குளிர்ந்தினிதே ஆடியருள்;
கோதெல்லாம் யாம்பாறக் குதுகலித்தே ஆடியருள். (12)

தெருட்டிஎனை உன்பதமே சிந்தைசெயச் செய்தவனே,
திருட்டில்வள்ளி யைக்கொணர்ந்த சிதம்பரசுப் பிரமணியா,
வெருட்டுகின்ற காலனச்சம் மேவாமற் காப்பவனே,
**கிருட்டிணை**மா நதிநீரில் கேழுறவே ஆடியருள்;
கீழ்மையெலாம் யாம்நீங்கக் கிளர்ந்துவந்தே ஆடியருள். (13)

ஆணுருவாய்ப் பெண்ணுருவாய் அலியுருவாய் ஆனவனே,
சேணமரர் போற்றும் சிதம்பரசுப் பிரமணியா,
பூணரிய ஞானவயில் பொற்புடனேந் துங்குமரா,
**சோணையெனும்** ஆற்றுநீர் சுலவியினி தாடியருள்;
தூயவருள் யாமடையத் தோற்றமிக ஆடியருள். (14)

பன்மைதவிர்ந் தொருமைமனப் பாங்குடையார்க் கின்பருள்வாய்,
தென்னிலங்கை யுரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
வன்னமயில் வாகனனே, மாட்சிபெறு காளத்திப்
**பொன்முகலி** நீர்கொணர்ந்தேம்; பொற்புறநீ ஆடியருள்;
புண்ணியம்யாம் மிகப்பெறவே பொங்குபுனல் ஆடியருள். (15)

பூவிரியும் சரவணத்திற் போந்துருவம் கொண்டவனே,
தேவர்பணி உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
மேவரிய திருத்தலங்கள் விளங்குமிரு கரைத்திகழும்
**காவிரி**ப்பூம் புனிதநீர் காதலுடன் ஆடியருள்;
காமமெலாம் யாம்நீங்கக் கனிவுடனே ஆடியருள். (16)

---

*12. சேதாரம் - சேதம்; அழிவு.*

வேலேறு கையாய், விளைவயலி லேவளஞ்சால்
சேலே றுரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
காலாறு தேனுண்ணும் கடம்பமலர் மாலையனே,
**பாலாறு** தருநீரில் பாங்குறவே ஆடியருள்;
பாவமெலாம் எமக்கொழியப் பார்த்தினிதே ஆடியருள். (17)

ஐயை குமரா, அடியோங்கட் காருயிரே,
செய்ய உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
மையமரும் கண்டன் மலிவிளையாட் டயர்மதுரை
**வையைந**தித் தண்ணீரில் மனமுவந்தே ஆடியருள்;
மனங்குளிர்ந்தே யாம்பாட மகிழ்ந்தினிதே ஆடியருள். (18)

சீராறு மாமுகனே, சிந்தா மணியனையாய்,
தேரார் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
காராரும் ஆணவநோய் கழல அருள்பவனே,
**பேராறு** தந்தபுனல் பேணியுவந் தாடியருள்;
பிரமையெலாம் யாம்போக்கப் பெரிதினிதே ஆடியருள். (19)

கருணைமலை ஆனவனே, காண்பரிய பேரழகா,
தெருண்மலிவோர் போற்றும் சிதம்பரசுப் பிரமணியா,
அருமைமலி ஞானவுரு வே,முருகா, ஆறுமுகா,
**பொருநை**நறும் பூம்புனலில் பொலிவுடனே ஆடியருள்;
புன்மையெலாம் யாமொழியப் பொற்புடனே ஆடியருள். (20)

தேன்புரையும் இன்மொழியாள் வள்ளியணை திருத்தோளா,
தேன்மதுவார் பூங்கடம்பா, சிதம்பரசுப் பிரமணியா,
ஆன்பரிவார் கன்றெனவே அன்புசெய்வார்க் கருள்பவனே,
**ஆன்பொருநைத்** தூயபுனல் ஆர்வமுற ஆடியருள்;
ஆணவ அழுக்கடியேம் அகலஇனி தாடியருள். (21)

தீமுகந்து வந்துவளி சேர்த்துப்பின் கங்கைவந்த
தேமுகந்த செல்வா, சிதம்பரசுப் பிரமணியா,
பாமுகந்த சீர்த்தி படைத்த தமிழ்த்தேவே,
**கோமுகி**நீர் பூரித்தேம்; குளிர்ந்துவந்தே ஆடியருள்;
குறைகள்பல வும்கொடியேம் கொல்லஇனி தாடியருள். (22)

---

17. *காலாறு - வண்டு.*

அணிமுத்தே, செம்பொன்னே, அரும்பவள மே,திருவே,
திணிமுத்த மாலைத்தோட் சிதம்பரசுப் பிரமணியா,
பணிமுத்தர் சுந்தரனுர் பண்டுபொன்னைப் போகவிட்ட
**மணிமுத்த** நதிநீரில் வாகுபெற ஆடியருள்;
வறுமைநோய் எமைநீங்க மாண்புடனே ஆடியருள். (23)

கவானிலுமை வைத்துவந்து கன்னத்தில் முத்தமிடும்
சிவானந்தச் செழுந்தேனே, சிதம்பரசுப் பிரமணியா,
பவாம்புதியில் ஆழாதே பார்த்தருளும் பரம்பரனே,
**பவானி**நதித் தண்ணீரில் பான்மைபெற ஆடியருள்;
பண்டைமலம் விண்டொழியப் பாங்குடனே ஆடியருள். (24)

வெய்ய பிறவியினை வீழ்ந்தறமோ தும்பெருமான்,
செய்ய உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
பெய்யுமழை போற்கருணை ஈகின்றுய், பேரூரில்
**நொய்யல்**எனும் காஞ்சிநதி நுண்புனலில் ஆடியருள்;
நோன்புபல யாம்இரப்பும் நோன்மைபெற ஆடியருள். (25)

உம்பரெலாம் வாழ்வுபெற ஒள்ளயில்வேல் விடுத்தவனே,
செம்புனலார் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
அம்பிகையன் றிலிங்கவுரு ஆக்கிப் பணியவரு
**கம்பை**நதி நறும்புனலிற் களிப்புடனே ஆடியருள்;
காண்பரிய காட்சியடி யேம்காண ஆடியருள். (26)

பாவநதி வற்றப் பணித்தருளும் செங்கதிரே,
தேவர்பணி உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
சேவுடையார் ஞானமொழி கேட்டுவந்த சீர்க்குருவே,
**கூவநதி** யின்புனித நீரிற் குளித்தருளே;
குற்றமெலாம் அற்றொழியக் கூடிக் குளித்தருளே. (27)

பாயாறு போலப் பரவுகரு ணகரனே,
சேயாய், உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
மாயா மலமகற்றி வாழ்விக்கும் தேசிகனே,
**சேயாறு** வந்தபுனல் சேர்ந்தினிதே ஆடியருள்;
தெய்வநலம் யாம்பெறவே சிந்தையுவந் தாடியருள். (28)

பாஞறு வாயாய், பரமசிவ ஞர்குருவே,
தேஞறு தாள்மலராய், சிதம்பரசுப் பிரமணியா,
யாஞறு தல்பெறவே என்துயரைத் தீர்ப்பவனே,
**தேஞறு** தந்தநறும் தெண்ணீரில் ஆடியருள்;
செம்மைமனம் யாம்பெறவே சிந்தையுவந் தாடியருள். (29)

பொய்யாறு சிந்தையர்தம் புந்திஒளிர் மணிவிளக்கே,
செய்யார் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
ஐயா, அமுதே, அரும்பொருளே, பொன்மணியே,
**நெய்யாறு** தந்தபுனல் நீஉவந்தே ஆடியருள்;
நேயமுன்பால் யாம்கூட நீர்மையுடன் ஆடியருள். (30)

நோயாறி உள்ளம் நுழைஞானம் உள்ளணையச்
சேயாய் அருள்வாய், சிதம்பரசுப் பிரமணியா,
காயாம லேகனிந்த கற்பகமே, அற்புதமே,
**மோயாறு** பாய்புனலில் மூழ்கியினி தாடியருள்;
மும்மலமும் யாம்ஒழிய முன்னிநனி ஆடியருள். (31)

இடபமதை ஊர்ந்துவரும் எம்மான் தருமுத்தே,
திடமுடையார் போற்றும் சிதம்பரசுப் பிரமணியா,
கடம்வருமா முனிபரவக் கனிதமிழைக் கற்பித்தாய்,
**குடவனுற்** றின்புனித நீரிற் குடைந்தருளே;
கூடலமலம் யாமறவே குளிர்ந்து குடைந்தருளே. (32)

எந்தாய், அனையே, எளிவந்த தேசிகனே,
சிந்தா மணியே, சிதம்பரசுப் பிரமணியா,
மந்தா கினியாள் மடிவந்த வரோதயனே,
**குந்தா** எனுமாற்றுக் குளிர்நீரில் ஆடியருள்;
குணம்பலவும் யாம்கூடக் கொழித்தினிதே ஆடியருள். (33)

படையாற் பொலிகரத்தோய், பண்டமரர் வாழ்வளித்த
திடவேற் குமரா, சிதம்பரசுப் பிரமணியா,
மடவேற் கருளி மதியளித்த மாமணியே,
**அடையாற்** றினியநீர் ஆடி மகிழ்ந்தருளே;
அருளேற்று யாம்வாழ ஆடி மகிழ்ந்தருளே. (34)

---

32. *கடம்வருமாமுனி - அகத்தியர்.*

அடியிதுவென் றேயறியா தான்மாவைப் பிணிக்கின்ற
செடிமலம்நீக் கும்குமரா, சிதம்பரசுப் பிரமணியா,
கடிமலர்நீ பத்தாராய், கந்தா, களிமயிலாய்,
**கெடிலநதி** நீரினிலே கேழுறவே ஆடியருள்;
கேண்மையுடன் யாம்பாடக் கேடறவே ஆடியருள். (35)

கண்ணு றிரண்டுடைய கற்பகமே, குன்றமெனத்
திண்ணுருந் தோளாய், சிதம்பரசுப் பிரமணியா,
பண்ணுர் திருப்புகழைப் பாங்குடனு வந்தவனே,
**வெண்ணுறு** தந்தபுனல் விரும்பியினி தாடியருள்;
வேதனைகள் யாம்தீர வேண்டிநனி ஆடியருள். (36)

கட்டாணி முத்தே, கருவிழியின் நன்மணியே,
தெட்டாத அன்புச் சிதம்பரசுப் பிரமணியா,
எட்டாக் கனியே, எனக்கெளிவந் தருள்குகனே,
**வெட்டாறு** பாய்ந்தபுனல் வேட்டினிதே ஆடியருள்;
வெவ்வினைகள் யாமகல விரும்பியுவந் தாடியருள். (37)

குடமுருட்டி வெண்ணெயினைக் கொள்ளையிடு வோன்மருகா,
திடமுருட்டும் அச்சந்தீர் சிதம்பரசுப் பிரமணியா,
நட,முருட்டுக் குணநமனே, என்றடியார் நவிலவைப்பாய்,
**குடமுருட்டி** நீர்கொணர்ந்தேம்; கூடியினி தாடியருள்;
கோணைமலம் யாம்நீங்கக் குளித்துவந்தே ஆடியருள். (38)

எள்ளினிலே எண்ணெயென எங்குமுறை பூரணனே,
தெள்ளும்அடி யார்க்குயிரே, சிதம்பரசுப் பிரமணியா,
கள்ளவிழும் பூங்குழலாள் கன்னிவள்ளி மணவாளா,
**கொள்ளிட**மா நதிப்புனலில் குதுகலித்தே ஆடியருள்;
கூடுநலம் யாம்பெறவே குளிர்ந்தினிதே ஆடியருள். (39)

மையல்நாற் றங்கெடவே மாணருள்செய் ஞானகுகா,
செய்யணை யுரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
பையணையும் பாம்பணையான் பரிந்துபணி நன்மருகா,
**ஐயனுற்** றின்புனலில் ஆடியருள் செய்குதியே;
அன்பெம்பால் நிறைவுறவே ஆடியருள் செய்குதியே. (40)

அசட்டுமலம் நீங்குறமெய் யறிவளிக்கும் தேசிகனே,
திசைக்குமயல் போக்கும் சிதம்பரசுப் பிரமணியா,
விசிட்டமெனும் ஆறெழுத்து மந்திரத்தின் மெய்ப்பொருளே,
**வசிட்டநதி** நீராடி மகிழ்ந்தருளைச் செய்குதியே;
மலமூன்றும் ஓய்ந்தழிய மலிராடல் செய்குதியே. (41)

வண்ணமயில் ஏறி வருமுருகா, வேலவனே,
திண்ணமுறு தோளாய், சிதம்பரசுப் பிரமணியா,
நண்ணுமன்பில் நீமுன்னர் நல்கி வரவிடுத்த
**மண்ணணி**நறு நீராடி மகிழ்ந்தருளைப் புரிகுதியே;
மாயையிருள் யாம்பாற மாண்பாடல் புரிகுதியே. (42)

நலம்பாறும் அவுணர்குலம் நீறுபட நயந்தவனே,
சிலம்பாரும் திருவடியாய், சிதம்பரசுப் பிரமணியா,
மலம்பாற வைத்தடியார் மனமுறைந்த மணிவிளக்கே,
**சிலம்பாறு** வந்தபுனல் திருவுறவே ஆடியருள்;
திருவருளை யாம்பெறவே சிந்தையுவந் தாடியருள். (43)

முற்றுலம் அன்றுவர முனியாமல் உண்டவன்சேய்,
செற்றூர் பகைதவிர்த்த சிதம்பரசுப் பிரமணியா,
வற்றாத மாகருணை வள்ளால், வளப்பாண்டிக்
**குற்றாலப் பேரருவி** நீரிற் குளித்தருளே;
கொழியருள்யாம் பெற்றுய்யக் கூடிக் குளித்தருளே. (44)

சித்தமார் மலினமெலாம் தீரவரு ளுங்குரவா,
தித்தியென ஆடுபரிச் சிதம்பரசுப் பிரமணியா,
பத்திவினை உள்ளத்தார் பக்குவமாய் உண்கனியே,
**சித்திரா** நதிநீரில் சிறந்தினிதே ஆடியருள்;
சிந்தையெலாம் யாமோயத் திகழ்ந்துநனி ஆடியருள். (45)

மராமரமோ ரேழ்தொளைத்த மாலின் மருகோனே,
திராவிடவே தத்துவக்கும் சிதம்பரசுப் பிரமணியா,
பராபரனே, சித்துருவே, பழனிமலை மேயவனே,
**வராகநதி** நீர்கொணர்ந்தேம் மனமுவந்தே ஆடியருள்;
வழிவழியே யாம்பணிய வழங்கிஇனி தாடியருள். (46)

---

*41. மலிர் - தண்ணீர்.*

உண்முகத்தே ஓங்காரத் தொளியாகி ஒளிர்பவனே,
தெண்முகத்தார் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
பண்முகந்த பாடல் பரிந்துவக்கும் செந்தமிழா,
**சண்முகமா நதி**நீரில் சார்ந்தினிதே ஆடியருள்;
சாடுமல நோய்நீங்கத் தண்மையுற ஆடியருள். (47)

பாழையாற் றும்கொடிய அசுரர்குலம் படஅழித்தாய்,
சீழையாற் றும்புலைதீர் சிதம்பரசுப் பிரமணியா,
ஏழையேற் கருள்செய்த எண்ணரிய கருணையனே,
**கூழையாற் றின்**புனலில் கூடியினி தாடியருள்;
கும்பிட்டு யாம்வாழக் குளிர்ந்துநனி ஆடியருள். (48)

பரிசிலிது என்றமுரு காற்றின் பயனுவாய்,
தெரிசனைதந் தாளும் சிதம்பரசுப் பிரமணியா,
வரிசையுறும் ஆறுமுக வள்ளால், தயாநிதியே,
**அரிசில்நதி** மணிநீரில் அருள்பொலிய ஆடுதியே;
ஆணவ அழுக்ககன்று யாம்பாட ஆடுதியே. (49)

வம்பையாற் றுங்கொடியோர் மாயவடி வேலெடுத்தாய்,
செம்பொனுர் உரும்பராய் சிதம்பரசுப் பிரமணியா,
நம்பனே, என்னுடைய நாதா, உயிர்க்குயிரே,
**பம்பையாற்** றுப்புனலில் பாய்ந்துமகிழ்ந் தாடியருள்;
பவமறுத்து யாமுய்யப் பண்புடனே ஆடியருள். (50)

கள்ஆறு போற்பாயும் கடம்பணியும் பரம்பரனே,
தெள்ளாறு மாமுகனே, சிதம்பரசுப் பிரமணியா,
உள்ளாறும் ஐம்புலனை ஊற்றமழித் தோர்க்கருள்வாய்,
**வெள்ளாறு** பாய்புனலில் வேட்டினிதே ஆடியருள்;
வேட்கைநனி யாம்தீர விழைந்தினிதே ஆடியருள். (51)

சுரிவேணி யுடைவள்ளி சுற்றியணை கற்பகமே,
தெரிவார்க் கருளும் சிதம்பரசுப் பிரமணியா,
பரிவார் அன்னைபோல் பலநலமும் செய்குமரா,
**திரிவேணி** சங்கமநீர் சேர்ந்தருளி ஆடுதியே;
திருக்கற்று யாமுய்யச் சிந்தையுவந் தாடுதியே. (52)

மயலே ஒழிய மதிநலம்சேர் வித்தகர்தம்
செயலே உவக்கும் சிதம்பரசுப் பிரமணியா,
பயலார் மதிஅணிந்தார் பாலகனே, பர்மாவின்
**அயிரா வதி**நறுநீர் ஆடியுவந் தருளுதியே;
அடியேங்கள் விழிகுளிர ஆடிமகிழ்ந் தருளுதியே. (53)

ஆணிப்பொன் னே,மணியே, அரிய திரவியமே,
சேணிற் பொலிபுகழார் சிதம்பரசுப் பிரமணியா,
காணற் கரிய கதிர்காமத் திற்படரும்
**மாணிக்க கங்கை**நீர் மகிழ்ந்தருளி ஆடுதியே;
மனமயலை யாம்போக்க மாண்புபெற ஆடுதியே. (54)

பொன்னிலங்கு மார்பப் புனிதன் மருமகனே,
தென்னிலங் குரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
என்னிலங்கு கண்மணியே, எந்தாய், சிவக்கொழுந்தே,
தென்னிலங்கைக் **கழனிகங்கை**த் திப்பியநீர் ஆடுதியே;
*தெய்வநலம் யாம்பெறவே சிந்தையுவந் தாடுதியே.* (55)

மாவலியை ஈடழித்த மாலின் மருகோனே,
சேவற் கொடியாய், சிதம்பரசுப் பிரமணியா,
காவற் படைக்கதிப ஞகிவிண்ணம் காத்தவனே,
**மாவலிகங் கை**ப்புனலில் மகிழ்ந்தருளி ஆடுதியே;
மாட்சிபெறு காட்சியுற மனமுவந்தே ஆடுதியே. (56)

கானவிசை நாரதனுர் பாடக் களித்தருள்வோய்,
தேனிமிரும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
யானமுவும் ஆனந்தம் ஈவாய், இமயமலை
**மானச சரோவர்**நீர் மாண்புடனே ஆடியருள்;
மாயைவலி ஓடும்வகை மனமுவந்தே ஆடியருள். (57)

சரவணமே யாமுளத்துக் கடுமையினு ருக்கரியோய்,
சிரவணஞா னக்குரவா, சிதம்பரசுப் பிரமணியா,
அரவணியா னுக்குரைசொல் அற்புதனே, சிற்பரனே,
***சரவணப்பூம் பொய்கை**நீர் தண்மைபெற ஆடுதியே;*
சாந்தநீர் யாமாடச் சார்ந்தினிதே ஆடுதியே. (58)

---

*53. பயல் - பாதி.*

இல்லையெனச் சொல்லா இயல்பாரை ஆண்டவனே,
செல்லென்று தீயும் சிதம்பரசுப் பிரமணியா,
நல்லவனே, நாயகனே, ஞானமணி யே,குகனே,
**தில்லையினில் சிவகங்கைத்** தீர்த்தநீர் ஆடியருள்;
சித்தமலம் யாம்அழிக்கத் திருவுறவே ஆடியருள். (59)

மண்ணு மணியனையாய், மாற்றறியாச் செம்பொன்னே,
திண்ணூர் அறிவுருவே, சிதம்பரசுப் பிரமணியா,
கண்ணு ரமுதே, கருணைப் பெருங்கடலே,
**அண்ணு மலைப்பிரம தீர்த்தத்தில்** ஆடியருள்;
ஆராத இன்பம்யாம் ஆரஇனி தாடியருள். (60)

பாரூர்எல் லாம்பரந்தும் பார்க்கரிய பூரணனே,
தேரூரும் செல்வா, சிதம்பரசுப் பிரமணியா,
காரூர் மலையெல்லாம் கவின்கோயில் கொண்டவனே,
**ஆரூர்க் கமலா லய**நறுநீர் ஆடியருள்;
ஐயா, வழியடியோம் காணநனி ஆடியருள். (61)

வேல்அங்கா டுங்கையாய், வித்தகனே, சித்துருவே,
சேல்அங்கா டும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
கூலங்கா ணும்பவத்தின் கூட்டழிக்கும் நாயகனே,
**ஆலங்காட் டின்முத்தி தீர்த்த**நீர் ஆடுதியே;
அஞ்சலென எமக்கருளி யன்புடனே ஆடுதியே. (62)

சதுரப்பா டுடையாரும் சார்ந்தறியா ராசியமே,
சிதிலப்பா டகற்றுகின்ற சிதம்பரசுப் பிரமணியா,
கதுவிப்பற் றும்பவநோய் காற்றுகரு ணகரனே,
**மதுரைப்பொற் றுமரை**நீர் மங்கலமாய் ஆடியருள்;
மலரடியே யாம்பற்றும் மாண்புபெற ஆடியருள். (63)

இச்சிப்பார் இச்சிக்கும் இன்மதுவே, பொன்மணியே,
செச்சைமார் பா,குமரா, சிதம்பரசுப் பிரமணியா,
கொச்சைத்தேன் மொழிக்குறத்தி கூடியணை மணவாளா,
**கச்சிச்சர் வப்பொய்கைக்** கடிநீரில் ஆடியருள்;
கடுமைமலம் யாம்பாறக் களித்தினிதே ஆடியருள். (64)

---

62. *கூலம் - தொகுதி.* 63. *ராசியம் - இரகசியம்.*
64. *சர்வப்பொய்கை - சர்வதீர்த்தம்.*

மனுக்கோடி யினில்உயர்ந்த மந்திரமாம் ஆறெழுத்தோய்,
செனித்தோடச் செய்யாச் சிதம்பரசுப் பிரமணியா,
இனிக்கோடல் இல்லாமல் எனையாண்ட கற்பகமே,
**தனுக்கோடி தீர்த்தநீர்** தண்மையுற ஆடியருள்;
தனுவெடுக்கா வழிஎமக்குத் தந்துநனி ஆடியருள். (65)

பண்காட்டும் மொழிவள்ளி பாதம் பணிந்தோனே,
திண்காட்டும் தோளாய், சிதம்பரசுப் பிரமணியா,
எண்காட்ட லில்லாமல் ஏறுகின்ற சீர்த்தியனே,
**வெண்காட்டு முக்குளநீர்** வேட்டினிதே ஆடியருள்;
வெம்மைமனம் சாந்திபெற வேண்டுகின்றேம்; ஆடியருள். (66)

வழுக்குன்ற மெய்யறிவு மாட்சிபெறச் செய்குரவா,
தெழிக்குஞ்சீ ரார்முருகா, சிதம்பரசுப் பிரமணியா,
மழுக்கொண்ட கையுடைய மாதேவன் செல்வமைந்தா,
**கழுக்குன்றச் சங்கப்பொய்** கைப்புனலில் ஆடியருள்;
கனற்றுமலத் தீயழியக் களித்தினிதே ஆடியருள். (67)

பரமசிவ னார்க்கன்று பரிந்துகுரு மொழியுரைத்தாய்,
சிரமமெலாம் தீர்த்தருளும் சிதம்பரசுப் பிரமணியா,
வரமருளி நாயேனை வாழ்விப்பாய், **சீகாழிப்**
**பிரமதீர்த் தப்**புனலில் பெட்பினுடன் ஆடியருள்;
பேதைமையை யாமகலப் பெரிதுவந்தே ஆடியருள். (68)

மணிமன்னும் ஒளிபோல மலர்மன்னும் மணம்போலத்
திணிமன்ன யாங்கணுஞ்சேர் சிதம்பரசுப் பிரமணியா,
அணிமன்னும் வேதம் அருச்சித்த **மறைக்காட்டு**
**மணிகன்னி** கைத்திருநீர் மகிழ்ந்தினிதே ஆடுதியே;
மனமயலெல் லாம்போக்க வாய்ப்புறவே ஆடுதியே. (69)

மந்தமதி சேரெளியேன் மாந்தஅருள் ஈந்தவனே,
சிந்துவினில் வேலெறிந்த சிதம்பரசுப் பிரமணியா,
வந்தனைசெய் மெய்யடியார் வாழஅருள் செய்பவனே,
**செந்தில்வத னாரம்ப தீர்த்த**நீர் ஆடியருள்;
சென்மநோய் யாம்தீரத் தேர்ந்தினிதே ஆடியருள், (70)

ஆழிப் படையானுக் கன்புடைய நன்மருகா,
சீழிற் பிறவாச் சிதம்பரசுப் பிரமணியா,
பாழுற் றழியாமல் பாலிப்பாய், **செந்தூரில்**
**நாழிக் கிணற்று** நறுநீரில் ஆடியருள்;
ஞானநலம் யாம்பெறவே நன்கினிதே ஆடியருள். (71)

மிறைசெய் அவுணர்கள் வேரறச்செவ் வேலெடுத்தாய்,
சிறைவிட் டமரர்தொழும் சிதம்பரசுப் பிரமணியா,
குறைபட்ட நாயேனைக் கூர்ந்தருளி லேபதித்தாய்,
**துறைசைக்குட் கோமுத்தித்** தூயநீர் ஆடியருள்;
தூய்மைமுழு தும்பெறயாம் துதிக்கநீ ராடியருள். (72)

குமுதமலர் அனையவிதழ்க் குறவள்ளி காதலனே,
திமிதமெனும் மயிற்பரியாய், சிதம்பரசுப் பிரமணியா,
விமிதமுற எனைஆண்ட வித்தகனே, **திருக்கடவூர்**
**அமுதபுட்** கரிணிநீர் அழகுபெற ஆடுதியே;
ஆனந்தக் கடல்யாங்கள் ஆடஉவந் தாடுதியே. (73)

மருக்குடைந்து வண்டிசைக்கும் மாக்கடம்ப மாலையனே,
செருக்கடங்கி னர்போற்றும் சிதம்பரசுப் பிரமணியா,
திருக்கடங்க ஞானஒளி சேரச்செய் தேசிகனே,
**திருக்குடந்தை மாமகநீர்** சேர்ந்தருளி ஆடுதியே;
திப்பியமா அருள்பெறவே செய்தினிதின் ஆடுதியே. (74)

கோதீசல் போன்ற குறைகள்பல மாய்த்தருளித்
தீதோவச் செய்யும் சிதம்பரசுப் பிரமணியா,
மாதீசன் மாதேவன் மைந்தா, இலங்கையினிற்
**கேதீசப் பாலாவிக்** கேழ்நறுநீர் ஆடியருள்;
கீழ்மையெலாம் யாமொழியக் கிளர்ந்தினிதே ஆடியருள். (75)

யாவையுமாய் அல்லதுமாய் எங்குமிநிறை பூரணனே,
தேவர்பணி உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
பாவியரும் வந்துபணிந் தாலவர்க்குப் பரிந்தருள்வோய்,
**தேவைநகர் சேர்அங்கி தீர்த்தநீர்** ஆடியருள்;
தீமையொழிந் தின்புறயாம் திக்ழமகிழ்ந் தாடியருள். (76)

---

72. *மிறை - நடுக்கம்,* 76. *தேவைநகர் - இராமேசுவரம்.*

நள்ளாறு காட்டியசீர் நக்கீரர்க் கினிதருள்வாய்,
தெள்ளாறு மாமுகனே சிதம்பரசுப் பிரமணியா,
கள்ளூறு கடம்பணியும் கந்த,கரு ணாகரனே,
**நள்ளாற்று நளதீர்த்த** நறுநீரில் ஆடியருள்;
நானென்னும் அகந்தைஎமை நழுவஇனி தாடியருள். (77)

மெய்காவ லாயிடும்பன் மேவிவர உலாவருவாய்,
செய்யாத உதவிசெய்யும் சிதம்பரசுப் பிரமணியா,
நையாத உள்ளத்தேன் நயந்துபணிந் துயச்செய்தாய்,
**வைகாவூர் யமதீர்த்த** மணிப்புனலில் ஆடியருள்;
வறுமையடை யாதெமக்கு வழியருள ஆடியருள். (78)

மயிலத்தில் எரகத்தில் மாப்பழனி யில்திகழ்வாய்,
செயலற்றோர் பணிந்தேத்தும் சிதம்பரசுப் பிரமணியா,
குயிலுற்ற இசைபாடும் உரும்பராய்க் கோயிலுளாய்,
**தயிலத்தில்** ஆடியாம் தழைக்கவினி தருளுதியே;
சாந்தமெனும் புனல்யாங்கள் சார அருளுதியே. (79)

வெஞ்சினமும் காமமும்எந் நாளுமே மேவாதார்
செஞ்சரணம் போற்றும் சிதம்பரசுப் பிரமணியா,
தஞ்சமெனும் எனைத்தாங்கித் தயைவழங்கும் மாநிதியே,
**மஞ்சனமஞ் சட்**புனலில் ஆடி மகிழ்ந்தருளே;
மாயைவலி யாமோய ஆடி மகிழ்ந்தருளே. (80)

மாலாடல் ஒட்டா மனமுடையோர் போற்றுகுகா,
சேலா டுரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
வேலாடு கையாய், விறலாடு திண்டோளாய்,
**பாலாடி** யருளியெங்கள் பாவமெலாம் போக்குதியே;
பாவன்மெம் மைச்செய்யப் பண்டைவினை போக்குதியே. (81)

மயர்வேறு நெஞ்சர் மதிப்பரிய மாமணியே,
செயிர்தீர் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
கயலேறு கண்ணிவள்ளி காதலிக்கும் கற்பகமே,
**தயிர்**மேனி முழுதாடித் தண்மைபெற அருளுதியே;
சார்ந்தநலம் யாம்தாங்கத் தனியாடி அருளுதியே. (82)

---

81. மால் - மயக்கம்.

யான்நாடிப் பார்க்கறியாய், எனைநாடி ஆண்டவனே,
தேனுடும் சொல்லாய், சிதம்பரசுப் பிரமணியா,
வானுடர் போற்றும் உரும்பராய் மாமணியே,
தேனுடி முழுக்கயர்ந்து திப்பியமே அருளுதியே;
சிந்தைமயல் தேயஅபி 'டேகங்கொண் டருளுதியே. (83)

வானகமும் மண்ணகமும் வாழ்த்தவாழ் வருள்பவனே,
தேனகுசொல் வள்ளியணை சிதம்பரசுப் பிரமணியா,
யான்எனதென் றற்றவர்கட் கினிக்கின்ற ஆரமுதே,
**பானகநீர்** ஆடிப் பரிந்தருளை வழங்குதியே;
பாரப் பிறவியறப் பதம்பெறவே வழங்குதியே. (84)

ஞானபண் டிதசாமி நாதகுரு வானவனே,
சேனைக் கதிபதியாம் சிதம்பரசுப் பிரமணியா,
யானைக் கிரங்கும் எழில்மாயன் நன்மருகா,
**ஆன நறுநெய்**யில் ஆடியருள் செய்குதியே;
ஆணவம்அ விந்தொழிய ஆடியருள் செய்குதியே. (85)

முந்நீரில் வேலெறிந்து மொய்சூர் அறஅழித்தாய்,
தென்னீர் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
என்னீர்மை மாற்றியன்பை ஏற்றிஅருள் செய்தவனே,
**பன்னீரில்** ஆடிப் பரிந்தருளை வழங்குதியே;
பாசவினை யாம்தீரும் பாங்கு வழங்குதியே. (86)

ஊன்நைந்து போகுமுனர் உள்ளத்திற் கொள்வார்க்குத்
தேனென் றருள்செய் சிதம்பரசுப் பிரமணியா,
சானஞ்செய் யப்பணித்தென் தாபந்தீர்த் தருள்முருகா,
**ஆனஞ்சில்** ஆடி யருளி மகிழ்குதியே;
ஆதரம்எம் பாலேற ஆடி மகிழ்குதியே. (87)

நஞ்சமுதம் ஆக்கும் நடராச னுர்சேயே,
செஞ்செவே ஆர்மேனிச் சிதம்பரசுப் பிரமணியா,
பஞ்சையெனை ஆண்டருளிப் பாலித்த மாவள்ளால்,
**அஞ்சமுதம்** ஆடி அருளை வழங்குதியே;
அன்பினிலே யாமோங்க அருளை வழங்குதியே. (88)

---

87. *சானம் - தியானம்.*

உளநீர்மை ஓர்ந்தடக்கும் உத்தமர்கள் போற்றிசைக்கத்
திளையருள்செய் யும்குமரா, சிதம்பரசுப் பிரமணியா,
களையனைய தீங்கெடுத்தென் கண்முனின்ற கற்பகமே,
**இளநீரில்** ஆடியரு ளெங்களுக்கு வழங்குதியே;
ஏமமுறவே யாங்களினி இன்னருளை வழங்குதியே.

விருப்பஞ்சார் அன்பர்கட்கு வேண்டுவன நல்குகுகா,
திருப்பஞ்சம் இன்றிச்செய் சிதம்பரசுப் பிரமணியா,
இருப்பஞ்சம் எனக்கொள்வோன் ஏத்துமுரும் பராய்முருகா,
**கருப்பஞ்சாற் றினி**லாடிக் களித்தருளை ஈகுதியே;
கனலுமலம் ஓயஎமைக் காக்கஅருள் ஈகுதியே. (90)

தீம்பழமே, பழச்சுவையே, தேனே, அமுதமன்னாய்,
தீம்பகன்றார் போற்றிசெயும் சிதம்பரசுப் பிரமணியா,
பாம்பணிவோன் மைந்த,பரம் பரமாய பெருஞ்சுடரே,
**மாம்பழச்சா** றாடி வளவருளை ஈகுதியே;
மாயைவலி ஓயயாம் வாழஅருள் ஈகுதியே. (91)

கலிமுற்று வகைவேள்வி காத்தல்செயும் பரம்பரனே,
செலவற்று அருளுடைய சிதம்பரசுப் பிரமணியா,
மலமற்றார் உளக்கோயில் மன்னும் மணிவிளக்கே,
**எலுமிச்சம் பழச்சாற்றில்** ஆடி அருளுதியே;
எங்கள்பவம் தீரநனி ஏன்றாடி அருளுதியே. (92)

தீதுளமே சேராத செம்மைமன அருணகிரி
சீதஅருள் பெறவைத்த சிதம்பரசுப் பிரமணியா,
மாதயையில் இணையற்ற வண்கடலே. ஒண்சுடரே,
**மாதுளம்ப ழச்சாற்றில்** மாண்புபெற ஆடுதியே;
வாதனைகள் யாம்தீர மனமகிழ்ந்தே ஆடுதியே. (93)

குராச்செறிதார் பூண்ட குமரா, குகப்பெருமான்,
திராச்சிறுபூ வும்புனைந்த சிதம்பரசுப் பிரமணியா,
வராச்செல்வம் பெற்றவன்போல் வாழஎனை வைத்தவனே,
**திராட்சைப் பழச்சாற்றில்** திளைத்தாடி அருளுதியே;
தீராத பிறவிநோய் தீர்ந்தொழிய அருளுதியே. (94)

---

90. இருப்பு அஞ்சம்: அஞ்சம் - அன்னம்.
94. *திரா - பவளமல்லிகை.*

சீரங்க நாதன் திருமருகா, உரும்பராய்
சேருங் குமரா, சிதம்பரசுப் பிரமணியா,
மாரன் வலியடக்கும் மாவிரதர் தம்வலியே,
**நாரங்கச் சாற்றினிலே** ஆடியருள் நல்குதியே;
நானென்னும் அகந்தையற நண்ணியருள் நல்குதியே. (95)

மலமங்கச் செய்குரவா, வள்ளி மணவாளா,
செலமங்காத் திருவுடைய சிதம்பரசுப் பிரமணியா,
இலமென்று சொல்லாமல் ஈந்தருளும் மாவள்ளால்,
**பலவினறுங் கனிச்சாற்றில்** பண்புறவே ஆடியருள்;
பவம்யாங்கள் நீங்கஅருள் பாலித்தே ஆடியருள். (96)

இந்தனத்தை அன்பனுக்காக் காவும் இறைபுதல்வா,
செந்திறத்த தமிழ்க்கிறைவா, சிதம்பரசுப் பிரமணியா,
வந்தனஞ்செய் வார்க்கெளிய வள்ளால், நறுங்கலவைச்
**சந்தனச்சே** ருடியருள் சார வழங்குதியே;
சத்தியவாழ் வைப்பெறவே தண்ணருளை வழங்குதியே. (97)

பங்கமுற்ற இந்திரனுர் பண்டைவாழ் வைப்பெறவே
செங்கதிர்வேல் எடுத்தவனே, சிதம்பரசுப் பிரமணியா,
பொங்குவள இலங்கையினிற் பொலிஉரும்ப ராய்த்தேவே,
**குங்குமச்சே** ருடிக் குளிர்ந்தருளை ஈகுதியே;
குணஞ்சிறந்து யாம்வாழக் கூர்ந்தருளை ஈகுதியே. (98)

கன்னுமு தக்கவிஞன் அருணகிரி காதல்செயும்
தென்னு ரமுதே, சிதம்பரசுப் பிரமணியா,
இன்னு தனபோக்கி எனக்கருளும் என்னுயிரே,
**அன்னுபி டேகங்**கொண் டாடி மகிழ்ந்தருளே;
அடியேங்கள் வாழ்வுபெற ஆடிநனி மகிழ்ந்தருளே. (99)

கருநீற்றி அன்பர்தமைக் காத்தருளும் கண்மணியே,
செருநீத்தார் உள்ளுறையும் சிதம்பரசுப் பிரமணியா,
மருவேற்ற பூம்பொழில்சூழ் உரும்பராய் வந்தவனே,
**திருநீற்றி** லேஆடித் திகழ்ந்தருளை வழங்குதியே;
தினம்பாடி யாம்மகிழத் திருவருளை வழங்குதியே. (100)

**17 - 1 - 65.**

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்

## *அருச்சனை மாலை*

(தரவு கொச்சகக் கலிப்பா)

தாமரைமா மலர்தூவித் தாளிணையில் வீழ்ந்துயர்வேன்;
மாமறையி னுட்பொருளை மாணுறவே தெரித்தருள்வாய்;
சேமவரு ளாகரனே, சிதம்பரசுப் பிரமணியா,
காமனையே குலைக்குமெழிற் கந்த,குக, போற்றியரோ! (1)

மல்லிகையின் மலர்தெரிந்து மாணடிதூ வித்தொழுவேன்;
எல்லையிலா இன்பமெனக் கெளிவருமா றேசெய்வாய்;
செல்வமலி உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
கல்விநலம் பாலிக்கும் கதிர்வேல. போற்றியரோ! (2)

முல்லைஎழில் மலர்தூவி முந்திய்டி அருச்சிப்பேன்;
நல்லவழி ஈதெனவே நானறியச் செய்தருள்வாய்;
செல்வம்அரு ளேயென்ற சிதம்பரசுப் பிரமணியா,
பல்வளமும் தந்தருளும் பார்த்திபனே, போற்றியரோ! (3)

செங்கமலப் பூச்சொரிந்து சேவிப்பேன் சேவடியே;
பங்கமுறு தேவாழப் பாலித்தே அருள்புரிவாய்;
செங்கணவன் மால்மருகா, சிதம்பரசுப் பிரமணியா,
மங்கலமே னிய,குகனே, மாமயிலோய், போற்றியரோ! (4)

வெண்பதுமப் பூவாலே மெல்லடியை அருச்சிப்பேன்;
ஒண்பதும இதயத்தே உள்ளொளியாய் மேவியருள்;
தெண்பதும மாமுகனே, சிதம்பரசுப் பிரமணியா,
கண்பதியு மாமணியே, கதிர்வேலா, போற்றியரோ! (5)

கருங்குவளை மலர்புனைந்து கழல்பணிந்து வாழ்வுறுவேன்;
நெருங்குமல வாதனையை நீக்கியருள் மருந்தளிப்பாய்;
திரங்கலிலா மேனியினாய், சிதம்பரசுப் பிரமணியா,
அரங்கவரி மால்மருகா, அற்புதனே, போற்றியரோ! (6)

அல்லிப்போ தாலடியை அணிந்துகும்பிட் டேத்துவன்காண்;
சொல்லப்போ தாஇன்பச் சொருபமதைக் காட்டியருள்;
தில்லைநா தன்சேயே, சிதம்பரசுப் பிரமணியா,
எல்லையறு பேரழகா, எம்பெருமான், போற்றியரோ! (7)

செங்குமுத மலர்சாத்திச் சேவடியி லேவீழ்வேன்;
மங்கிமயல் ஓவுறவே மாவருளை ஈகுவையே;
செங்கமலம் போல்விழியாய், சிதம்பரசுப் பிரமணியா,
எங்குமுறை நாயகனே, எம்மானே, போற்றியரோ! (8)

வெட்சியெழிற் பூத்தொடுத்து விரைத்தாளை அலங்கரிப்பேன்;
உட்சிதைவு வாராமல் ஓங்கமைதி யைத்தருவாய்;
தெட்டுமனத் தார்காணுச் சிதம்பரசுப் பிரமணியா,
எட்டுருவம் ஆனவனே, எந்தையே, போற்றியரோ! (9)

குறிஞ்சிமலர் கொண்டுவந்து கோலவடி சாத்திடுவேன்;
உறிஞ்சுமயற் கிரையாகா உறுதியெனக் குத்தருவாய்;
செறிந்தஅறி வேமெய்யாம் சிதம்பரசுப் பிரமணியா,
நறுந்துழா யோன்மருகா, நாயகனே, போற்றியரோ! (10)

செண்பகப்பூ ஏற்றியடி சேவித்துத் தாழ்குவன்யான்;
பண்பகலா வகையெனக்குப் பாலிப்பாய் நல்லருளை;
செண்டுறுகை யான்மருகா, சிதம்பரசுப் பிரமணியா,
மண்டும்அருள் ஆழியனே, வள்ளலே, போற்றியரோ! (11)

தும்பைமலர் தூவியுன்றன் சுடரடியை அருச்சிப்பேன்;
வம்புடைய வாதனைகள் மாய வரந்தருவாய்;
செம்பொன்மரு கா,குமரா, சிதம்பரசுப் பிரமணியா,
உம்பர்பணி வேலவனே, உத்தமனே, போற்றியரோ! (12)

உரோசாப்பூக் கொய்தடியில் உற்றணைய அருச்சிப்பேன்;
குரோதத்தைக் கொள்ளாத கொள்கைகடைப் பிடிக்கஅருள்;
திரோதவினை யிற்பெரியாய், சிதம்பரசுப் பிரமணியா,
விரோதமகல் வார்பணியும் வேலவனே, போற்றியரோ! (13)

செவ்வந்தி மாமலர்தூய்ச் சேவடியை வந்திப்பேன்;
எவ்வந்தீர்த் தென்னையாட் கொண்டடிமை ஏற்றருள்வாய்;
செவ்வந்தி வண்ணன்சேய், சிதம்பரசுப் பிரமணியா,
பவ்வமெனும் பிறப்பறுக்கும் பண்ணவனே, போற்றியரோ! (14)

வில்வவிலை தூவி விரைப்பதத்தில் அருச்சிப்பேன்;
பல்வகையாய்ப் பாய்மனத்தைப் பண்ணுறவே நிற்கச்செய்;
செல்லனைய மாகருணைச் சிதம்பரசுப் பிரமணியா,
நல்லவனே, கண்மணியே, நாயகனே, போற்றியரோ! (15)

துளவமலர் தூவியிரு சோதியடி யைப்பணிவேன்;
வளமலியும் அன்பின்மனம் கரையவருள் வழங்குவையே;
தெளிவுடையார் போற்றுகுகா, சிதம்பரசுப் பிரமணியா,
அளியுடையாய், ஆறுமுகா, அம்மானே, போற்றியரோ! (16)

காசித்தும் பையலரால் காலிணையைப் பூசிப்பேன்;
மாசற்ற வாழ்வில் மலர வரந்தருவாய்;
தேசுற்ற மேனிச் சிதம்பரசுப் பிரமணியா,
காசற்ற மாகருணைக் கந்தபிரான், போற்றியரோ! (17)

கொன்றை மலர்புனைந்து குரைகழலை யான்பணிவேன்;
ஒன்றை மனத்திருத்தி உட்கண் விழிக்கஅருள்;
தென்ற லனையஅருட் சிதம்பரசுப் பிரமணியா,
பொன்றல் இலாதவனே, புண்ணியனே, போற்றியரோ! (18)

குராமலரைக் கொய்து குவித்துப் பதம்பணிவேன்;
அராவெனுமா ணவம்நீக்கி ஆண்டடிமை ஆக்கியருள்;
திராவிடவே தம்புகன்ற சிதம்பரசுப் பிரமணியா,
பராவுபவர்க் காருயிரே, பாகனையாய், போற்றியரோ! (19)

தாழம்பூ வைச்சாத்தித் தாளிணையைப் பூசிப்பேன்;
ஆழங்கா ணுமனத்தை அடக்க வலிதருவாய்;
பேழைவயிற் றோன்பின்னுய், சிதம்பரசுப் பிரமணியா,
ஏழையருக் கெளியோனே, எம்மானே, போற்றியரோ! (20)

இருவாட்சிப் பூவெடுத்துன் இணையடியை அலங்கரிப்பேன்;
உருவாக்கும் ஊனுடலி னுள்ளே தரிசனந்தா;
திருவாக்கும் மாஅருளாய், சிதம்பரசுப் பிரமணியா,
மருவாக்கு நீபமலர் மாலையனே, போற்றியரோ! (21)

பிச்சிமல ராலே பிறங்குமடி அருச்சிப்பேன்;
இச்சையெலாம் ஓய இணைசாந்தி யைத்தருவாய்;
செச்சையணி மார்பினனே, சிதம்பரசுப் பிரமணியா,
அச்சிவமே ஆனவனே. ஆறுமுகா, போற்றியரோ! (22)

வகுளமல ராற்பரவி வாழ்த்தியடி அருச்சிப்பேன்;
பகலிரவு காணாத பண்புடைய இன்பருளாய்;
செகிலீரா றுடையவனே, சிதம்பரசுப் பிரமணியா,
மிகுமெழிலார் மேனியனே, வித்தகனே, போற்றியரோ! (23)

அலரிமல ராலடியை அருச்சித்து வாழ்த்துவன்யான்;
மலமகல ஞானஒளி வழங்கி அருள்தருவாய்;
திலகமனை யாய்,குகனே, சிதம்பரசுப் பிரமணியா,
பலமலையும் மேயவனே, பார்ப்பதிசேய், போற்றியரோ! (24)

குமிழம்பூ வாற்பூசை குறைகழற்றுச் செய்திடுவேன்;
அமிழ்தனைய ஆரருளில் அடியேனைக் கரைத்தருள்வாய்;
திமிதமெனும் மயிலவனே, சிதம்பரசுப் பிரமணியா,
தமிழ்பயில்வோர் ஏத்துகின்ற சற்குருவே, போற்றியரோ! (25)

ஆத்திமல ராலருச்சித் தடியிணையைச் சேவிப்பேன்;
நாத்திகர்த மோடிணங்கா நன்னிலையை நீயருள்வாய்;
தேத்துளும்பு கடம்பணியும் சிதம்பரசுப் பிரமணியா,
மாத்தயையே ஓருருவாம் மன்னவனே, போற்றியரோ! (26)

கடம்பமலர் பலதூவிக் கடிமலர்த்தாள் பணிகுவன்யான்;
அடம்புரியும் புலனடக்கு மாறுரைத்தே அருள்செய்வாய்;
திடம்புரிவார் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
நடம்புரிமா மயின்மேலே நடிப்பவனே, போற்றியரோ! (27)

சரக்கொன்றை நன்மலரால் தாள்அருச்சித் தேத்துவன்யான்;
சரக்கொன்றை எனக்கருளித் தனியின்பம் நாட்டுவையே;
செருக்கொன்றார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
திருக்கொன்ற அவுணர்களைத் தேய்த்தவனே, போற்றியரோ! (28)

---

23. செகில் - தோள்.

புன்னாக மலரெடுத்துப் பூசித்துன் அடிபணிவேன்;
என்னாகம் உறவந்தே எக்காலும் இருந்தருள்வாய்;
தென்னாரும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
என்னா ரமுதே, எனக்குயிரே, போற்றியரோ! (29)

புலிநகக்கொன் றைப்பூவால் பூம்பதத்தைப் பூசிப்பேன்;
நலியுமனம் சாந்திபெற நாடியருள் புரிகுவையே;
செலவிலவர் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
குலவிளக்கே, அருமணியே, கோமானே, போற்றியரோ! (30)

அந்திமந்தா ரைப்பூவால் அடியிணையை அருச்சிப்பேன்;
மந்தமதி கெடுத்தொளியை மாட்டுவித்தே நீயருள்வாய்;
செந்துவர்வாய் வள்ளிபங்கா, சிதம்பரசுப் பிரமணியா,
செந்தில்வளர் பெருமானே, சேவகனே, போற்றியரோ! (31)

மந்தாரை மலர்கொய்து மாணடியை அணிசெய்வேன்;
சிந்தாத படிமனத்தைத் திருத்திஆட் கொள்வாய்நீ;
செந்தாது மிகும்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
சந்தாபம் தீர்க்கின்ற சண்முகனே, போற்றியரோ! (32)

கொக்கிறகு மலர்பெய்து கோகனத அடிபணிவேன்;
எக்கணமும் என்னருகே இருந்துபுரந் தருள்குவையே;
திக்குலவும் புகழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
மிக்கஅருட் பெருங்கடலே, வேலவனே, போற்றியரோ! (33)

மத்தப்பூ வாற்றொழுது மாணடியைச் சேவிப்பேன்;
சித்தப்பூ வில்வந்து திகழ்ஞான விளக்கேற்றாய்;
சித்திக்குத் தகுமுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
சித்தர்க்குச் சித்தனெனும் செம்பொருளே, போற்றியரோ! (34)

காயாம்பூப் பெய்துன்றன் காலிணையை அருச்சிப்பேன்;
பேயாம்கா மங்கெடவே பேணியருள் செயவேண்டும்;
சேயாம்சே வகனே,எம் சிதம்பரசுப் பிரமணியா,
தாயாம்தந் தையுமாகும் சரவணனே, போற்றியரோ! (35)

செங்காந்தட் பூவணிந்து சேவடியைப் பணிந்துய்வேன்;
அங்காந்த நரகத்தில் ஆழாமல் காத்தருள்வாய்;
தெங்கார்ந்த பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
மங்காத பேரிளமை வள்ளலே, போற்றியரோ! (36)

மாதுளம்பூ வினையணிந்து வார்கழலை யேதாழ்வேன்;
காதுளத்திற் கோபமிலாக் கனமருளிச் செய்வாயே;
சீதளஞ்சேர் வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
தாதுளம்பும் கடம்பலங்கற் சாமி,குக, போற்றியரோ! (37)

கனகாம்பர மலராற் கழலடிபூ சித்துயர்வேன்;
மனமாம்பேய் எனைஇழுத்து மழுக்காமல் வாழவைப்பாய்;
தினமாந்தர் தொழும்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
இனமாந்தொண் டர்க்குயிரே, எம்மானே, போற்றியரோ! (38)

நீலாம் பரமலரை நீளடியிற் பெய்திடுவேன்;
மேலாம் பரவெளியில் மேவுதற்கு நீஅருள்வாய்;
சேலாம் விழிவளிசேர் சிதம்பரசுப் பிரமணியா,
மாலாம் பெருமாற்கு மருகோனே, போற்றியரோ! (39)

ஆம்பன்மலர் ஆயிரம்பெய் தடியிணையை அருச்சிப்பேன்;
தேம்பலின்றி மோனநிலை சித்திபெற வேஅருள்வாய்;
தீம்புனல்சூழ் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
பாம்பணிவான் தருமணியே, பரம்பரனே, போற்றியரோ! (40)

சம்பங்கிப் பூவிலக்கம் தரமெடுத்துத் தாள்புனைவேன்;
வெம்பங்கி யாம்அகந்தை மேவாதே பணித்தருள்வாய்;
செம்பஞ்சித் தாள்வளிசேர் சிதம்பரசுப் பிரமணியா,
அம்பஞ்சன் அஞ்சும்எழில் ஆறுமுகா, போற்றியரோ! (41)

நித்தியமல் லிகைப்பூவால் நீளடியைப் பூசிப்பேன்;
சத்தியத்தின் வழாமலுறத் தயைசெய்து பணித்தருள்வாய்;
சித்திதரும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
சத்துருவே, ஆனந்த சாகரமே, போற்றியரோ! (42)

இரவரசி எனும்பூவால் இருகழலும் பூசிப்பேன்;
விரவுமயல் அடராமல் வினையறுத்தே அருள்புரிவாய்;
திரவியஞ்சேர் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
கரவரிய் கொடைவள்ளால், கந்தனே, போற்றியரோ! (43)

பவளமல் லிகைப்பூவால் பாதஅருச் சனைசெய்வேன்;
கவளமத கரியென்னும் அகந்தையுரு மற்காப்பாய்;
திவளுமணி சேருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பவளநிறத் திருமேனிப் பார்த்திபனே, போற்றியரோ! (44)

பன்னீர்ப்பூ ஒருகோடி பாதமலர்ப் பெய்திடுவேன்;
புன்னீர்மை சேராமை போங்கெனையாண் டருள்தருவாய்;
செந்நீரார் தொழும்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
மைந்நீர மயிலேறும் மணிவிளக்கே, போற்றியரோ! (45)

காசரளி மலராலே காலிணையை அருச்சிப்பேன்;
மாசுசிறி தேயறியா வாழ்வெனக்குத் தரல்வேண்டும்;
தேசுடையார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
வீசுசுடர் வேலெடுத்த வீரனே, போற்றியரோ! (46)

மாசிப்பத் திரத்தாலே மாணடியை அருச்சிப்பேன்;
காசற்ற மோனசித்தி காட்டிஎனை ஆண்டருள்வாய்;
தேசுற்றார் தொழும்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
மாசித்தா, அற்புதனே, மாமயிலோய், போற்றியரோ! (47)

திருநீற்றுப் பச்சையிலை சேர்த்தியடி புனைந்துய்வேன்;
கருநீற்றிப் பிறவியினிக் காணுமல் எனக்கருள்வாய்;
திருநீற்றைப் புகழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பெருநீத்த மாங்கருணைப் பெருமானே, போற்றியரோ! (48)

விட்டுணுக்க ரந்தைமலர் வேய்கழலிற் பெய்துயர்வேன்;
நட்டமின்றி வாழ்வில்அருள் நண்ணப் பணித்தருள்வாய்;
சிட்டருறை உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
இட்டவிதி மாற்றுகின்ற எம்பெருமான், போற்றியரோ! (49)

நீலமல ராற்புனைந்து நீள்கழலைப் பூசிப்பேன்;
காலமிலாக் கதிஅடையக் கருணைசெய வேண்டுமையா,
சீலமுளார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
வேலவனே, மேலவனே, மெய்ப்பொருளே, போற்றியரோ! (50)

அசோகமலர் அருச்சனைசெய் தடியிணையைப் பூசிப்பேன்;
விசாலமுறு மனந்தந்து வேட்கையெல்லாம் நிறைவிப்பாய்;
திசாமுகஞ்சீர் பெருகுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
விசாகனெனும் பேருடைய வித்தகனே, போற்றியரோ! (51)

சாதிப்பூ ஏற்றியுன தாட்கமலத் தைப்புனைவேன்;
சோதிக்கா துட்புகுந்து சோதியுருக் காட்டியருள;
சேதிக்கா நலவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
நீதிக்கா வற்குகனே, நித்தியனே, போற்றியரோ! (52)

மரமல்லி கைப்பூவால் மாண்கழலைப் பூசிப்பேன்;
சிரமன்னும் கவசமெனத் திருவடிதந் தருள்வாயே;
திரமன்னு சீருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
உரமன்னும் வடிவேலோய், உத்தமனே, போற்றியரோ! (53)

வாடாமல் விகைப்பூவால் வார்கழலை அலங்கரிப்பேன்;
ஆடாமல் அசையாமல் மனம்அமைய அருள்புரிவாய்;
தேடாத செல்வமெனும் சிதம்பரசுப் பிரமணியா,
தாடாளா, வீடருளும் சற்குருவே, போற்றியரோ! (54)

தெறுழம்பூ மாலையிட்டுத் தினந்தினமும் அடிபணிவேன்;
உறும்வெங்கா மத்தினையான் அடக்கிடும்அவ் வுறுதிஅருள்;
தெறும்வறுமை இல்லுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
நறுங்கடம்ப மாலையணி நாயகனே, போற்றியரோ! (55)

அனிச்சம்பூ வாலருச்சித் தணிந்தடியைப் பூசிப்பேன்;
தனிச்சொன்றும் மோனநிலை சார்வதற்குத் தயைபுரிவாய்;
செனிச்சினிவா ராதருளும் சிதம்பரசுப் பிரமணியா,
மனிச்சர்களுக் கினியஒளி மாமணியே, போற்றியரோ! (56)

வெட்பாலைப் பூவெடுத்து வெல்கழலைப் பூசிப்பேன்;
நட்பார எஞ்ஞான்றும் நாயேனைப் புரந்தருள்வாய்;
திட்பார்வார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பெட்பாரும் குறவள்ளி பெருங்கணவா, போற்றியரோ! (57)

புரசமலர் கொய்துவந்து பூசிப்பேன் நின்னடியை;
விரசுபிணி வாராமல் விழைந்தென்னைப் புரந்தருள்வாய்;
திரைசெய்புனல் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
கரைசெய்ய, அரியஅருட் கடலனையாய், போற்றியரோ! (58)

செங்கழுநீர் நறுமலரால் தினந்தோறும் அடிபுனைவேன்;
மங்கலின்றி விழியொளிர வளவருளை வழங்குவைநீ;
திங்களணி பெம்மான்சேய், சிதம்பரசுப் பிரமணியா,
மங்களமெல் லாம்வழங்கும் வடிவேலா, போற்றியரோ! (59)

செங்கொடுவே ரிப்பூவால் திருவடியைப் பூசிப்பேன்;
துங்கமுற இதயத்தில் துணையிருந்து காத்தருள்வாய்;
சிங்கமென அமரர்தொழும் சிதம்பரசுப் பிரமணியா,
தங்கவடி வேலெடுத்த சாமியே, போற்றியரோ! (60)

தேமாம்பூ வினைச்சாத்திச் சேவடியை யான்தொழுவேன்;
வாமான்போன் மங்கையர்மால் வாராமே பணித்தருளாய்;
தீமாண்ட வேள்வியளி சிதம்பரசுப் பிரமணியா,
நாமாண்ட திருப்புகழை நயந்தவனே, போற்றியரோ! (61)

கரந்தைமலர் பலபெய்து கழலிணையைச் சேவிப்பேன்;
அரந்தைகெட அறியாமை அழியஅருள் வழங்குவையே;
திரந்தருநல் அருள்கொழிக்கும் சிதம்பரசுப் பிரமணியா,
இரந்தவருக் கில்லையெனு எம்பெருமான், போற்றியரோ! (62)

மணிச்சிகைமா மலரெடுத்து மாணடியைப் பூசிப்பேன்;
துணிச்சல்பெற்று நமனையெதிர் தூய்மையினை வழங்குதியே;
திணிச்சிறையாம் பவம்போக்கும் சிதம்பரசுப் பிரமணியா,
கணிச்சிகையார் மாதேவன் காதலனே, போற்றியரோ! (63)

எறுழம்பூ எடுத்தடியை ஏத்தியருச் சனைசெய்வேன்;
சிறுவெந்தீச் சினம்ஆளாத் திறந்தந்து காத்தருள்க;
தெறுவெஞ்சூர் தனையழித்த சிதம்பரசுப் பிரமணியா,
குறுநஞ்சூர் கண்டத்தான் குமர,குக, போற்றியரோ! (64)

கூவிரம்பூத் தூயன்பிற் குரைகழலை அருச்சிப்பேன்;
தாவிவரும் கன்றெனவே சாரன்பை எனக்கருள்வாய்;
சேவையுளார் பெருகுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
யாவையுமாய் அல்லதுமாம் எம்மானே, போற்றியரோ! (65)

வடவனப்பூப் பெய்துசெம்மை வார்கழலைப் பூசிப்பேன்;
கடனெடுக்கா வகைசெல்வம் களித்தருளிக் காத்திடுதி;
திடனுடையார் சேர்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
இடனுடைக்கா சினியெல்லாம் இருப்பவனே, போற்றியரோ! (66)

வாகைப்பூ வாலணிந்து மாண்பதத்தை நனிபணிவேன்;
சோகத்தே சாராமல் துன்பழித்துப் புரந்தருள்வாய்;
தேகத்தே வராமற்செய் சிதம்பரசுப் பிரமணியா,
மாகத்தார் சிகாமணியே, வடிவேலா, போற்றியரோ! (67)

செருவிளம்பூ வாலணிந்து சேவடியி லேபணிவேன்;
திருவுளமெந் நாளும்என்பால் சிதருமே வைத்தருள்க;
திருவளரும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
குருபரனே, அன்பர்மனக் கோயிலுளாய், போற்றியரோ! (68)

கருவிளம்பூத் தூவியிரு காள்மலரை அருச்சிப்பேன்;
பெருவளஞ்சேர் தருவாழ்வைப் பெட்பினருள் செய்திடுவாய்;
தெருவளஞ்சேர் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
மருவளஞ்சேர் நீபமலர் மாலையனே, போற்றியரோ! (69)

வாணிப்பூப் பலபெய்து வளவடியை அருச்சிப்பேன்;
தேனித்தென் சித்தத்தில் திகழ்ந்துறைய வரவேண்டும்;
தேன்ஙித்தம் பொழியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
வானொத்த அருள்பொழியும் மாமணியே, போற்றியரோ! (70)

பயினிப்பூ வர்ற்புனைந்து பதவிணையைப் பூசிப்பேன்;
துயரத்தே தேம்பாத துணிவினைநீ வழங்கியருள்;
செயிரற்றார் சேருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
உயிருக்கோ ராருயிரே, உம்பர்பிரான், போற்றியரோ! (71)

பச்சிலைப்பூக் கொய்தடியைப் பரவியே பூசிப்பேன்;
இச்சையிலா தமைதிபெற எளியேனைப் பணித்தருள்வாய்;
சிற்சபையான் தருமணியே, சிதம்பரசுப் பிரமணியா,
பொற்சுடர்வேல் எடுத்தருளும் புண்ணியனே, போற்றியரோ! (72)

மருதம்பூ வால்நாமம் வாழ்த்தியடி அருச்சிப்பேன்;
கருதும்பே றெல்லாம்நீ களித்தருள வேண்டுகின்றேன்;
திருவொன்றும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
குருவொன்றும் பெருமைபெறு குமரேசா, போற்றியரோ! (73)

பாதிரிப்பூ ஆயிரத்தால் பாப்பாடி அடிபணிவேன்;
தீதிரிய நன்மைமிகச் சேர அருள்புரிவாய்;
சீதரன்றன் மாமருகா, சிதம்பரசுப் பிரமணியா,
யாதும்அன்பர் பெறவைக்கும் ஏரருளாய், போற்றியரோ! (74)

செருந்திமலர் பலதூவிச் சேவடியைப் பூசிப்பேன்;
மருந்துமணி மந்திரமாய் வந்தருளிச் செயல்வேண்டும்;
திருந்துமவர் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அருந்துணையே, ஆரமுதே, அழகழியாய், போற்றியரோ! (75)

கஞ்சங்குல் லைமலரால் காலிணையை அலங்கரிப்பேன்;
வஞ்சங்கொண் டவர்பாலே மருவாமல் அருள்புரிவாய்;
செஞ்சந்த னத்தாடும் சிதம்பரசுப் பிரமணியா,
தஞ்சந்தந் தமரர்களைத் தாபிப்பாய், போற்றியரோ! (76)

பிடவமலர் சாத்தியுன்றன் பீடடியைப் பணிந்துய்வேன்;
கடமையெலாம் சோராமற் கழிக்கவருள் வழங்குதியே;
திடமுடையார் வளருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
நடமுடையார் குருநாதா, நாயகனே, போற்றியரோ! (77)

செம்முல்லை மலரெடுத்துச் சேவடியைப் பூசிப்பேன்;
விம்முதலில் லாமலின்ப வீடளித்துக் காத்தருள்வாய்;
செம்மணிசேர் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
தெம்மடங்க ஓச்சுகின்ற செவ்வேலோய், போற்றியரோ! (78)

கொகுடிப்பூக் கோத்தணிந்து குரைகழலைப் புனைகுவன்யான்;
வெகுளிக்கே இடமில்லா விரதமெனக் கருள்புரிவாய்;
திகழிக்கார் செய்யுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பகழிக்கூத் தன்பாடல் பரிந்தேற்றாய், போற்றியரோ! (79)

வஞ்சிமலர் புனைந்தடியை வாழ்த்திவழி பட்டுய்வேன்;
அஞ்சிநமற் கழுங்காமல் அன்றருளைச் செயல்வேண்டும்;
செஞ்சிலம்பார் சேவடியாய், சிதம்பரசுப் பிரமணியா,
அஞ்சிலம்பெல் லாமாடும் அற்புதனே, போற்றியரோ! (80)

நந்திமலர் பலதூவி நாமமுரைத் தடிபணிவேன்;
மந்திபிடிப் பதுபோல மனத்துன்னைப் பிடிக்கவருள்;
சிந்தரிய திருவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
சந்தமுறு தமிழுவந்த தண்டமிழா, போற்றியரோ! (81)

மாதவிப்பூ ஆயிரத்தால் மாணடியில் அருச்சிப்பேன்;
தீதொழிய மலமொழியச் சினமொழியத் திருவருள்செய்;
சீதமலி செய்யுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஓதுமுரு காறையுவங் துளங்குளிர்ந்தோய், போற்றியரோ! (82)

புன்னைப்பூ ஏற்றியுன்றன் புனைகழலைப் பூசிப்பேன்;
என்னைப்பே ரின்பநிலை ஏற்றியருள் செய்திடுதி;
செந்நெற்போர் மலியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பொன்னைப்போல் பணியைப்போல் பொலிகின்றாய், போற்றியரோ! (83)

குருந்தமலர் மணம்பெறவே குரைகழலிற் பெய்துய்வேன்;
வருந்தநமன் வாராத வழிகாட்டி அருள்புரிவாய்;
திருந்துமெழில் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
மருந்துமணி மந்திரமாம் வானவனே, போற்றியரோ! (84)

செம்பூவால் ஆயிரநா மஞ்செப்பி யடிபணிவேன்;
வெம்பூவில் வாராத வீடளித்துய் யச்செய்வாய்;
தெம்பூறு வார்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கொம்பூது வேடர்மகள் கொண்கனே, போற்றியரோ! (85)

தணக்கமலர் மிகப்பெய்து தாழ்ந்தடியைப் பூசிப்பேன்;
இணக்கங்கொள் நல்லோர்தம் இனத்திருக்கப் பணித்தருளாய்;
திணக்கங்கொள் சேவகனே, சிதம்பரசுப் பிரமணியா,
மணக்கின்ற கடம்பமலர் மாலையனே, போற்றியரோ! (86)

சிறுசெங்கு ரலியென்னும் திருமலரால் அடிபணிவேன்;
மறுவொன்ற வொழாத வரமருள வேண்டுகின்றேன்;
தெறுகின்ற வினைதவிர்க்கும் சிதம்பரசுப் பிரமணியா,
வெறிகொன்றூர் உள்விளக்காய் மிளிர்மணியே, போற்றியரோ! (87)

சுரபுன்னை மலராலே துங்கஅடி அருச்சிப்பேன்;
வரமன்னு முத்தியென்னும் வாழ்வினையே வழங்குதியே;
திரமன்னு வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கரமன்னு ஞானசக்திக் கதிர்வேலா, போற்றியரோ! (88)

நரந்தமலர் நனிசாத்தி நளினஅடி கும்பிடுவேன்;
கரந்திலையென் றுதளிக்கும் கவினருள வேண்டுகின்றேன்;
திரந்திகழும் நலவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பரந்திகழும் பெருந்தேவா, பண்ணவனே, போற்றியரோ! (89)

வள்ளிப்பூ வாலடியை வணங்கிப்பூ சித்துயர்வேன்;
துள்ளிப்பாய் மனமடக்கும் துணிவெனக்கே அருள்செய்வாய்;
தெள்ளிப்பாய் புனலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
வள்ளிப்பூ நயந்தஎழில் மணவாளா, போற்றியரோ! (90)

நெய்தற்பூ அணிந்துனது நீள்கழலை அஞ்சலிப்பேன்;
வெய்திற்பார் வாழாத விதம்அளித்துக் காத்தருள்வாய்;
செய்தக்கார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
உய்திக்கா அமரர்பணி உத்தமனே, போற்றியரோ! (91)

நறவம்பூ எடுத்தடியில் நாளும்அருச் சித்துய்வேன்;
திறமொன்றும் நிராசையினைச் சேரவருள் தரல்வேண்டும்;
தெறுகின்ற வினைகொல்லும் சிதம்பரசுப் பிரமணியா,
பெறுகின்ற பேறடியார் பெறவைப்பாய், போற்றியரோ! (92)

செம்பரத்தம் பூவெடுத்துச் சேவடியை அருச்சிப்பேன்;
வெம்பவத்தில் வீழாமல் வீடருளிக் காத்திடுதி;
செம்பவளத் திருவுருவா, சிதம்பரசுப் பிரமணியா,
கம்பவளப் பிணிமுகமாம் கரிஊர்வோய், போற்றியரோ! (93)

சந்தனநன் மலரெடுத்துத் தண்பதத்தை அருச்சிப்பேன்;
இந்தியத்தின் வெறியடக்கும் இயல்பெனக்கே அருள்புரிவாய்;
சிந்தலற்ற வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பந்தமற்றார் பெருந்துணையே, பண்ணவனே, போற்றியரோ! (94)

வேங்கைப்பூ மேவவெழில் வீறடியைப் பூசிப்பேன்;
ஓங்குப்பே றுறுவாழ்வை உவந்தெனக்கே தரல்வேண்டும்;
தேங்கித்தேன் அலருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஏங்குற்றே அன்பர்தொழும் எம்மானே, போற்றியரோ! (95)

மஞ்சாடி மலரதனால் வான்கழலை அருச்சிப்பேன்;
அஞ்சாடி அலைக்குமனம் அடக்கவழி புகன்றருளாய்;
செஞ்சாலி வளருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
மஞ்சாட ஆடுமயில் வாகனனே, போற்றியரோ! (96)

கோங்கம்பூ ஏந்தியுன்றன் குரைகழலைப் பூசிப்பேன்;
ஏங்கும்போ தென்முன்வந் தேனென்று காத்தருள்தீ;
தேங்கும்பே ரெழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
நாங்கும்பி டுந்தெய்வ நாயகனே, போற்றியரோ! (97)

ஓமைப்பூ வாலடியை உணர்வுடனே அருச்சிப்பேன்;
தீமைப்பே றடையாத திறந்தந்து காத்தருள்வாய்;
சேமத்தார் மலியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
நாமத்தால் மனமுருக்கும் நம்பனே, போற்றியரோ! (98)

மரவம்பூப் பலபெய்து வான்கழலைச் சேவிப்பேன்;
இரவொன்றும் வாழ்க்கையின்றி ஈகைமலி தரச்செய்வாய்;
தெருவொன்றும் வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
வெருவொன்றும் உம்பருக்கு வீறளித்தோய், போற்றியரோ! (99)

தோன்றிப்பூ வாலணிந்து தூயபதம் அருச்சிப்பேன்;
மான்றுற்ற மயல்படரா வாழ்வெனக்கே அருள்செய்வாய்;
தேன்றெுக்க பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
வான்றெுக்க புகழுடைய மாமணியே, போற்றியரோ! (100)

20 - 1 - 65.

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்
# பழமொழி மாலை

(தரவு கொச்சகக் கலிப்பா)

செழுங்கமல வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அழுங்கியுறும் அவலம்நினைந் தழுதேங்கிக் கண்ணீர்விட்
டெழுந்துருகி னுலுன்றன் இன்னருளைப் பெறலாமே;
அழுங்குழந்தை பால்குடிக்கும் அவ்வுண்மை அறிந்தேனே. (1)

தகுதிக்கு வழியில்லை; தவம்செய்யும் நெறியறியேன்;
புகுதற்கோர் இடமில்லை; நின்றுனையே போற்றுகின்றேன்;
திகையற்றோர் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அகதிக்குத் துணைதெய்வம் ஆமென்ப தறிந்தேனே. (2)

அமைகின்ற ஆணவத்தில் அழுந்துமுயிர் நின்னன்பிற்
சமைகின்ற நெறிபழகிச் சாரின்அது சிவமேயாம்;
சிமைஒன்றும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
இமையஞ்சேர் காக்கையும்பொன் ஆகுமென இயம்புவரே. (3)

இலைஉன்பால் பிறவியெனும் இன்னல்;அதை நீயறியாய்;
புலையொன்ற யான்பிறவிப் புழுக்கமுறல் காணுவையோ?
சிலையெல்லாம் கோயில்கொளும் சிதம்பரசுப் பிரமணியா,
தலைவலியும் காய்ச்சலும் தனக்குவந்தால் தான்தெரியும். (4)

ஓம்புபல தேவர்பணி உமாபதியார் நினையணுகி
ஆம்பிரண வப்பொருளை அறிந்தார்;இம் மறையென்னே?
தீம்புனல்சேர் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
பாம்பறியும் பாம்பின்கால் எனுமுரையும் பழுதாமோ? (5)

மாயத்தை நாடுகின்ற மனிதரென்று காமமெனும்
நோயுற்ற நான்பிறரை நொய்துபுகன் றேசுகின்றேன்;
தேய்வற்றோர் புகழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஈயத்தைப் பித்தளைகண் டிளித்ததுபோல் ஆயிற்றே. (6)

இகலுடையார்க் கஞ்சுகின்ற இந்திரன்போன் றுளவமரர்
நகலுடையார் செருக்குடையார் நின்முன்னே நலங்குலைவார;
செகுமசுரர் குலந்தொலைத்த சிதம்பரசுப் பிரமணியா,
பகலவன்முன் மின்மினிக்குப் பாடுண்டோ, கிளத்துதியே. (7)

மயல்விட்ட மாதவர்கள் தம்மையண்டி வணங்காமல்
அயலுற்ற புல்லியரை அண்டிநட்புச் செயலாமோ?
செயல்விட்டோர் புகழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
முயல்விட்டுக் காக்கைப்பின் போனதுவாய் முடியுமன்றே? (8)

செய்தவினைப் பயனாலே தீங்குபல வருமிடத்து
வைதுபிறர் பாற்சினக்கும் மடமைதனை ஒழித்தருள்வாய்;
செய்தவழ்நீர் வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
எய்தவன்றன் இருக்கஅம்பை இகழ்வாரோ அறிந்தோரே? (9)

உரைக்குமிடத் தென்வலிமை உளராரென் றேதருக்கி
இரைக்குமவர் காலன்வரின் என்செயவல் லாராவர்?
திரைக்குலவு நீருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
குரைக்குநாய் கடியாத கொள்கையினை யாரறியார்? (10)

விரும்புபல பொருளுமருள் வித்தகனுன் துணைமறந்து
துரும்பெனவே நமைமதிக்கும் சுமடர்பால் அலைவதுவோ?
திரும்புபவம் இன்றிச்செய் சிதம்பரசுப் பிரமணியா,
கரும்பிருக்க இரும்புகடித் தெய்ப்பதனாற் கதியுண்டோ? (11)

அன்றுனைநன் கறியாமல் ஆகண்ட லன்சினந்து
வன்றிறலோ டேஎதிர்த்து மாசுபட்ட கதையறிந்தேன்;
தென்றல்தவழ் பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
குன்றுமுட்டும் குரீஇப்போலக் குமைந்ததுமோர் வியப்பாமோ? (12)

இப்பொருளை இவர்தருவார் என்றென்றே ஏமாந்து
துப்பருள்வார் இல்லாமல் துணையடியே புகுந்தொழிந்தேன்;
செப்புவளம் பொலியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கப்பலுறும் காகத்தின் கதையென்றன் கதையன்றே? (13)

தடுப்பாரில் லாமற்பல் சண்டவினை செய்பயனை
அடுப்பான சிலநாளில் அகன்றுவிடச் செயலாமோ?
சிடுக்கான வைகலையும் சிதம்பரசுப் பிரமணியா,
கடப்பாரை விழுங்கிவிட்டால் கழாயத்தால் கரையுமோ? (14)

பயில்கின்ற சாதனத்திற் பன்னாளும் ஈடுபட்டார்
செயல்கண்டு கண்மூடிச் சிறிதிருந்தால் என்பயனும்?
செயில்ஒன்று வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
மயில்கண்டு வான்கோழி நடமிடலே மாறுதோ? (15)

மண்ணிலுறு பாசமெலாம் மறந்துன்னை யேநினைவார்
அண்ணுநிலை காணுதார் அலர்தூற்றின் அவர்க்கென்னும்?
திண்ணமுளார் சூழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
வெண்ணிலவை நாய்குரைத்தால் விளைகின்ற தீங்கென்னே? (16)

வேறறியா வண்ணமுலாம் மெய்ஞ்ஞானி யர்பிறர்போல்
வீறுலகி லேவாழ்வார்; மேன்மையிலே குறைவுண்டோ?
சேறுமலி பணையுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
நீறுபுனை நெருப்பென்றே நினைத்தவரைப் பேணுவனே. (17)

ஏற்றபல பிறவியெடுத் திப்பிறவி பெற்றுள்ளேன்;
நோற்றுன்றன அருள்பெறுமந் நோக்கமிலா திருப்பதுவோ?
சேற்றுவளம் மலியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஆற்றினிலே கரைத்தபுளி யாவதுகொல் என்வாழ்வே? (18)

துன்றுபல பிறவியிலே சுமந்துவரும் வாசனையை
இன்றொருநா ளிற்போக்க இயலுமோ? எம்பெருமான்,
சென்றுவராத் திருவுடையாய், சிதம்பரசுப் பிரமணியா,
ஒன்றொன்றாய் நூறுமோ? ஒரேயடியாய் நூறுமோ? (19)

போற்றுகின்ற பிறவியிதைப் பூவடியை வணங்கியன்பை
ஆற்றுதற்குப் பயன்படுத்தல் அறிவாகும் அழியாமுன்;
சேற்றுமலர் பொலியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
காற்றுளபோ தேதூற்றிக் கொளலன்றோ கடனுமே? (20)

செயிருற்ற இவ்வுடலைத் திருவடியில் விழச்செய்து
மயர்வுற்ற பிறப்பிலினி வருமுடலைப் பெறுதருள்வாய்;
செயலற்பு தத்தர்புகழ் சிதம்பரசுப் பிரமணியா,
வயிரத்தை வயிரத்தால் அறுப்பதன்றோ மாண்செயலே? (21)

கருவுற்றுப் பிறந்தறிவு கண்டவுட னேயன்பு
மருவுற்று வாழாதார் முதுமையில்என் வாய்த்திடுவார்?
செருவுற்ற சூர்சிதைத்த சிதம்பரசுப் பிரமணியா,
பருவத்தே பயிர்செய்என்ற பழமொழியை அறியாரோ? (22)

மிக்கவர்விண் ணவரென்று வியப்போம்யாம்; அவர்மனிதர்
தக்கவர்முத் திக்கேறும் தகையுடையார் எனச்சொல்வார்;
திக்கெவையும் புகழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அக்கரைக்கிக் கரைபச்சை யாமெனவே அறிந்தேனே. (23)

நிச்சலுமே பூசைசெய்து நேமமுற வாழ்ந்திடினும்
இச்சையற உள்ளத்தன் பின்றெனில்என் பயனுறுமோ?
செச்சையணி புயப்பெருமான், சிதம்பரசுப் பிரமணியா,
அச்சிலதாம் தேரோட லாகுமோ? இயம்புதியே. (24)

விசிட்டமதாம் நூல்படிப்பேன், ஆழமதாய் மேவாதே;
கசட்டுமயற் காமமுள்ளே கடுகளவும் போகாதே;
திசைப்பிலவர் தொழுமுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அசட்டுக்குக் காமமோர் ஐங்கலமென் பாரன்றே? (25)

தெருட்டுபல நூல்படித்தும் திருவுடையார் வாய்க்கேட்டும்
இருட்டுமலம் அகலாத இரும்புளத்தார் திருந்துவரோ?
திருட்டினிலே வளிமணந்த சிதம்பரசுப் பிரமணியா,
குருட்டுவிழிக் கஞ்சனத்தாற் கொள்பயனென் றுண்டேயோ? (26)

படிக்குளுயர் பிறவிதந்து பலநலமும் செய்கின்றாய்;
துடிக்கின்ற படிதுயரும் சூழச்செய் தாய்அருளால்;
திடுக்கென்று சூர்விழச்செய் சிதம்பரசுப் பிரமணியா,
அடிக்கின்ற கையணைக்கும் எனுமுண்மை அறிந்தேனே. (27)

படியாமல் இருக்கின்ற பாவியெனைத் துன்பந்
தடியாலுய் ஆட்கொண்டால் அருளுக்கோர் பழுதுண்டோ?
செடியாரும் கனியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அடியாத பிள்ளைபடி யாதென்ப தறிந்தேனே. (28)

குடிபெருத்துக் குலம்பெருத்துக் கூடுநிதி யம்பெருத்துப்
படிபுகழ நலம்பெற்றும் பாவியமனை நினைக்கின்,
செடியசுரர்ச் செகுத்தழிக்கும் சிதம்பரசுப் பிரமணியா,
அடிவயிற்றிற் புளிகரைக்கும்; அந்தோ!என் செய்வேனே? (29)

அடுத்தடுத்துச் சங்கற்பம் செய்தாசை யணைத்தொழித்து
மடுப்பதற்கோர் உறுதிவரும்; மனம்கணத்தே குலைத்துவிடும்;
திடுக்கிடவே சூரழித்த சிதம்பரசுப் பிரமணியா,
அடுக்குமரு மைஉடைக்கும் நாயறிய லாகுமோ? (30)

மண்டுற்ற பலவமரர் மனத்துயரைப் போக்கினநீ
எண்டத்தும் எளியேன்றன் இன்னல்போக் குதலரிதோ?
திண்டத்து மனத்தவர்சூழ் சிதம்பரசுப் பிரமணியா,
அண்டத்தைச் சுமப்பவர்க்குச் சுண்டைக்காய் அருங்கனமோ? (31)

இணைகடந்த நிணைப்பணிய எய்துபிற வியிற்காலம்
அணுவளவும் போக்காமல் அன்புசெய வேயருள்வாய்;
திணையுடையார் சேருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அணைகடந்த வெள்ளம்பின் அழுதாலும் வாராதே. (32)

சித்தமலம் அகல்விக்கும் சிதம்பரசுப் பிரமணியா,
நித்தமலம் ஊறுகின்ற நீசக் கிணறு.பிணி
மெத்துகளம், ஊற்றை விளங்குடலம் மெய்யாமோ?
அத்தியின்ப ழம்பிட்டால் அத்தனையும் புழுவன்றோ? (33)

பொல்லாதார் எனைப்போற்றிப் புகழ்வதினும் எனைத்திருத்தும்
நல்லோர்கள் எனைஒறுத்தல் நான்நயக்க அருள்செய்வாய்;
செல்லாத திருவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அல்லார்அஞ் சலிக்குநல்லார் உதைமேலென் றறிந்தேனே. (34)

சிலையேய்ந்த மனம்பற்றைத் தேய்த்தபின்னர் நின்னடியை
நிலையோங்கப் பற்றல்செய்வாம், என்பதுநன் னினைவாமோ?
சிலையேந்தும் திருக்கரத்துச் சிதம்பரசுப் பிரமணியா,
அலையோய்ந்த பின்கடலில் ஆடுவதும் உளதாமோ? (35)

உலையிலகப் படுமரிசி போலே உளங்குலைந்தேன்;
நிலையிலொருப் படுதலின்றி நீள்துயரால் மாழ்குகின்றேன்;
சிலைபலவும் கோயில்கொளும் சிதம்பரசுப் பிரமணியா,
அலையிலகப் படுதுரும்பே ஆனேன்நான்; அருளுவையே. (36)

அவரையின்பத் தினிலாழ்த்தி அடியேனுக் கின்னல்தந்தாய்,
இவைமுறையோ என்பார்கள்; எவையும்வினைப் பயனன்றோ?
சிவைதருசே யாம்முருகா, சிதம்பரசுப் பிரமணியா,
அவரைவிதை நடினதுதான் துவரையாய் முளைப்பதுவோ? (37)

பழுதேற முன்பிறவி பண்ணியபா வப்பயனைத்
தொழுதேசெல் வந்தந்து பிறர்நுகரச் சொலின்ஆமோ?
செழுநீராற் பொலியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அழுதாலும் பிள்ளையினை அவள்தானே பெறவேண்டும்? (38)

தசையுலாம் உடம்பிதனுள் தனிமையிலுன் தரிசனத்தை
நசைகுவார் சிலர்;பலரோ நவைப்பொறியின் பம்பெறுவார்;
திசைகுலாம் புகழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
அசகசாந் தரமீதென் றறிந்துனையே பணிந்தேனே. (39)

பூமணக்கப் போற்றிப் புனல்மணக்க ஆட்டிநின்றும்
நீமணக்க வில்லையெனின் நீளுலகில் எவர் அருள்வார்?
தேமணக்கும் பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஆமணக்கு முத்தெல்லாம் ஆணிமுத்தென் றருதுமோ? (40)

மேயவினை எத்தனைதான் வெம்மைதர வந்தாலும்
நீயிரங்கி அருள்செய்தால் நிற்குமோ அவையெல்லாம்?
தேயலிலார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஆயிரங்காக் கைக்கோர்கல் ஆகும்உன்ற னருளே. (41)

ஊரியற்றிப் பேரியற்றி உலகத்தார் போற்றநின்று
சீரியற்றி னுழுழனைச் சிறிதுமற வாதருள்வாய்;
தேரியக்கும் விழாவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஆரியக்கூத் தாடினுங்கண் காரியத்தில் அமையுமன்றோ? (42)

சேவேறும் அரன்முதலாம் தெய்வமெலாம் நீயென்றே
பாவேறத் தொழுவார்க்குப் பண்ணுமருள் உனதன்றோ?
தேவேறு சீருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஆவேறு நிறமெனினும் அவற்றின்பால் ஒருநிறமே. (43)

ஊற்றமுற உலகத்தார் உவக்குங்கால் புறத்தலைந்தேன்;
தோற்றுசில போழ்தத்தே சொல்லுகின்றேன் நின்நாமம்;
தேற்றமுளார் பரவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஆற்றிலொரு கால்சேற்றில் ஒருகாலாய் அலைந்தேனே. (44)

பேறுபெற நிற்பார்க்குப் பெருமழைபோல் நீயருளை
ஈறிலஎ விற்றருவாய் எனினுமெனக் கென்தந்தாய்?
தேறுபவர்க் கினியபிரான் சிதம்பரசுப் பிரமணியா,
ஆறுநிறை வெள்ளம்வந்தும் அசுழம்நக்கு தல்போன்றேன். (45)

தேனையளி பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
யானுடைய மனமென்னோ டினிதிருந்தும் என்நலத்தை
ஈனமுறக் கெடுத்தென்னை ஏழ்நரகுக் காளாக்கும்;
ஆனையறிந் தறிந்துந்தன் பாகனையே அடர்க்குமன்றோ? (46)

ஊனைநத்தி வருமனத்தை ஒருமையுற நிறுத்தறியேன்;
நீநினைத்தா லன்றியது நிறைவேற லாகாதே;
தேனைநத்தும் கடம்பலங்கற் சிதம்பரசுப் பிரமணியா,
ஆனைகட்டச் சிலந்தியின்நூற் காற்றலுண்டோ? அருளுதியே. (47)

கட்டுப்பட் டேன்மலத்தில்; கதிகாண தலமந்தேன்;
பட்டுப்பட் டுத்தேறப் பணிந்தேன்;நீ அருள்வழங்காய்;
சிட்டப்பத் தர்வணங்கும் சிதம்பரசுப் பிரமணியா,
இட்டுக்கெட் டார்இல்லை என்பதுநீ அறியாயோ? (48)

மடங்கெடவே அந்தரங்க மனமென்னும் கோயிலிலே
இடங்கொடுத்தால் நீயவிச்சை ஈடழிப்பாய் எனஅறிந்தேன்;
திடம்பெறுவார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
இடங்கொடுத்தால் மடம்பிடுங்கும் இயல்பினன்நீ யன்றேயோ? (49)

மிடைபலவாம் துயரத்தில் மிகமெலிந்தேன்; அறிவழியா
திடைசிறிதே நினைந்திருந்தேன்; இந்தநிலை யாற்பயனென்?
திடுமெனவே வந்தருள்வாய்; சிதம்பரசுப் பிரமணியா,
இடையனெறிந் திடுமரம்போல் இடர்ப்பட்டு நின்றேனே! (50)

அறங்குலவும் நன்னெறியில் அமைவதற்குப் புகுகின்றேன்;
திறங்குலவும் ஆயிரமா யிரந்தடைகள் செறிவனவால்;
சிறந்தபுகழ் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
இறங்குதுறை நீத்தானல் ஏறுவதும எப்படியோ? (51)

கடல்மெச்சும் கருணையன்உன் கால்பிடித்தென் மனமமையும்
படிபற்றும் வாழ்க்கையின்றிப் பலர்மெச்ச வேண்டுகின்றேன்;
திடமுற்றூர் சூழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
உடலுக்குப் பால்குடியா தூருக்கே குடித்தேனே. (52)

உடையவன்நீ; உடைமைநான்; உனதருளை யான்பெறவே
கடைவிழியால் எனைப்பாரா விடினெனக்குக் கதியுண்டோ?
திடரும்விளை உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
உடையவன்பா ராப்பயிர்தான் ஒருமுழங்கட் டைகண்டாய், (53)

மதிபெருத்தும் பொருள்பெருத்தும் மாட்சியெலாம் மிகப்பெருத்தும்
துதிபெருத்து நினைப்பணியார் தோற்றத்தா லென்னபயன்?
திதிபெருத்த வாழ்வுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஒதிபெருத்தால் உத்தரத்துக் குபகாரப் படுங்கொல்லோ? (54)

இப்புலைநோய் மிகுமுடலம் இருக்கும்போ தேயுன்னை
வெப்பமறப் போற்றியன்பு மேவிவணங் காவிட்டால்,
செப்புபுகழ் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
உப்புவைத்த மண்பாண்டம் போலே உடையுமன்றோ? (55)

வரமேற்று நின்னருளால் மாட்சிபெறும் நின்னடியார்
பரமேற்றாய் நீஎன்பார்; பத்திபண்ணி விளைவுபெறேன்;
திரமேற்றார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
உரமேற்றி உழவுசெய்யா உழவன்போல் ஆனேனே! (56)

குரலெழுப்பிக் கூவிடினும் குத்திக்கொண் டழுதாலும்
பரவுவினைப் பயனதனை நுகராத படிவருமோ?
சிரம்முறார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
உரலிலகப் பட்டபொருள் உலக்கைக்குத் தப்புமோ? (57)

கட்டாமல் திரிமனத்தை நின்னடியிற் கட்டுவித்தார்
முட்டாத இன்பமுறல் அறிந்தேங்கி முனைகின்றேன்;
செட்டார்வார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட்டேனே! (58)

கெட்டவன்நான் என்றாலும் கேண்மையொடும் எனைப்பெற்று
விட்டவன்நீ; எனைமறுக்க ஒண்ணாது; விரைந்தருளாய்;
தெட்டலிலார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
எட்டிமரம் ஆனாலும் வைத்தவர்க்கன் பிருக்குமன்றோ? (59)

அடுப்பாரே துரைத்தாலும் அதைநம்பி ஒன்றைவிட்டொன்
றெடுப்பானே யாய்வீணே எதிலும்நிலை கொள்ளேன்யான்;
செடிப்பாடே கனியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
எடுப்பார்கைப் பாவைபோல் இருந்தேங்கி நொந்தேனே! (60)

திண்ணமுற நின்னடியே சிந்திக்க எண்ணுகின்றேன்;
நண்ணிடையே மனந்திரியும்; நான்செய்த பாவமன்றோ?
தெண்ணறவார் பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
எண்ணெயற மூழ்குதலாம்; எழுத்தறமூழ் குதலாமோ? (61)

உருவில்லாய் ஆயிடினும் ஓரா யிரம்உருவம்
கருதுபவர்க் காக்கொண்டாய்; காட்சியெனக் கருளாமல்
திரும்பியும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
எருவிலதாம் பயிர்போல ஏங்கும்வண்ணம் விட்டனையே! (62)

சீருறையும் நின்பாதம் சேர்ந்துறைந்தால் மனம்நன்ரும்;
பாருறையிற் பயனின்ரும்; படர்இரண்டும் ஒருங்குறுமோ?
தேருறையும் பதியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஒருறையில் இரண்டுவாள் உறைவதுண்டோ? உரையாயே. (71)

செவ்வியுற அன்ருெருநாள் திகழ்நாவல் மரமேறி
ஒளவையினைத் தருக்கடக்கி அவள்கவிகள் கேட்டாயே;
தெவ்வரிலா உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
ஒளவையின்வாக் குச்செவ்வை வாக்கெனவே ஆக்கினையே. (72)

செஞ்சிலம்பார் திருவடியாய், சிதம்பரசுப் பிரமணியா,
அஞ்சவரும் காலன்வந்தால் அரணாகும் எனப்பணியேன்;
கஞ்சிகண்ட இடம்கயிலை, சோறுகண்ட இடம்சுவர்க்கம்,
துஞ்சவரும் இடம்முத்தி என்றிருந்தே சோம்பினனே. (73)

ஒட்டுமதி தலைவைத்தே உள்ளேவீண் ஆசைவைத்தாய்;
எட்டுணையும் பயனின்றி இவ்வவா இரைதேடும்;
திட்டலிலார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கட்டுச்சோற் றுப்பொதியில் பெருச்சாளி கட்டுவரோ? (74)

அடலுடைய ஐம்பொறியின் வழிச்செல்லும் அவலமனம்
இடனுடைய நின்னடியில் இராமல்அலைந் துறுவதனுல்
திடனுடையார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கடலிலலை யுந்துரும்பு போன்றடியேன் கலங்கினனே. (75)

ஒருதலையில் உலகவியல் ஒருதலையில் அகந்தையிருள்
இருதலையும் அச்சுறுத்த இருந்தேங்கி வாழ்கின்றேன்;
திருமருவும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
இருதலைக்கொள் ளியினுள்ளே எறும்பதுபோல் மயங்கினனே! (76)

கிடைத்தேறி யிருக்கின்ற இப்பிறவி கேழுறுநின்
அடிக்கேவற் கெனஅடையா தழியின்பத் தாழ்கின்றேன்;
திடுக்கேறி யமரர்பணி சிதம்பரசுப் பிரமணியா,
கடைத்தேங்காய் தனைவழியிற் கணபதிக்கே உடைப்பாரோ? (77)

பண்கெட்டுப் பலங்கெட்டுப் பாழுடலம் போகுமுன்னர்
விண்பெட்ட நின்னடியே விழைந்தருளைப் பெறஅறியேன்;
திண்பட்டார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கண்கெட்டுப் போனபின்னர்க் கதிர்வணக்கம் செயல்ஆமோ? (78)

மெலிவடையும் இவ்வுடலாம் வீட்டினிலே ஐம்பொறியும்
நலிவுசெய்து வாழும்;இதில் நான்இருந்தேன்; தனிவீட்டில்
செலவருள்வாய்; உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
எலிவளையே யானாலும் தனிவளைதான் ஏற்றமன்றோ? (63)

விள்ளுமென்றன் குறையையெல்லாம் மிகச்சொல்லிப் புலம்புகின்றேன்;
நள்ளுகின்ற பன்னிரண்டு நற்செவியில் ஏருதோ?
தெள்ளுதமிழ் சேருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
எள்ளுளெண்ணெய் போலுறைந்தாய்; யான்புலம்பல் அறிந்திலையோ? (64)

வெறும்போலி யாமனக்கல் மீதுன்றன் அடிமெல்ல
உறும்பேறு பெற்றேனேல் ஒருநாளஃ துருகுமன்றோ?
தெறுஞ்சூரை மாய்வித்த சிதம்பரசுப் பிரமணியா,
எறும்பூரக் கற்குழியும் என்றமொழி பொய்யேயோ? (65)

நாட்டுமறை ஆறங்கம் நவைதீர் புராணமெலாம்
கேட்டறிந்தும் செயலில்லாக் கெடுமதியார்க் கேதுபயன்?
தேட்டமுளார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஏட்டிலுள சுரைகறிக்கிங் குதவுமோ? இயம்பாயே. (66)

வாழவெனை நீஆண்டால் வல்லநம னுங்குறுகான்;
தாழவெனை விட்டுவிட்டால் சாருமெவ ரும்வெறுப்பார்;
சீழுடைய பிறவிபெருச் சிதம்பரசுப் பிரமணியா,
ஏழையெனின் மோழையும்பாய்ந் திடுமென்ப தறியாயோ? (67)

தெய்வபக்தி யோருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஐவருக்கும் தேவி அழியாத பத்தினிபோல்
மெய்வகுக்கும் ஐம்பொறியின் ஊடேதான் வீற்றிருந்தும்
உய்வகையைப் பெறமனத்துக் கோருரையைச் சொல்வாயே. (68)

தொட்டதொட்ட செயலெல்லாம் தொட்டுவிட்டு நிலையின்றி
விட்டுவிட்டுக் கோணலுற மேவும்மனம்; என்செய்வேன்!
செட்டுமுற்று வாருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஒட்டகத்துக் குடம்பெல்லாம் கோணலென உற்றதுவே. (69)

வேட்டலற ஒருமையுற வெம்மனத்தைக் கட்டுகிலேன்;
நாட்டுதிண்ணம் இன்றிஎண்ணம் நழுவியவம் ஆதுமரோ!
தீட்டுகவி யார்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
ஓட்டையுறு சங்கூது பரியாதென் றுணரேனே! (70)

மண்ணிலுனக் கபசாரம் மாபாவி செய்திடினும்
நண்ணுமுன்றன் சேயன்ருே? நலிந்தென்னை அடலாமோ?
திண்ணமுளார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கண்ணில்விரல் பட்டக்கால் கத்தியினுல் தறிப்பாரோ? (79)

புலப்பாலே செல்லுகின்ற புன்மனத்தை ஒருமுறைநின்
நலப்பார்வை யாற்பார்த்தால் போதும்,மிக நலம்வரும்;நித்
திலப்பாலே ஒளிபோலும் சிதம்பரசுப் பிரமணியா,
கலப்பாலுக் கொருதுளியே பிரைகுற்றிற் காணுதோ? (80)

தளைபடா மனத்துள்ளே தாமரைத்தாட் கன்புநட்டு
முளைவிடா முன்எண்ணம் பலபலவா முளுமரோ!
திளைநருப் பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
களையெடாப் பயிர்வீணே காற்பயிராம் என்பாரே. (81)

காட்டுதனு கரணமொடு புவனபோ கந்தந்தாய்;
வீட்டுநெறி காட்டினுய்; வினைவெடுக்கச் செயல்செய்யேன்;
தீட்டரிய திருமேனிச் சிதம்பரசுப் பிரமணியா,
காட்டுமன்றி ஊட்டாது கடவுளென்றல் மறந்தனனே. (82)

ஈதெனக்கு நட்பாக இருக்குமென மனத்தைநம்பின்
தீதெனக்கு வரச்செய்யும்; சிலகாலம் படிந்திருக்கும்;
சீதமுற்ற வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
காதறுக்கும் ஒருகால்;பின் பேனெடுக்கும் கருங்குரங்கே. (83)

வரங்கெழுமு கல்வியினுல் மாட்சியுண்டாம் என்பார்கள்;
அரங்கெழுமி ஞற்போலச் சிலரதனுல் தீங்குசெய்தார்
திரங்கெழுமு வாருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
குரங்கின்கைப் பூமாலை கொடுத்ததுபோல் ஆயிற்றே. (84)

வெருளுறவே துன்பந்தா; வினையறவே இன்பந்தா;
அருளுறலொன் றேவேண்டும்; அதற்கென்னை ஏதுஞ்செய்;
தெருளுறுவார் போற்றுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
குருடனுக்கு வேண்டுவது கோலொன்றே அன்றேயோ? (85)

அளித்துப்பே ணுந்தேகம் அடைந்துநினைப் பணிந்துவினை
ஒளித்துப்போ குஞ்செயலை உஞற்றுமல் பினும்சேர்த்தேன்;
தெளிக்கப்பா டுரும்பைவளர் சிதம்பரசுப் பிரமணியா.
குளிக்கப்போய்ச் சேறணிந்த கோலங்கொண் டிருந்தேனே. (86)

முறையுணர்ந்து நின்னையெண்ணி மோனநிலை பெற்றவர்கள்
நிறைவுபெறல் பிறர்காண நீட்டியுரை பேசாரே;
சிறையணைநீர் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
நிறைகுடந்தான் துளும்பாத நீர்மையவர் உணர்த்தினரே. (87)

மெய்யூன்றிப் பொய்தவிர்ந்து விட்டபிற கன்றோபூ
சையூன்றிச் செயல்வேண்டும்? தளமின்றி வீடுண்டோ?
செய்யூன்றும் வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
கையூன்றிப் பின்னன்றோ கரணம்போ டுதல்வேண்டும்? (88)

தருக்கழிய எனையாண்டு தாட்கடிமை செயச்செய்து
உருக்கியுளே பேரின்ப ஊற்றையெழச் செய்துவிட்டால்
திருக்ககல்வோர் பயிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
சருக்கரைப்பந் தலில்தேனின் மாரிபெய்த தகையாமே. (89)

வருமுதுமைப் பருவத்தில் மலர்த்தாட்குப் பூசைசெய்ய
மருவுமெலாப் பண்டமும்நான் வைத்திருந்தேன் எனலாமோ?
திருவுடையர் சேருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
சருகரிக்க நேரமன்றிக் குளிர்காயச் சாலாதே. (90)

நாணேரு வகையுன்றன் நாமத்தைச் சொலியன்பில்
ஏணேற நிற்கமுயல் கின்றபொழு துளம்திறம்பும்;
சேணேறும் சீருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
சாணேற முழஞ்சறுக்கும் சங்கடத்தில் ஆழ்ந்தேனே. (91)

பித்தராய் உனதருளைப் பெற்றுமனம் அழிந்தவர்தாம்
தத்துமா கடலுலகம் சாரின்பம் பேணுவரோ?
சித்திசேர் வாருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
செத்தமா டதுபசும்புல் தின்பதுண்டோ? செப்பாயே. (92)

சேற்றில்நட்ட தூணைப்போல் செறியாசைப் பட்டமனம்
ஆற்றலுடன் நிலைநிற்கும் அத்தகைமை கூடாதே;
தேற்றரவு தருமுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
போற்றிமனம் ஒருமைவழி போவதற்கே அருள்வாயே. (93)

சோகத்தைத் தவிர்ந்துனைத் துதித்துருக மாட்டாமல்
வேகத்தைப் பெறும்அறிவு வித்தையுமோர் வித்தைகொலோ?
சேகற்ற அன்பர்பணி சிதம்பரசுப் பிரமணியா,
தாகத்துக் குதவாத தண்ணீரோர் தண்ணீரோ? (94)

நீமயல்போக் கிச்சாந்த நிலையருளிக் கருணைசெய்தால்
பூமிசையே வளையவந்தும் பொறப்பழியா திருப்பேனே;
சேமமலி யுரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியா,
தாமரையின் இலைமேலே தண்ணீர்போல் ஆவேனே. (95)

பற்றிலெளி யேனிளைத்துப் பணியாமல் திறம்பிடினும்
உற்றவெனக் கெவைவேண்டும், அவையெல்லாம் உதவுகின்ருய்;
தெற்றிமணி ஒளிருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
பெற்றமனம் பித்தந்தப் பிள்ளைமனம் கல்லன்ரே? (96)

தினங்காவல் பிறர்செய்யத் திரியாமல் இருப்பவர்கள்
முனங்காவல் இன்றெனிலோ முகங்கோணி அழிம்புசெய்வர்;
சினங்காணர் வாழ்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
மனங்காவல் அன்றிஒரு மதில்காவல் ஆகுமோ? (97)

பணிந்துனையே போற்றிமனம் பக்குவப்பட் டிருப்பார்பால்
நிணந்துவக்கும் சூலநமன் நின்ருலும் அஞ்சார்கள்;
திணந்துலங்கு வார்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
துணிந்தவர்க்குக் கடல்முழங்கால் அளவென்று சொல்வாரே. (98)

இணையோதல் அரியஉன்றன் இன்னருளின் வலியுண்டேல்
அணையீறு படுமரணத் தப்பாலும் துன்பமிலை;
திணையேறு வாருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியா,
துணையோடு நெடுவழியில் துன்னுவார்க் கச்சமுண்டோ? (99)

எங்குலத்தை வாழ்விக்க எழுந்தருளும் இன்னமுதே,
தெங்குவளர் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியா,
பொங்குமனத் தில்வடிவம் பூப்பஎன்றும் நீயிருந்தால்
மங்குல்பெற்ற மயில்போல மகிழ்ச்சிவெள்ளம் மூழ்குவனே. (100)

20-1-65.

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்
# தூது மாலை

(தரவு கொச்சகக் கலிப்பா)

செங்கமலத் தோனூர்தி யாகிச் சிறந்தொளிர்ந்து
துங்கமுறு பாலில்நீர் துணிந்துபிரி **வெள்ளனமே,**
சிங்கமெனத் தேவர்பணி சிதம்பரசுப் பிரமணியன்
அங்கடம்ப மாலைபெற அவனிடத்தே செல்லாயே. (1)

என்றுமிணை பிரியாமல் இணைந்தன்பு செய்பெருமை
**அன்றில்**எனும் புள்ளே,நின் அடிபரவி வேண்டுகின்றேன்,
தென்றலுலாம் உரும்பைவளர் சிதம்பரசுப் பிரமணியன்
ஒன்றுமுரத் துறைமாலை உரைத்தடைந்து தருவாயே. (2)

நம்புறவே பாலையிலும் நலிவடையா தேவாழும்
அம்**புறவே,** நின்னன்பை ஆதரித்தேன்; வயலெல்லாம்
செம்புனல்பாய் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியன்
உம்பர்பிரான் பாற்சென்றென் உறுதுயரம் உரையாயே. (3)

ஆயிரங்கண் இந்திரன்போல் அழகுடைய தோகைபெற்றுத்
தூயகுகன் றனைமேற்கொள் சுந்தரஞ்சேர் பசு**மயிலே,**
தேயலிலா வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
தாயனையாற் கென்காதல் சாற்றியளி செய்யாயே. (4)

வசந்தம்வந் தாற்பாடி மாந்தளிரைக் கோதியின்பத்
திசைந்தகருங் **குயிலே**யுன் இரக்கத்தை வேண்டுகிறேன்;
தெசந்தருதிக் குயருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
வசஞ்சென்றென் மயலுரைத்து மாலைகொண்டு வாராயே. (5)

நாவையினி தாகவைத்து நயமொழிசொல் லுங்கவின்சேர்
**பூவை**எனும் பறவையுன்னைப் புகழ்ந்தொன்று வேண்டுகின்றேன்;
தேவரெலாம் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியக்
காவலற்கென் காதலுரைத் தளிபுரியக் கடவாயே. (6)

வயல்விளையும் செந்நெல்லை மனமுவந்தே யுண்டினிது
பயில்மருதத் தாராவே, பாங்குடனே வேண்டுகின்றேன்;
செயிரடையாப் பதியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
அயில்வேலற் கென்னிலைமை அன்பினிற்சென் றுரையாயே. (7)

மேனின்ற படிகாரின் வீழ்துளியை உண்டுவக்கும்
வானம்பா டிப்புள்ளே, மனமிரங்க வேண்டுகின்றேன்;
தேனும்பா லும்போலும் சிதம்பரசுப் பிரமணியக்
கோனின்பா லேசென்று குளிர்மாலை கொணராயே. (8)

ஆவலுடன் வேண்டுகிறேன்; அவன்கொடியாய் மேலுயரும்
சேவலே, செங்கதிரோன் சேர்திறஞ்சொல் குரலுடையாய்,
சேவலான் தருமைந்தன் சிதம்பரசுப் பிரமணியன்
மாவலான் திருமார்பின் மாலைகொண்டு வாராயே. (9)

பாலைநிலத் தினில்வெம்மை பாராமல் வாழ்ந்துவக்கும்
சீலமுடைப் புல்லூறே, சேவித்து வேண்டுகின்றேன்;
சேலவிரும் வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
வேலவன்பால் என்துயரம் விளர்பித்தார் கொணராயே. (10)

செங்கால குறும்பூழே, சிறிதெனக்கே பரிந்தருளாய்;
வெங்காலன் வாராமல் விறலருளைச் செய்முருகன்,
தெங்காலும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியன்
அங்காலும் மார்பத்தின் அலங்கல்கொண்டு வாராயே. (11)

மனிதர்விடு மூச்சுமணம் வாயாத மலைமேலே
இனிதுறுசந் தனத்தேனை எய்திமிசை கோத்தும்பீ,
செனிபவமாற் றிடுமருளான் சிதம்பரசுப் பிரமணியன்
தனியெழின்மார் பத்திருத்தார் தரவாங்கி அளிக்குதியே. (12)

மரமெல்லாம் பொதுளுகின்ற வண்டளைழயி னிடையமர்ந்தே
உரமெல்லாம் சேர்ந்துவப்பின் ஒளிர்கின்ற செம்போத்தே,
திரமெல்லாம் தருமுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
வரன்பாலென் காதல்நோய் வழுத்துதற்குச் செல்வாயே. (13)

காட்டையெலாம் சுருதிபெறு கவின்மனையாய் ஆக்குகுரல்
நீட்டுகின்ற சிள்வண்டே, நீயெனக்கோர் உதவிசெய்வாய்;
தீட்டரிய பேரெழிலான் சிதம்பரசுப் பிரமணியச்
சேட்டனையே நீயடைந்தென் செறிதுயரம் செப்பாயே. (14)

திணையினடி போற்கால்கொள் பைந்தூவி சேர்நாராய்,
அணையெனநின் றணையன்பின் அணிவேண்டித் தொழுகின்றேன்;
சினைபடர்பூம் பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
எணையடையும் வழிசென்றங் கியம்பியினி வாராயே. (15)

தவஞ்செய்வார் போலொருகால் தனிநின்று மீன்பார்த்து
நவஞ்செய்யும் வெண்கொக்கே, நயந்துனையே வேண்டுகின்றேன்;
சிவன்செய்ய மகன்குமரன் சிதம்பரசுப் பிரமணியன்
கவின்செய்யும் மார்பலங்கல் கடிதுபெற்று வருவாயே. (16)

மத்தளத்தை அடிப்பவர்கை மானச் சிறகடித்துத்
தத்துபுனல் மேற்பறந்து சார்சிரலே, உனைப்பணிந்தேன்;
சித்திதரும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணிய
உத்தமன்றன் திருமார்பத் தொளிர்மாலை பெற்றளியே. (17)

அஞ்சுகுணத் தாற்பொலிந்தே அருங்குயிலின் பார்ப்பினையும்
எஞ்சலறப் பொரித்துவிடும் இனக்காக்காய், வேண்டுகின்றேன்;
செஞ்சிலம்புச் சேவடியான் சிதம்பரசுப் பிரமணியன்
விஞ்சுமுரத் தின்மாலை வேண்டியெனக் கீவாயே. (18)

காலையிலே குரல்காட்டிக் கடிதன்பர் தமையெழுப்பிச்
சாலையிலே நன்னிமித்தாய்ச் சாருங் கரிக்குருவீ,
சேலைவளர் வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
மாலைதர வாங்கிவந்தென் மன்னுயிரைக் காப்பாயே. (19)

தேனெங்குக் கிடைக்குமென்று திரிந்தலரும் பூவெல்லாம்
தானளைந்து தாதூதும் சால்புடைய கருவண்டே,
சேனையினல் அதிபதியாம் சிதம்பரசுப் பிரமணியன்
மானபரன் மார்பின்மலர் மாலைபெற்றுக் கொணராயே. (20)

பவளமெனும் அலகுடையாய், பசுநிறத்தாய், பால்குடிப்பாய்,
சுவைபெறவே சொற்பேசிச் சுகம்பெருக்கும் கிளிப்பிள்ளாய்,
திவளும்வளம் சேருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
கவளமத யானையினுற் றென்காதல் கழறுயே. (21)

இன்னலெவை வந்தாலும் இனிதேற்கும் ஞானியர்போல்
மின்னுமணிப் பரலுண்டு மேய்கின்ற தூதுணமே,
செந்நெலவிர் வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
மன்னவற்கென் மயனோயை வகுத்தினிது வருவாயே. (22)

தண்ணிலவின் கதிருண்டு தாங்கலுறு உவகைபெற்று
நண்ணுகின்ற **சகோரம்**எனும் நற்புள்ளே, எனக்கருளாய்;
தெண்ணிலவு புனலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
அண்ணலுழைப் படர்ந்தென்றன் அருந்துயரம் இயம்பாயே. (23)

வட்டவடி வாயிருக்கும் வண்ணமுறும் உயர்புள்ளே,
சிட்டர்புகழ் **சக்கரவா கப்**பெயரோய், திருமுருகன்
செட்டியெனும் திருநாமச் சிதம்பரசுப் பிரமணியற்
கிட்டியென்றன் துயர்கிளந்து கேழ்மாலை கொணராயே. (24)

திருமாலின் வாகனமாய்த் திகழ்புள்ளின் அரசாகி
வருமானக் **கருடனே,** வாழ்த்துகின்றேன்; எழில்முருகன்
திருமாரு உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியன்
மருவாரும் மார்பலங்கல் வாங்கிவந்து நலம்செய்யே. (25)

மயில்போல ஆடுவதை மற்றவர்சொல் பழிஎண்ணு
துயர்ஞானி போல்பயிலும் உத்தமநல் **வான்கோழி,**
செயிர்தீர்க்கும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணிய
அயிலோன்முன் சென்றென்றன் அருந்துயரம் பகராயே. (26)

வெம்புகின்ற பாலையினும் விளையாடிப் பறந்துவந்து
பம்புகின்ற **கணந்துள்**எனும் பறவையே, வேல்முருகன்
செம்பொருளாம் உரும்பைவளர் சிதம்பரசுப் பிரமணியன்
வம்புடைய மலர்மாலை வாங்கிவந்து வழங்குவையே. (27)

நிணந்துன்னும் புலவடங்க நிலத்தினிலே கிடந்தழுகும்
பிணந்தின்று நலஞ்செய்யும் பெரும்பறவை யாம்**கழுகே,**
திணந்துன்னும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
மணந்துன்னும் கடம்பமலர் மாலைகொண்டு தருவாயே. (28)

வானத்தின் மிசைமிகமேல் பறந்துசெல்லும் மாண்புடையாய்,
ஈனத்தை அடையாத **செம்பருந்தே,** இசைப்பதுகேள்;
சேனத்து வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
கானநத்து மார்பலங்கல் கடிதடைந்து வழங்குதியே. (29)

மரம்பழுத்த தறிந்துசென்று வயங்குவிருந் தருந்தியின்பின்
நிரந்துதொங்கும் **வௌவாலே,** நின்பாலே ஒன்றுரைப்பேன்;
தெரிந்துணர்வார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
உரந்திகழ்ந்த மாலைதந்தென் உரங்காத்து நலஞ்செய்யே. (30)

வேடருக்கோர் உறுதுணையாய் வீங்கொலியால் இனம்பிடிக்கும்
பீடுடைய **காடை**யெனும் பேர்ப்புள்ளே, வேல்முருகன்
சேடுடையார் தொழுமுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
ஏடுடைய மார்பலங்கல் இரந்தடைந்தே ஈவாயே. (31)

பூவிதழ்வந் திடையுறினும் புலம்பியிணை பிரியாமல்
மேவுகின்ற **மகன்றிலாம்** மிளிர்புனலில் வாழ்பறவாய்,
தேவர்பணி உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியச்
சேவகன்பால் என்துயரைச் செப்பியினி தருள்வாயே. (32)

வெம்பாலை யினில்சிறிதும் வெறுப்பின்றி வாழ்வுகந்து
பம்பாநிற் கும்**வங்காப்** பறவாய்,உன் பால்இரந்தேன்;
செம்பான்மை சேருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
வம்பாரும் மார்பலங்கல் வாங்கிவந்தென் துயர்களையே. (33)

சீவன்முத்தர் போல்வெம்மை சேர்நெருப்பும் தின்றுவந்து
மேவுகின்ற **தீக்கோழி,** விளம்புகின்றேன் விண்ணப்பம்;
தேவர்புகழ் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
ஏவலவன் பாற்சென்றென் இடருரைத்து மேவுவையே. (34)

பிறபுள்ளைக் கூவியழை பெற்றியுடைக் **கவுதாரி,**
மறமுள்ளத் துடையசுரர் வாழாதே மாய்த்தபிரான்
திறமுள்ளார் பயிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
நிறமுள்ள தார்வாங்கி நிமிர்ந்தென்பால் படர்குவையே. (35)

குன்றமதில் மரப்பொந்தில் குந்திக்குக் கூவென்று
துன்றுகுரல் காட்டுகின்ற **கூகை,**நின்பால் சொல்கின்றேன்;
சென்றடையாத் திருவுடைய சிதம்பரசுப் பிரமணியன்
நன்றடையும் சந்நிதிப்போய் நான்படுநோய் பகராயே. (36)

இரவிடையே விடையின்மணி இனிதொலிக்க அதன்மேலே
மருவு**நுளம் பே,**உன்பால் வரமொன்று வேண்டுகின்றேன்;
தெருவினிதாம் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
திருமுனர்ப்போய் என்னுடைய செல்லல்சொல்லித் திரும்புவையே. (37)

யான்நையா வகைசெய்ய இறைஞ்சுகின்றேன் உனை;வளஞ்சால்
**யானையங் குருகே,**நீ இளமுருகன் சிவன்மைந்தன்
தேனையலர் பொழியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
வானவன்பால் என்துயரை வகுத்தொருகால் வருவாயே. (38)

வாழியுனைத் தொழுகின்றேன்; மனம்அறிந்து பழகுகின்ற
தோழியுனை யன்றிஎன்றன் துயர்தீர்ப்பார் ஆரேயோ?
சீழுடைய பிறப்பொழிக்கும் சிதம்பரசுப் பிரமணியன்
தாழுரத்திற் றார்வாங்கித் தந்தால்என் உயிருயுமே. (39)

வஞ்சமிலா தென்விருப்பம் மன்னியுணர் என்நெஞ்சே,
எஞ்சலிலா தென்னோடே இணங்கியுறை தருகின்றாய்;
செஞ்சொல்சேர் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணிய
மஞ்சற்கென் வேதனையை வகுத்துத்தார் வாங்குவையே. (40)

ஐந்திலக்க ணம்சிறந்தே அருங்கவிகள் மிகப்பரந்து
முந்துமொழி பலவற்றின் முன்னிருக்கும் செந்தமிழே,
சிந்துவண்டு பயில்உரும்பைச் சிதம்பரசுப் பிரமணியக்
கந்தனுரக் கந்தமலர் காதல்செய்தேன்; பெற்றளியே. (41)

செய்யாமற் செய்யுதவி செய்வார்போற் கிளர்ந்துமழை
பெய்யாநிற் குங்கரிய முகிலே,என் பேச்சுணராய்;
செய்யாரும் வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
நையாநின் றுருகுமென்றன் நடையுணரக் கூறுவையே. (42)

வள்ளிக்குத் தாயாகி மாதேவன் கரத்தமைந்த
புள்ளிமா னே,உன்பால் புகல்கின்றேன்; செவியேற்பாய்;
தெள்ளியோர் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
வள்ளியோற் கென்நிலையை வகுத்துரைத்து மீள்வாயே. (43)

வானேறும் வாழ்வமரர் போற்றுகின்ற மாதேவன்
தானேறும் ஆனேறே, தாழ்ந்துரைக்கும் மொழிகேட்பாய்;
தேனேறும் பொழிலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
கானேறும் நீபமலர் மாலைபெற்றுக் கடிதடையே. (44)

மும்மதமும் பொழியஇரு முறம்போன்ற செவியினையாய்ச்
செம்மலுறு கருமலைபோற் றிருவுருவார் குஞ்சரமே,
செம்மையுறு வாருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
அம்மையுறு தார்வாங்கி அளித்தாயேல் வாழ்குவனே. (45)

செவ்வாயாய் விளங்குகின்ற தெய்வத்தின் வாகனமே,
அவ்வீர வாகுவின்பால் அடங்கிநின்ற ஆடே,வெந்
தெவ்வாவார் வலிதொலைக்கும் சிதம்பரசுப் பிரமணியன்
துவ்வாத அமுதனையான் தோண்மாலை கொண்டணையே. (46)

துள்ளிவந்து கொட்டையுண்டு சுறுகறுப்பாய் மேவுகின்றாய்;
உள்ளியிரா மர்தடவ உவந்தசீ றணிற்பிள்ளாய்,
தெள்ளியவர் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
அள்ளிலைவேல் வீரனுக்கென் அருந்துயரம் இயம்புவையே. (47)

பெரும்படையில் ஒருபடையாய்ப் பெருந்தேரை ஈர்த்துய்க்க
வரும்பணியும் மேற்கொண்டு வையாளி செல்பரியே,
திரும்பலுறும் பிறவிதராச் சிதம்பரசுப் பிரமணியன்
அரும்பரமன் பாலேகி அடியேன்றன் நிலையுரையே. (48)

இறைவற்கே ஆட்டுகின்ற ஏற்றமுள பொருளைந்தும்
நிறைவுற்றுத் தருகின்ற நீர்மையுடை எழிற்பசுவே,
சிறையுற்ற நீருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
கறையற்றான் பாலேஎன் கடுந்துயரம் புகல்வாயே. (49)

செம்மணியைத் தலைசுமந்து சிவனுக்குப் பூணணியாய்
எம்மருங்கும் வளைந்துசெலும் இயல்புடைய நல்லரவே,
செம்மைமன்னும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
வெம்மைதவிர் மார்பலங்கல் விழைந்துபெற்றுத் தருவாயே. (50)

விலங்கினத்தின் மன்னாகி விறல்மிக்குத் தீரமிகுந்
திலங்குகின்ற கோளரியே, எளியேன்றன் உரையுணராய்;
சிலம்புபுனல் சூழுரும்பைச் சிதம்பரசுப் பிரம்மணியன்
நலங்குலவு தார்வாங்கி நல்கியெனைக் காப்பாயே. (51)

சோம்பலின்றிச் சுறுசுறுப்பே சொல்லுருவாய் உழைத்துணவை
ஓம்புகின்ற சிற்றெறும்பே, உன்னையிது வேண்டுகின்றேன்;
தீம்பறியார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
தேம்பரவு கடம்பலங்கல் தெரிந்துபெற்று வருவாயே. (52)

மாலவதா ரம்பத்தில் வந்தஒன்றே, உலகத்தை
ஏலும்வகை கீழ்ச்சுமக்கும் எழிற்கூர்ம மே,கேளாய்;
சேலுடைய வயலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
வேலுடையான் பாலடைந்தென் விழைவையெலாம் சொல்வாயே. (53)

பலியென்னும் அவன்முன்னே பாங்கினுருத் தாங்கிநின்ற
எலி,உன்பால் இதுசொல்வேன்; இளமையழி யாமுருகன்
செலல்நீங்கப் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
நலமோங்கும் திருமார்ப நன்மாலை கொணர்ந்தளியே. (54)

தாசரதி இராவணனைச் சங்காரம்செயப் படையாய்
வீசுவிற லுறச்சென்ற விலங்கினத்திற் சார்கவியே,
தேசுடையார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
ஈசரனுர்க் கென்மாலை இசைத்தொருகால் அருளாயே. (55)

வரகுணபாண் டியன்கேட்க மழைக்காலத் தேகுரலால்
அரகரவென் றேஒலித்த அருந்தவளை யே,கேளாய்;
திரமறிவார் போற்றுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியக்
குரவனிடைச் சென்றெனது குறைதவிரச் செய்வாயே. (56)

பன்னிரண்டி ராசியிலோர் பாலிருப்பாய், சிவனையன்பு
துன்னவவிர் திருந்துதே வன்குடியில் தொழும்நண்டே,
தென்னுடைய வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
என்னுடைய மணவாளற் கென்றுயரம் இயம்புவையே. (57)

வயிரவனுர் வாகனமாய் வாய்நன்றி யறிவுசிறந்
துயர்காவ லாய்மேவி ஒளிர்ஞமலி யே,கேளாய்;
செயிரோய்வார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
மயிலேறு வான்பாலென் மனத்துயரை வகுத்துரையே. (58)

அன்றுதிரு மால்வடிவம் ஆர்ந்ததுவும் ஆலவாய்
துன்றுசிவன் எடுத்ததுவும் தோன்றநிற்கும் வராகமே,
சென்றடைவார் பணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
வென்றிதரு விறன்மார்பம் விளங்கலங்கல் தரச்செய்யே. (59)

வள்ளியென்னும் தேவிகண்ணின் வடிவாகி மாலெடுத்துத்
துள்ளுமவ தாரத்தில் ஒன்ருகிச் சுடர்மீனே,
தெள்ளுபுனல் வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
வள்ளலென்றன் குறைதீர்க்க வரும்வகையே புரிவாயே. (60)

வருணனுக்கு வாகனமாய் வாளரம்போற் கோடுபெற்று
மருவுகின்ற சுருமீனே, வாழும்வகை செய்துவப்பாய்;
திருமருவும் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
மருமருவும் மார்பிலவிர் மாலைபெற்று வருவாயே. (61)

சாம்பவான் தன்னுடைய தழையுருவை நினைக்கச்செய்
தோம்புகின்ற கரடியே, உனக்கொன் றுரைப்பேன்கேள்;
தீம்புனல்சார் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
தேம்பொழியும் தோளலங்கல் யானடையச் செய்வாயே. (62)

சோழன்றன் கொடியினிலே தோற்றமளித் திமயத்து
வாழ்கின்ற **பெரும்புலியே,** வாழ்த்தியுனை இரக்கின்றேன்;
பேழைவயிற் ருன்தம்பி சிதம்பரசுப் பிரமணியத்
தோழன்பால் விரைந்துசென்றென் துயரமெலாம் நயந்துரையே. (63)

எவரெவர்எவ் வாறுநினைந் திருப்பரவர் இச்சைபோல்
அவிருருவம் கொள்பரன்போல் அடைநிறமாற் **றேந்தியே,**
சிவன்மதலை உரும்பைவளர் சிதம்பரசுப் பிரமணியத்
தவனுழையே சென்றெனது தாபமெலாம் சாற்றுவையே. (64)

மந்தமந்த மணந்துமலர் மணந்துதைந்து பொதியிலினின்
றுந்திவந்த **தென்றலே,** உனக்கொன் றுரைப்பேன்,கேள்;
செந்துவர்வாய் வள்ளிபங்கன் சிதம்பரசுப் பிரமணிய
அந்தணன்பால் யான்படும்நோய் அனைத்தையுமே பகர்வாயே. (65)

முனிவர்களும் மன்னர்களும் முன்னுவன முடித்தமைக்கும்
தனியுரிமை யுடையவிலைத் **தங்கமே,** எங்கள்பிரான்
செனிபிறவித் துயராறுக்கும் சிதம்பரசுப் பிரமணியன்
இனியன்உரத் தேயவிரும் எழிலலங்கல் பெற்றளியே. (66)

நவமணியின் முன்மணியாய் நாயகமாய்ச் சூரியனைத்
தவமுடைய முதல்வனுய்ச் சார்கின்ற **செம்மணியே,**
திவள்வளஞ்சேர் உரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
கவரழகன் திருத்தோளிற் கடிமாலை கொணர்வாயே. (67)

பச்சையொளி வீசியுமை பரந்ததிரு மேனிநினை
வைச்செய்யும் **மரகதமே,** அன்பிலுனை வேண்டுகின்றேன்;
செச்சையணி திருமார்பன் சிதம்பரசுப் பிரமணியன்
இச்சையெலாம் எனக்கருள இயம்பியளி செய்வாயே. (68)

குறைதவிர்ந்த நன்மணியாம் **கோமே தகமே,**உன்
நிறையொளியை வாழ்த்தியிது நேர்கின்றேன், கேளாய்நீ;
சிறையவிரும் புனலுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
நறைகமழும் மார்பலங்கல் நான்பெறவே கொணர்வாயே. (69)

நம்புகுகன் திருமேனி நலங்காட்டி வள்ளியின்வாய்
பம்புநிறம் காட்டியொளிர் **பவளமே,** இதுகேளாய்;
செம்புனல்பாய் தருமுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
நம்பனுழைச் சென்றுமலர் மாலைகொண்டு நல்குவையே. (70)

மிகவன்மை மேவியெலாம் வெட்டுகின்ற கருவியாய்த்
தகுமொளிசேர்ந் தேயிலகும் சால்புடைய **வயிரமணி,**
சிகையழலார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
நகைமலர்சேர் தருமாலை நான்பெறவே நல்காயே. **(71)**

வரம்பெறுவார் விலைகொடுத்து வாங்கியணிந் துவக்கின்ற
தரம்பெறுவார் நலம்பெறவே தருவயிடு **ரியமணியே,**
திரம்பெறுவாழ் வருளுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியப்
பரம்பரனை அணுகியென்றன் பரிவெல்லாம் பகர்வாயே.. **(72)**

கிரகத்தின் வெம்மையறக் கேழறிந்து வாங்கியணிந்
துரமுற்றூர் வாழ்த்துகின்ற ஒண்**புட்ப ராகமே,**
தெருமுற்றும் வீட்டுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
மருமுற்றும் திருமார்பின் மாலைபெற்று வருவாயே. **(73)**

திருமாலின் நிறம்வீசித் திகழ்**நீல மாமணியே,**
உருமாறிப் பிறக்குமவர்க் குயரருளை வழங்குதற்காத்
தெருவேறும் உரும்பைவளர் சிதம்பரசுப் பிரமணியன்
மருமாலை ஒருகால்நீ வாங்கியெனக் களிப்பாயே. **(74)**

குறமகளின் நகைபோலக் குளிரொளியை வீசியவள்
நிறமதனில் மாலையென நிலவுகின்ற **நித்திலமே,**
செறிவுடைய வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
அறவனெனை அடைந்தணைய அருந்தூது செல்வாயே. **(75)**

எவ்வாதும் போக்கியிள நங்கைமார் இணையச்செய்
**சவ்வாதே,** நின்மணத்தைப் பாராட்டிச் சாற்றுகின்றேன்;
செவ்வாயான் தேவர்பணி சிதம்பரசுப் பிரமணியன்
அவ்வாகில் அணிமாலை அவன்பாலே கொண்டளியே. **(76)**

அந்தனத்தில் நங்கைமார் ஆர்வமுடன் பூசுகின்ற
**சந்தனமே,** பொதியில்வள ருந்தனமே, சாற்றக்கேள்;
சிந்தனைமாற் றுரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணிய
மைந்தனையண் ணிச்சென்றென் மனத்துயரை வகுத்துரையே. **(77)**

கருநீறு படச்செய்யும் கண்ணுதலான் திருமேனித்
**திருநீறே,** உனைவணங்கிச் செப்புவது கேட்டருளாய்;
தெருவேறு வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
உருவேறு மாலையினை உற்றடைந்திங் குதவுவையே, **(78)**

பழனியிலே எம்பெருமான் பத்தர்பணிந் தபிடேகம்
விழைவுடனே செய்கின்ற **பன்னீரே**, விளம்புகின்றேன்;
பிழைபொறுக்கும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியன்
தழையலங்கல் போய்வாங்கித் தந்துதுயர் மாற்றுவையே. (79)

மிக்கபொன்போல் உரைக்குங்கால் விரவுநிறம் காட்டியரன்
தொக்கவிழி யிற்பிறந்த தூய**அக்க மணியே**,எண்
திக்குலவு புகழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியத்
தக்கவன்பால் என்துயரம் சாற்றித்தார் பெறுவாயே. (80)

எம்பெருமான் பூசைக்கா அன்பரெலாம் ஏந்திவர
நம்புவரந் தரச்செய்யும் நல்**வாழைத் தீங்கனியே**,
செம்புலத்து வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
அம்புயத்தில் அலர்மாலை யதுவாங்கி அணையாயே. (81)

சிவன்போல முக்கண்ணும் சீரோடும் சேர்ந்திளநீர்ச்
சுவைசாலப் பெற்றுடைய **தேங்காயே**, சொல்கின்றேன்;
திவம்போலும் மணியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
நவம்போதும் மணிமார்ப நாண்மாலை வாங்குவையே. (82)

பூசைசெய்வார் விரும்பிப்பெற் றேற்கின்ற பொற்பினொடு
வாசமுடைத் திரவியங்கள் மணந்துடைய **வெற்றிலையே**,
தேசுடையார் தொழுமுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
மாசரிய திருத்தோளின் மாலைபெற்று வருவாயே. (83)

நுண்ணறிவார் குருநாதன் நுவல்வதனை விரைந்தேற்கும்
பண்ணுடையார்க் குவமையாய்ப் பகறகின்ற **கற்புரமே**,
திண்ணுடையார் வாழுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
அண்ணலிடம் என்றுயரம் அன்பினுரைத் தடைகுவையே. (84)

ஆண்டவன்றன் பூசையிலே அரியமனுச் சொல்லியொளி
தூண்டவெடுக் கின்றசுடர்த் **தீபமே**, சொல்வதுகேள்;
தீண்டரிய பெரும்பொருளாம் சிதம்பரசுப் பிரமணியன்
மாண்டகுதார் வாங்கியெனை வாழ்விக்க வேண்டுவனே. (85)

நறுமணந்தந் தேவணங்கும் நல்லன்பர் பூசையிலே
குறைதவிர விளங்குகின்ற **குங்கிலியத் தூபமே**,
சிறைதவிரச் சுரர்க்கருளும் சிதம்பரசுப் பிரமணிய
இறையவனுக் கென்னின்னல் இன்னதென்று கூறுவையே. (86)

உருத்திரமா தியமனுச்சொற் றுயர்குடத்திற் பூரித்துத்
திருத்துளங்கும் அபிடேகம் செய்மஞ் **சனநீரே,**
செருத்துளங்க வெல்வேலான் சிதம்பரசுப் பிரமணியன்
மருத்துளங்கும் மாலையினி வாங்கிவரச் செல்வாயே. (87)

வள்ளியன்பிற் புனத்தணைந்து மாழாந்து குகனுருக
அள்ளியவள் **தருந்தினைமா வே,**யுன்ற னருள்வேண்டும்;
தெள்ளியவர் போற்றுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
உள்ளியவர் வினைதுடைப்போற் கென்துயரம் உரையாயே. (88)

உண்ணாடிப் பார்ப்பவருக் கோங்கார மாயொளிரும்
விண்ணோர்கள் தம்பிரான் வியன்பூசைக் **கண்ணாடி,**
திண்ணேறும் தோளுடைய சிதம்பரசுப் பிரமணியன்
தண்ணேறு தார்கொணர்ந்து தந்தால்நான் உய்வேனே. (89)

பல்லுபசா ரம்பயிலும் பண்புடைய பூசையிலே
நல்லொலிசெய் **யின்மணியே,** நாயகனென் உயிரனையான்
செல்லொலிசெய் வளவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணிய
வல்லவனுக் கென்துயரை வகுத்துவந்தால் உயிர்தளிர்க்கும். (90)

ஆயிரநா மஞ்சொல்லி யருச்சித்து நிவேதிக்கும்
**பாயசமே,** உனைப்பணிந்து பாங்குடனே வேண்டுகின்றேன்;
தேயசுரர் உரங்கெடுத்த சிதம்பரசுப் பிரமணிய
நாயகனை யணுகியென்றன் நடலையெலாம் நவில்வாயே. (91)

தீங்குழலா வகைபூசை செயும்போது வழங்குசுவைத்
**தேங்குழலாம்** பணியாரத் திருவே,நான் வேண்டுகின்றேன்;
தேங்குபுகழ் சாருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
பாங்குடைய திண்புயத்துப் பரிமாலை கொணர்வாயே. (92)

மங்கலமாய் வழிபட்டு மாண்புடனே நிவேதனம்செய்
**பொங்கல்**எனும் பிரசாதப் பொன்னே,என் குறைதீர்ப்பாய்;
திங்களணி சேகரன்சேய் சிதம்பரசுப் பிரமணியன்
பொங்குபுயத் திருமாலை போந்துகொணர்ந் துதவுவையே. (93)

கண்ணபிராற் கினியதுவாய்க் காதலுறும் சிற்றுணவே,
நண்ணுகுசே லன்கொணர்ந்து நல்கியஇன் சுவை**அவலே,**
திண்ணமுறும் திருவுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
வண்ணநறு மலர்மாலை வாங்கிவரப் போதுவையே. (94)

கயவதனக் கணபதிதான் காதலுடன் கையேந்தும்
நயமுடைய **மோதகமே,** நான்சொல்லும் குறைமுடிப்பாய்;
செயும்வினையில் உயருரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
உயும்வகையென் மால்தீர்க்க உறுமாறே உரையாயே. (95)

வட்டவடி வாய்த்துளையும் வாய்த்துநுகர் தற்கினிதாய்
நட்டவடை **யே,**தொழுது நான்சொலும்விண் ணப்பம்கேள்;
சிட்டர்தொழும் பதியுரும்பைச் சிதம்பரசுப் பிரமணியன்
மட்டலரும் கடம்பலங்கல் வாங்கிவந்து தருவாயே. (96)

எப்பொழுதும் எக்கோயி லேயெனினும் திப்பியமாய்ச்
செப்புபிர சாதமாய்த் திகழ்**அப்ப மாம்**அமுதே,
தெப்பமெனப் பிறவியொழி சிதம்பரசுப் பிரமணியன்
வெப்பொழிக்கும் தண்மாலை விழைந்துபெற்று மீளுவையே. (97)

கதலிநறுங் கனியுடனே கற்கண்டும் சர்க்கரையும்
மதுமுதலாந் திரவியமும் மருவியுறும் **அஞ்சமுதே,**
சிதைவறுக்கும் திருவருளான் சிதம்பரசுப் பிரமணியன்
கதுவுபுயக் கடிமாலை காதலித்தேன்; பெற்றளியே. (98)

எம்பெருமான் இனிதுவந்தே ஏர்பெறுமா றுடுவதும்
செம்பதும மலர்விரவித் திகழ்வதுமாம் **செந்தேனே,**
தெம்பருளும் உரும்பைநகர்ச் சிதம்பரசுப் பிரமணியன்
உம்பர்பிராற் கென்றுயரம் உரைத்துதவி செய்வாயே. (99)

மங்கலமாய் மஞ்சனமாய் மங்கையருக் கோரணியாய்
அங்கரிமா முகனையா வாகனஞ்செய் **மஞ்சளே,**
தெங்குமலி யுரும்பராய்ச் சிதம்பரசுப் பிரமணியன்
துங்கமுறுந் தோளணிந்த சுடர்மாலை கொணர்ந்துதவே. (100)

**20-1-65.**

---

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்
# இருசீர் அந்தாதி

(வஞ்சித் துறை)

வேதன் வணங்கும்
நாதன் இலங்கைச்
சீத உரும்பை
மீதில் ஒளிர்ந்தான். (1)

தானென் அகந்தை
போன நலத்தர்
மான உரும்பைக்
கோனை உகந்தார். (2)

தாரார் கடம்பன்
நீரார் உரும்பை
ஏரார் தலத்தில்
சீராய் இருந்தான். (3)

ஆனூர் சிவன்றன்
கோனுய்க் குருவாய்
ஆனுன் உரும்பை
ஞானு கரனே. (4)

ஏயும் கருணை
ஓய்வில் கடலாம்
தேய்வில் உரும்பை
நாயன் குமரன். (5)

அன்னுன் கழலே
துன்னுர் உழல்வார்;
கொன்னுர் உரும்பை
மன்னு டுவையே. (6)

வையோர் கதிர்வேல்
ஐயே எனவே
மையோர் உரும்பைச்
செய்யோன் வருவான். (7)

வானென் கருணை
யானென் பவன்எம்
கோனவ் வுரும்பை
மேனின் றனனே. (8)

நேயம் மிகுந்தார்
நோய்கள் இகந்தார்,
தூய உரும்பை
நாயன் அடிக்கண். (9)

கண்ணென் றமரர்
நண்ணி வணங்கும்
அண்ணல் உரும்பை
வண்ணக் குகனே. (10)

(வேறு)

குகனைச் சிவனார்
மகனை உரும்பை
யகமுற் றுளிரும்
சுகனைப் பணியே. (11)

பணியொன் றியவர்
துணிவொன் றுபவர்,
அணியும் உரும்பை
மணியன் னவன்பால். (12)

அவனை வணங்கிப்
பவமத றுப்பார்,
சிவமன் உரும்பைத்
தவனை யடைவார். (13)

அடையும் பிறவிக்
கடையொன் றுதன்முன்
நடையொன் றுரும்பை
உடையற் றுமுருக. (14)

தொழுத கரத்தார்
அழுகை துடைப்பான்
பழுதில் உரும்பை
எழில்கொள் குமரன் (15)

குமரன் முருகன்
அமரன் பரமன்
சமையும் உரும்பை
உமைதன் புதல்வன். (16)

புதல்வர் மனைவி
உதவல் இலையே;
புதுமை உரும்பை
வதிமன் அருள்வான். (17)

அருளும் பொருளும்
தெருளும் தருவான்,
இருளில் உரும்பைத்
திருவூர் உறைவான். (18)

உறைவான் பொழிலைக்
குறைய மதிக்க
அறைநீர் உரும்பை
மறையோன் தருவான். (19)

தருகை மகிழ்ந்தான்
வருகை புரிந்தான்
மருவு முரும்பை
வரமன் முருகன். (20)

(வேறு)

முருகனை மணியினை
உருகினர் வழிபடின்
பெருவள உரும்பராய்
வருமவன் அருள்வனே (21)

அருளுவன் எனஅவன்
திருவடி யிணைமலர்
மருவுற வணங்குவர்
பெருகுவ துரும்பராய். (22)

பராய்மலர் விரவுபு
விராய்விழி மலிர்வர
உராய்வன உரும்பையில்
வரோதயன் அடிபணி. (23)

பணியினை அணிபவன்
மணியென ஒளிர்மகன்
அணியுறும் உரும்பராய்
நணுகிய பரம்பரன். (24)

பரம்பரன் உமைமகன்
திரம்பெறு மனமலி
சுரன்அணி உரும்பராய்
வரன்நம துணையரோ. (25)

துணையிலை யெனமனம்
எணியினை தரலொழி;
தணியுறும் உரம்பராய்
நணியவ னருளுறும். (26)

உறுவினை யவைகெடத்
தெறுபவன் உரும்பராய்
நிறுவிய புகழ்பெறச்
செறிகுகன் குருபரன். (27)

குருபரர் தமின்மிகு
குருபரன் எனஅரன்
மருவிய உரும்பராய்த்
திருவனை வணங்கினன். (28)

வணங்குதற் கெனத்தலை
இணங்குற வழங்கினன்,
கணங்கொளும் உரும்பராய்
வணம்பொலி சிலம்பனே. (29)

சிலம்பினில் நடம்புரி
சிலம்பணி அடியினன்,
இலம்பொலி உரும்பையில்
நலம்பொலி அரும்பரன். (30)

(வேறு)

அரும்பரன்ன மூரல்
தரும்குறத்தி கேள்வன்
உரும்பராய்த்த லத்தில்
விரும்பியங்கு நின்ருன். (31)

நின்றுநித்தம் அன்பு
துன்றுபத்தர் போற்ற
நன்றுறுத்து ரும்பை
மன்றிருத்தி ஆண்டான். (32)

ஆண்டவன்குன் றத்தில்
நீண்டமன்னன் நீபம்
பூண்டவனு ரும்பை
ஏண்டிகழ வாழ்வான். (33)

வாழ்வருளிக் காத்து
தாழ்விகந்து போக
வீழ்புனலு ரும்பைத்
தோழவந்த ருள்வாய். (34)

வாயசமே போல
ஓயலற்று ழந்தேன்;
பாய்புனலு ரும்பை
ஏயகுக வாராய். (35)

ஆயுமந்த வேதம்
ஓயஒளிர் பாதம்
நீயுவந்து ரும்பை
நாயதரின் என்னே? (36)

நேயமிகும் அன்பர்
தாயையொக்க எண்ணி
ஆயநல்லு ரும்பை
மேயவனைச் சூழ்ந்தார். (37)

தார்புனையும் வேந்தர்
பேர்மடிய மாய்வார்;
ஊருரும்பை வாழ்வான்
நீருகந்து பேணே. (38)

பேணுபவர் தம்மை
நாணலற வைப்பான்
ஏணுரும்பை நின்ற
தூணனைய கந்தன். (39)

கந்தனெந்தை சந்தம்
முந்துகவி ஏற்ற
மைந்தனல்லு ரும்பை
அந்தமிலான் காணே. (40)

(வேறு)

காணாத காட்சியெலாம்
மாணாகக் காட்டுபிரான்
கோணாதார் வாழுரும்பை
நீணாத னங்குமரன். (41)

குமரனணி கடம்பத்தான்
அமரனெமை யடிமைகொள்வான்
பமரமொலி பதியுரும்பை
அமரர்விரும் பிளமுருகன். (42)

முருகனெழில் அழியாதான்
உருகுபவர் உளமொளிர்வான்
பெருகுபுனல் பேணுரும்பை
மருவுதகன் தாள்பணிக. (43)

பணிவுடைய அன்பர்தமை
நணுகுநமன் பயந்தீரும்
துணிவுபெறச் செய்தலைவன்
அணியுரும்பை அலர்ந்தனனே. (44)

அலர்ந்தபுகழ் இருந்தாலும்
கலந்தகல்வி கனிந்திடினும்
தலந்திகழும் உரும்பைபணிந்
திலங்ககிலார் உயர்வாரோ? (45)

உயர்வான கதிதேடி
மயர்வாகும் என்மனமே,
துயரீறு படுமுரும்பை
மயில்வாகன் தாள்பணியே. (46)

தாள்பணியு மவர்தம்மை
ஆளெனவே அடிமைகொண்டு
நீளுமின்பம் வழங்கிடுவான்
ஆளுரும்பை மணவாளன். (47)

வாளனைய கண்ணிவள்ளி
தோளணையும் சோதியனைக்
கேளிர்மலி தருமுரும்பை
நீளமரன் நம்துணையே. (48)

துணையாவார் யாருமிலை;
அணையாய்நீ என்றழுதேன்;
பணையாரும் பதியுரும்பை
இணைவானென் துயர்களைந்தான். (49)

களைந்தசுரர் தமையழித்தே
உளைந்தஅம ரரைக்காத்தோன்
அளைந்தபுனல் அமருரும்பை
விளைந்தஅருட் குமரபிரான். (50)

(வேறு)

குமரன் குருநாதன்
அமரன் அருள்போதன்
எமரன் உரும்பைவரும்
தமிழன் பெருந்துணையே. (51)

துணையென் றிருந்தவர்கள்
அணையும் உடம்பொழிந்தார்;
பிணையும் வளத்துரும்பை
நணியன் அழிந்தொழியான். (52)

அழிவின் றிருந்தபிரான்
வழுவின் றடைந்தவவர்
தொழுமெம் பரம்பரன்சீர்
தழுவும் உரும்பையனே. (53)

உரும்பைத் திருப்பதியான்
கரும்பைப் புனைந்தமதன்
தரும்பைத் தியங்கெடுப்பான்
விரும்பித் தொழுதுயரே. (54)

உயரப் பறந்தாவி
அயரும் குருவியெனப்
புயலொன் றுரும்பையனே,
துயரம் படவிருந்தேன். (55)

இருந்தேன் எனவினிக்கும்
மருந்தே, உரும்பையினில்
விருந்தே, அரந்தைகெட
இருந்தே புரந்தானே. (56)

தானே தலைவனுமாம்;
தானே அடியனுமாம்;
தானே ரிலாஉரும்பை
தானே பொலிமுருகன். (57)

முருகன் அழியாது
பெருகும் எழிலாளன்
மருவும் உரும்பையிலே
குரவன் எமதுபிரான். (58)

எமது பிரானெனவே
அமரர் தொழப்படுவான்
சுமைநெல் உரும்பையிலே
அமைய ஒளிர்ந்தானே. (59)

ஏரும் இளமையுமே
யாரும் இணையில்லான்
வீரன் உரும்பையுளான்
மாரன் குறும்பறுப்பான். (60)

(வேறு)

பானெய்யுறல் போலத்
தானெய்தியு ரும்பைக்
கோனெங்களை ஆள்வான்
ஞானங்கலை ஈவான். (61)

வானென் றுய ரருளான்
ஞானந்திரு வுருவான்
கானந்திக ழுரும்பை
மேனின் றிடு குமரன். (62)

குமராகுக குருவே
அமராவதி ஆள்வாய்
நமரேய்எழி லுரும்பை
அமராஎனக் கருளே. (63)

அருளேயுற வாக
மருளேதுற வாக
இருளேதுமில் உரும்பைத்
தெருளாபணித் தருளே. (64)

பணியேபுரிந் துன்றன்
அணியாரடி துன்றி
துணிநீருறு முரும்பை
மணியேயுற வைப்பாய். (65)

வைப்பேயென நின்றாய்
கைப்பாவையென் றென்னை
உய்ப்பாயரு ளுரும்பை
அப்பாவென தரணீ. (66)

அரணேயெரி மண்ட
வருகாவலன் மைந்த,
மருநாறுமு ரும்பைக்
குருவேநினை யடைந்தேன். (67)

அடைந்தார்தமை நமனுர்
இடம்போயுறப் புரியான்,
கடம்பாரெழில் உரும்பை
நடம்பாவிய நாதன். (68)

நாதாகும ரா,என்
ஆதாரமும் நீயே;
தீதோயுமு ரும்பைப்
போதாஅருள் வாயே. (69)

வாயே,முரு கேசன்
சேயோர்புகழ் பேசாய்
தாயேஎன உரும்பை
மேயானவன் அருள்வான். (70)

(வேறு)

அருளும்பெறு வாரொன்றிய
திருவும்பெறு வாரன்பொடு
மருவொன்றுரும் பையினின்றுயர்
குருவின்கழல் பணிகின்றவர். (71)

பணிகின்றவர் துயரம்பட
எணிநின்றுரும் பையில்வந்திடர்
துணியும்படி அருள்கின்றவன்
அணியுங்கடம் புறுகந்தனே. (72)

கந்தன்கொடுங் காலன்பயம்
சிந்தும்படி உருவுந்தியே
நந்தொன்றுரும் பையில்வந்தவன்
சந்தம்பெறுந் தமிழன்பனே. (73)

தமிழின்சுவை எனநின்றவன்
அமிழ்தின்சுவை யினைவென்றவன்
கமழொன்றுரும் பையின்மைந்தனை
அமயம்பெறத் தொழுநெஞ்சமே. (74)

தொழுவார்துயர் அறநீக்குவன்,
அழுவார்மய லவைபோக்குவன்,
உழவாருரும் பையில்வந்தனன்;
இழவேதினி எழுநெஞ்சமே. (75)

நெஞ்சந்திட முறஎன்றனை,
அஞ்சும்பொழு தரண்செய்குவாய்,
மஞ்சொன்றுரும் பையிலேவளர்
கஞ்சம்புரை கழற்கந்தனே. (76)

கந்தம்படு நீபம்புனை
சொந்தன்புகழ் நாமஞ்சொலிச்
சந்தங்கொளு ரும்பைப்பதி
வந்தன்புற மகிழ்நெஞ்சமே. (77)

மகிழும்படி இனஅன்பர்கள்
அகமொன்றிய பரன்எங்கணும்
சுகமொன்றுரும் பையிற்காதலன்
இகமும்பர மதுவுந்தரும், (78)

தருவொன்றிய சுகவிந்திரன்
மருவுந்துயர் கெடவந்தவன்
குருவொன்றுரும் பையில்மைந்தனென்
உரைகொண்டளி குலதெய்வமே. (79)

குலநல்குவன், குடிநல்குவன்,
நலநல்குவன், நயநல்குவன்,
புலமல்குரும் பையில்வந்தஎன்
மலமுந்திய முருகன்குகன். (80)

(வேறு)

குகனே, குறத்திக்குமுன்
அகமே உருக்கிக்கொளும்
மகனே, உரும்பைப்பதிச்
சுகனே, எனக்குப்பதி. (81)

பதியே, சுரக்கும்புனல்
நதியே, வளந்துன்றிய
நிதியே, உரும்பைப்பதி
வதிநீ எனைப்பெற்றவன். (82)

பெற்றா யெனைப்பெற்றபின்
கற்றாய் தரந்தந்தனை;
சுற்றார் உரும்பைப்பதி
உற்றாய் உனைவேண்டினேன். (83)

வேண்டிப் பணிந்தன்பினர்
நீண்டற் புதங்கொண்டனர்,
ஈண்டு முரும்பைப்பதி
ஆண்டி அருள்கைக்கொடே. (84)

கொடையிற் சிறந்தோங்குவன்
படையைப் புரந்தோங்குவன்
நடையுற் றுரும்பைப்பதி
அடைவுற் றுறுமெம்பிரான். (85)

பிரானை எனையண்டியே
விராவும் சிவன்மைந்தனை
பராவு முரும்பைப்பதி
இராநின் றவனைப்பணி. (86)

பணிவிற் றெழுகின்றவர்
பிணியுந் துயரும்பெறுர்,
அணிபொன் றூரும்பைப்பதி
நணியன் குமரன்றனே. (87)

தனையன் றிணையொன்றிலான்
அனையென் றுயர்பண்பினுன்
நனையொன் றுரும்பைப்பதி
மனையென் றுவந்தானரோ. (88)

உவந்து மடையேன்றனைச்
சிவந்துன் றுறவைத்தனன்,
நவந்துன் றுரும்பைப்பதித்
தவன்சுந் தரரூபனே. (89)

நேயம் புரிந்தன்பினோர்
ஏயும் கணத்தென்றனை
மேயன் புறவைத்தனன்,
தாயொன் றுரும்பைக்குகன். (90)

## (வேறு)

கன்னன் மேலாத்
துன்னும் ஈகை
மன்னு ரும்பை
முன்னுந் தேவன். (91)

தேவர் போற்றும்
சேவற் கையான்
மேவு ரும்பை
காவல் செய்வான். (92)

செய்யு ரும்பை
ஐயன் றன்னை
நையு மன்பு
செய்வார் தெய்வம். (93)

தெய்வத் தின்மேல்
தெய்வம் கந்தன்
மெய்யு ரும்பை
உய்ய நின்றுன். (94)

நின்ருன் எந்தை
குன்றம் எல்லாம்,
துன்று ரும்பை
என்றும் உள்ளான். (95)

உள்ளார் தம்மை
உள்ளான்; எம்மை
நள்ளு ரும்பை
உள்ளான் விள்ளான். (96)

விள்ளா இன்பம்
தள்ளா தீவான்
வள்ளு ரும்பை
நள்ளும் கந்தன். (97)

கந்த நீபன்
உந்து பாபன்
முந்து ரும்பை
வந்த தீபன். (98)

பன்னும் சீரான்
என்னை ஆள்வான்
துன்னு ரும்பை
மன்னன் சேயோன். (99)

சேயன் நீரே
பாயு ரும்பை
நாயன் சீரை
ஆயும் வேதம். (100)

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்

# முச்சீர் அந்தாதி

(வஞ்சி விருத்தம்)

சொல்லார் உரும்பைச் சுத்தன்
வெல்வேல் கரங்கொள் வித்தன்
மல்லார் புயங்கொள் வள்ளல்
எல்லார் புகழை எண்ணே. (1)

எண்ணார் உரும்பை எம்மான்
பண்ணார் தமிழின் பாவான்
நண்ணார் படைகொல் நம்பன்
தண்ணார் அடிகள் சார்வே! (2)

சார்வா யுறுவார் தாம்ஆர்?
நீர்வார் உரும்பை நீதா,
பேர்வாழ் உனசீர் பேசேன்;
ஓர்வாய் எளியேன் உள்ளம். (3)

உள்ளம் குளிரச் செய்யும்
வள்ளல் உரும்பை வாணன்
எள்ளில் தயிலம் என்றே
கொள்ள உறைவன் கூர்ந்தே. (4)

கூடும் கருணைக் கோலன்
சீரோன் றுரும்பைச் சீலன்
பாரோன் றுதுயர் பாற்றும்
தீரன் அடியைச் சேர்க. (5)

சேரும் பொருளும் தேரும்
ஊரும் உறவும் ஒன்றோ?
நீரோன் றுரும்பை நீதன்
நாரோன் றதுவே நன்மை. (6)

நன்மை பெறுவார் நண்ணித்
தின்மை யறவே சேர்வார்,
பொன்மை யுரும்பைப் பூபன்
வன்மை புகழும் மாண்பே. (7)

பேயென் றுலகிற் பேர்ந்து
நாயென் றுலவல் நன்றோ?
சேயன் உரும்பைச் செல்வன்
பாயன் பணிதல் பண்பே. (8)

பண்பும் பயனும் பதமும்
நண்பும் பெருமை நலனும்
கண்புந் தியதும் காட்டும்
தண்பொங் குரும்பைச் சாமி. (9)

சாமி தகப்பன் சாமி
நாமம் பலகொள் நல்லான்
தூமன் னுரும்பைச் சொந்தன்
பாமன் னடியே பாடாய். (10)

(வேறு)

பாடும் பனுவல் பலவும்
கூடும் குமரன் குரவன்
நாடும் உரும்பை நகரன்
ஆடும் மயிலில் அடைவான். (11)

வானென் றியசீர் மலிவான்;
நானென் றிடினே நலிவான்;
தேனென் றுரும்பை திகழ்வான்;
ஏனென் றுவந்திங் கெழுவான். (12)

ஆனன் குமரன் அருமை
ஞானம் தருநன் னயவன்
கானென் றுரும்பை கதிர்வான்
தானென் றுயரைத் தடிவான். (13)

வானத் தமரர் வணங்கி
ஈனச் சிறுமை இகுப்பார்;
மானத் துரும்பை வருவான்;
தானுற் றருளே தருவான். (14)

ஆனெய் தயிர்அஞ் சமுதம்
தேனெய் முதல சிறப்ப
மேனி குளிக்கும் விமலன்
ஆன உரும்பை யகத்தான். (15)

தானென் றுவரின் தகைவாய்
மானென் றவளி மணந்தோய்,
தேனென் றுரும்பைத் திருவா
ஏனென் றுறவந் திசையே. (16)

ஏமம் தருமன் பிளையார்
சேமம் பெறவே திகழ்வான்
மாமுந் துரும்பை வளர்வான்
யாமுந் திறைஞ்சும் இறைவன். (17)

வன்மை மனத்தில் வளரான்
புன்மை தவிர்க்கும் புரையோன்
நன்மை உரும்பை நகரான்
இன்மை யறுப்பான் எனையே. (18)

என்னை அடிமை எனவே
துன்ன வகுக்கும் துணைவன்
மன்னன் உரும்பை வதிவான்
தன்னை அடைந்தேன் சரணே. (19)

ஏரோன் றுரும்பை இறைவன்
பாரோன் றுபவம் பரிய
நாரோன் றருளே நணுக
ஆருங் குமரன் அரணே. (20)

(வேறு)

அரணன் றெரிய அடர்த்தான்
சரணென் குருவாய்ச் சமைவான்,
முரணில் உரும்பை முதல்வன்,
கரணங் கழியக் கதிர்வான். (21)

கதிர்வான் பலவாய்க் கவினை
எதிர்வாம் படியார் எழிலான்
அதிர்வான் உரும்பை அழகன்
சதிரே இயம்பிச் சமைவேன். (22)

சமையம் பலசொல் தலைவன்
உமையம் பிகையின் உயர்சேய்
சிமையொன் றுரும்பை திகழ்வான்
நமையும் பொருளா நயந்தான். (23)

நயந்தந் தெனையே நனிசேர்
சயந்தந் தினிதா தரிப்பான்
வயந்தங் குரும்பை மகிழ்நன்
தயங்கும் கழலென் சரணே. (24)

சரணம் சரணம் தருவாய்
கரணம் கழியக் கருதாய்,
புரணந் துரும்பைப் புனிதா
மரணந் தவிர்க்கும் மகிபா. (25)

மகிபன் அமரர் வயவன்
அகிமன் னியபூண் அமலன்
மகன்நல் லுரும்பை வதிவான்
அகமன் னினெவை அருமை? (26)

அருமை உயிரே, அமுதே,
முருகொன் றியமெய் முதல்வா,
திருவொன் றுரும்பை திவளும்
குரு,நின் அடியென் குறியே. (27)

குறியும் குணமும் கொளுவா
நெறியின் பெருமை நினையேன்,
வெறியன் உரும்பை விரையேன்,
சிறியன் வினையைச் சிதறே. (28)

சிதறும் வினையோய் திறவோர்
மதியொன் றியசெம் மதியன்,
கதியொன் றுரும்பை கதிர்வான்,
விதியின் வலிமை விடுப்பான். (29)

விடுப்பான் சிறையை; வினவி
எடுப்பான் எனையே; இனிதே
மடுப்பான்; உரும்பை வளர்வான்;
அடுப்பான் மயின்மேல் அழுதால். (30)

## (வேறு)

அழுமன் பர்க்கோர் அமுதம்;
தொழுமன் பர்க்கே துணைவன்;
உழுநன் காரும் உரும்பை
விழவன் பாதம் விழுவேன். (31)

விழுமம் ஈயும் விறலான்,
கழுமும் பாசம் கழற்றும்
உழவன், சீரார் உரும்பை
மழவன் என்ருல் மதியாம். (32)

மதிசேர் ஆறு வதனு,
நதிசேர் நீரை நயந்தாய்,
உதியார் மேய உரும்பைப்
பதியாய் கண்ணுற் பணியே. (33)

பணியும் செல்வம் பணியாய்;
தணியும் நீர்மை தருவாய்;
உணவின் செல்வ உரும்பைக்
குணமன் னன்புக் குமரா. (34)

குமரா, கோலக் குழகா,
எமையாள் சீலத் தெழிலா,
உமையாள் பால, உரும்பை
விமலா, நீஎன் விதியே. (35)

விதிமால் தேரு விமலா,
துதிமா தேவன் சொலுநல்
உதயா, செல்வ உரும்பை
வதிவாய் நீயென் மதியே. (36)

மதியே தில்லா மடவேன்
துதியே சொல்லாத் துயரன்
உதியா வண்ணம் உரும்பைப்
பதியாய் செய்யப் பணியே. (37)

பணியும் தேவர் பழைய
அணியும் வானும் அமைய
உணவும் ஈவாய், உரும்பை
அணவும் நீயென் அமுதே. (38)

அமுதே, தேனே, அழகார்
தமிழே, பாவே, தவமே,
உமிழ்தேன் மன்னும் உரும்பை
இமிழ்நீ என்றன் இதயம். (39)

இதயப் பூவில் இருத்திப்
புதைய அன்பு புரிவார்
உதயம் இல்லார். உரும்பை
வதியும் சாமி மலர்த்தாள். (40)

(வேறு)

மலரேய் வதனா, மாயக்
கலரே அறியாக் காலோய்,
உலரா உரும்பை ஊராய்,
அலரா எனையே ஆள்க. (41)

கவலைப் படுவார் கண்ணின்
அவலம் அறுக்கும் அண்ணல்,
உவகை உரும்பை ஊரன்
சிவமெய்ப் புதல்வன் சேயன். (42)

அனமே றியவன் அன்று
மனுவே யறியான் வந்தான்;
இனிமேற் பணிவாய் என்றான்,
கனியார் கருணைக் கந்தன், (43)

தனையே அறியார், தலைவன்
வினையே உணரார், மேவும்
மனையே புகுவேன்; மாண்பேர்?
அனையேய் உரும்பை அண்ணா. (44)

அணவுந் துயர்வந் தாரின்
எணமுந் துவனல்; என்னே!
கணமுந் துரும்பைக் கந்தா,
குணமன் றிதெனக் கூறே. (45)

என்க்குன் அருளே எய்த
நினைக்கின் குறையேர்? நின்னை
அனைக்கும் அனையாய் அன்றோ
நினைப்பன், உரும்பை நீதா? (46)

உரும்பை விரும்பும் ஊராய்
இருந்த குமரா, என்னை
அருந்தும் வினையை அந்தோ!
மருந்துண் டுயவே மாட்டேட. (47)

உயுமா றறியா துற்றேன்;
பெயலார் உரும்பைப் பெம்மான்,
அயலோர் துணையும் அண்ணேன்;
மயலை தவிர மன்னே. (48)

தவிரும் செயலும் தக்கிங்
கவிரும் செயலும் ஆரே
நவில்வர்? உரும்பை நாதா,
கவிவல் லவர்தம் கண்ணே. (49)

கணையே படுமான் கானில்
தணியாக் கனல்வெங் தாற்போல்
பிணியார் மனத்துப் பேயேன்
எணியே உரும்பை ஏறேன்! (50)

(வேறு)

ஏறென் நடையார் எழிலாண்கள்
வீறன் றுரும்பை வியனகராய்,
நீறன் றியசீர் நெற்றியினுய்,
பேறன் றுறஎற் பேணுவையோ? (51)

பேணும் புலமைப் பெரியோரை
நாணும் படியே நவில்வோனே,
சேணுந் துரும்பை திகழ்சேயே,
காணென் செருக்கைக் களைவாயே. (52)

வாயொன் றுளதால், மலிபாடல்
தூயர் பலரும் சொன்னுரால்;
மேயொன் றுணர விளம்பேனே;
தாயொன் றுரும்பைத் தலைவோனே. (53)

ஏமம் பலவும் இனிதருளும்
சாமி எனவே சார்ந்துள்ளேன்;
ஏமன் வரும்போ தெனைமறவேல்;
சீமன் உரும்பைத் தேவேசா, (54)

வேசா றியவென் வினையெல்லாம்
தூசா நலியத் துணிவருளாய்;
ஈசா, உரும்பை எழிலூரா,
தேசா, முருகா, சிவக்கொழுந்தே! (55)

தேவே, மரியாச் சிவமானேய்,
பாவே றியசெம் பாதத்தோய்!
நீவே றெனவே நினையாமல்
காவாய்; உரும்பைக் கனியருளாய். (56)

ஆயே, பிதாவே, அருஞ்சேயே,
மாயா உறவே, வளவுரும்பை
நேயா, நினையே நினைவேனுக்
கோயாக் கவலை யுறலுண்டோ? (57)

உண்டோர் உறுதி; உளமே,கேள்;
கண்டோர் உருகும் கவினுளன்,
திண்டோள் முருகன், திருவுரும்பை
அண்டா நின்றான்; அவனைநினை. (58)

நின்னைத் துணையா நேர்படின்என்
முன்னை வினையை முடித்திடுவேன்;
என்னை மனமே, எதிர்ப்பாயோ?
உன்னுய் உரும்பை உறவனையே. (59)

ஐயே, குமரா, அருமணியே,
செய்யாய், அமரர் சேவகனே,
வெய்யாய், தணியாய், வியனுரும்பை
உய்வார் உய்ய உறைந்தாயே. (60)

(வேறு)

உறைந்தாயால் உரும்பைநக ருள்ளே;
பறந்தாலும் மயிலூரும் பண்பா,
மறந்தேயும் உன்பெயரே வாழ்த்தும்
திறந்தாராய், மாதேவன் சேயே! (61)

சேயாக இருப்பார்க்குச் செல்வா,
தேயாத உரும்பைநகர்த் தேவே,
மாயாத பவபந்தம் மாள
நீயாக என்முன்னே நிற்பாய். (62)

பாயாத பூம்புனலே, பாலே,
ஆயாத ரகசியமே, அன்பே,
சீயாத வளஉரும்பைச் செல்வா,
வாயாத அன்பெனக்கே மாட்டாய். (63)

மாட்டாரும் வல்லாரும் வாழ்த்தத்
தேட்டாரும் உரும்பைநகர் சேர்வாய்,
வீட்டார நின்னடியே வீழ்ந்து
பாட்டாரப் பாடும்வகை பாரே. (64)

பாராமல் ஏழையென்றன் பாலே
சேராமல் புறக்கணித்தால் தேய்வேன்;
ஆராத பேரமுதே, ஆயா,
நீராரும் உரும்பைநகர் நேயா! (65)

யாதேனும் இன்னல்எனக் கெய்தின்
தூதாக நினைநினையச் சொல்லும்
தோதாக எண்ணுமியல் தோற்றாய்;
மாதாரும் உரும்பைநகர் மன்னா. (66)

மன்னாத வாழ்விதனை மண்ணில்
துன்னாத வரமருள்வாய்; சோதீ,
தென்னாரும் உரும்பைநகர்த் தேவா,
இன்னாத ஒழித்தருள்செய் இன்பா. (67)

இன்பார நின்நாமம் எண்ணித்
துன்பாற நின்னைமனம் துன்னி
அன்பார உரும்பைநகர் ஆர்வேன்;
என்பாரம் குக,தீர்க்க எண்ணே. (68)

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிப்
புண்ணாகச் செய்மனத்துப் புல்லன்
திண்ணாரும் உரும்பைநகர்ச் சேயே,
அண்ணா,நின் அடிமையென ஆளே. (69)

ஆளாக அடிமைசெயின் அன்னார்
மாளாத வழிகாட்டும் மன்னே,
தோளாத முத்தனைய சோதீ,
கேளாரும் இலை:நீயே கேளே. (70)

(வேறு)

கேளானுர் மாய்ந்தார்; கிளையானுர்
மாளாநின் ருரால்; வளஉரும்மை
ஆளாநின் னன்றி அழியார்யார்?
மூளாநின் றுண்மை முழுதுணர்ந்தேன். (71)

உணர்ந்தார்கள் நின்னை உணர்வாலே
யுணர்ந்தார்கள் இன்பம் புணர்ந்தார்கள்;
மணந்தாழு ரும்பை வளநகராய்,
எணந்தாழ நின்றேன் எளியேனே. (72)

எளியேனை எண்ணி இவன்நம்மை
அளியாரப் போற்றி அடிக்கீழே
களியார்க என்று கணிப்பாயே;
அளியாரு ரும்பை அணிநகராய்! (73)

ஆயாது பேசும் அறிவில்லேன்
தோயாது சொல்லும் தொகுசொல்லில்
நீயேதும் குற்றம் நினையாதே;
ஓயாவு ரும்பை உடையோனே! (74)

உடையானே, வேலா, உமையாள்சேய்,
அடையாதார் சோர அடும்வீரா.
மடையாரு ரும்பை வளவாழ்வே,
கடையேனை யாளக் கடவாயே, (75)

வாயே,உ ரும்பை மணவாளன்
தூயோனை வாழ்த்தித் துதியாயேல்
வாயாத சன்மம் மடுத்தபயன்
நீயேதும் இன்றி நெகிழ்ப்பாயே. (76)

பாயேறி வீழ்ந்து படுவருத்த
நோயேறி நின்றும் நுனநாமம்
நாயேனு வன்று நலமார
நீயேநி னைந்து நியமிப்பாய். (77)

நியமத்துள் நின்று நிலைபெறவே
மயலற்ற சிந்தை மருவுறவே
செயலற்ற அந்தத் திறமருள்வாய்,
புயலொன்று ரும்பை பொலிசேயே! (78)

பொலிவேறு கின்ற பொழுதெல்லாம்
மலிநாமம் ஒன்றும் மதியாமல்
நலிவேறு நாளில் நவைசொல்வேன்;
நிலையாரு ரும்மை நிமிர்வேளே! (79)

வேளேவு மம்பின் வினைகாமம்
மூளாமல் என்னை முழுதாள்வாய்;
தாளாள, செந்தில் தனிலார்வாய்,
வேளாணு ரும்மை விறல்வேலா! (80)

(வேறு)

வேலா, விளங்கமரர் மேலானாய்,
சீலா, உரும்பைநகர் சேர்வோனே,
மாலால் அடர்ந்துழலு வாயேஎன்
றேலா திருந்திடின்என் னேயாவேன்! (81)

என்னே! உனைமறந்த எளியேனைப்
பொன்னே வழங்கிநனி புகழார
இன்னா தனநீக்கி இனிதருள்வாய்;
அன்னே, உரும்பைநகர் அண்ணாவோ! (82)

அண்ணால், மணிமாலின் அருமருகா,
எண்ணா வினையேற்கும் இனிதருள்வாய்;
கண்ணே, உரும்பைநகர்க் காவலனே,
மண்ணா மணியனையாய், மாமுருகா! (83)

முருகா, முடிவில்லா முதற்பொருளே,
உருகா எளியேனை உன்னடியின்
உருவார் அழகெண்ணி உன்னும்வகைத்
திருவா ருரும்பையனே, செய்வாயே. (84)

செய்யா துதவிசெயும் சேயோனை
ஐயார் தமக்குரிய நாயகனைச்
செய்யார் உரும்பைநகர்ச் சேவகனை
மெய்யாய் அடைபவர்கள் மேலோரே. (85)

மேலோர் இலாமேலோன், வேதமெனும்
நூலோர் பணிந்தேத்தும் நோன்புவப்பான்,
சேலார் வயல்உரும்பைத் திருவாளன்
பாலே மனமேநீ பாய்வாயே. (86)

வாயாப் பெரும்புகழும் வாய்த்திடலாம்;
ஆயாப் பெருநூலும் ஆய்ந்துறலாம்:
சேயாம் உரும்பைநகர்ச் செல்வனடி
தோயார் அவர்என்னின் தோன்றியென்னும்? (87)

என்னும், புலைப்பிறவி எடுத்திதுதான்
மன்னும் உரும்பைநகர் மணவாளன்
முன்னும் பணிசெய்யா முடிந்துவிட்டால்
அன்னே விழற்கிறைத்த அதுவன்றே? (88)

அதுவாம் இதுவென்றே யலமந்து
சிதையா துரும்பைவரு சேய்தாளை
இதயா லயமன்ன இருத்துபவர்
உதியார், அழியாத உறுதியினர். (89)

இனர்வான் ஒருகோடி எழநின்றால்
அனையாய் ஒளிமேவும் அழகாரும்
உனையே மனம்நினைய உள்ளாயோ?
அனையேர் உரும்பைநகர் அம்மானே (90)

(வேறு)

மானேயும் விழிவள்ளி மணவாளா,
ஆனேறும் அரன்மகனே, அம்பிகைசேய்,
வானேயும் புகழுரும்பை வாழ்வோனே,
ஏனேவென் றனைமறந்தாய்? இனியாள்வாய். (91)

இனிதாள்வாய் நீஎன்றே இருந்தேனை
நனிதாழும் வினைக்குள்ளே நண்ணுவையென்
றநியாய மிதுசெய்தால் அடுப்பதுவோ?
முனியார்சேர் வளவுரும்பை முதல்வோனே! (92)

முதல்வோனே, முடிவானாய், முதல்வியுமை
புதல்வோனே, மறைமேவும் பொருளோனே,
நுதன்மதியார் பணியுரும்பை நுண்பொருளே,
மதனழியேன் றனையாள வருவாயே. (93)

வருவாய்நீ வருவையென வழிபார்த்துப்
பெருவாழ்வு பெறவெண்ணும் பேதைமையேன்
உருவாரும் உரும்பைநகர் உறைதேவே,
கருவாரும் துயர்கழலக் காட்டுவையே. (94)

காட்டிநின்ருல் போதாது; கருத்திலன்பு
மூட்டிவிட்டாற் போதாது; முன்னின்றே
கூட்டிவைத்தால் தானுய்வேன்; குமரேசா,
பாட்டிசைக்கும் உரும்பைநகர்ப் பண்ணவனே! (95)

பண்ணிசைக்கும் மறையோராப் பரம்பொருளே,
பெண்ணிசைந்த பாகத்தன் பேணுஞ்சேய்,
எண்ணிசைந்த உரும்பைநக ரினிலுள்ளாய்,
மண்ணினில்வா சனையறவே வகுத்தருளே. (96)

வகுத்தபடி எவையுமுறும் வண்ணத்தை
மிகுத்தடியேன் நினைக்கின்றேன்; வினையோவத்
தகக்கருதி யுனைவணங்கத் தாராயோ
சகத்தருளை? உரும்பைநகர்த் தலைவோனே! (97)

தலைவோனே யாவர்க்கும், சண்முகவா,
அலையாரும் உரும்பைநகர் அமர்பகவா,
மலையாவும் கோயில்கொள் மாமணியே,
அலையாத மனமேவ அருள்வாயே. (98)

அருள்செய்தால் அன்புசெய்வேன்; அடியேனை
மருள்செய்து விளையாடி மகிழ்கின்ருய்;
இருள்செய்த பொழிலுரும்பை எழில்முருகா,
தெருள்செய்தால் ஆகாதோ தீயவெற்கே? (99)

கேடான வைகோடி கிட்டிடினும்
கோடாமல் உனைஎண்ணிக் குணம்பாடி
வாடாமல் மகிழ்ந்திருக்க வளவுரும்பை
மாடேநின் றுளமுருக, வழிசொல்லே. (100)

உ

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்
# நாற்சீர் அந்தாதி

(கலி விருத்தம்)

தேன்ம லர்த்திரு சேரும் உரும்பராய்க்
கோன்,ம லர்க்கட் குறமகள் நாயகன்,
கான்ம லர்ந்த கடம்பணி மாலையன்,
வான்ம லர்ந்த மணிக்கழல் வாழ்த்துவாம். (1)

வாழ்த்தி மேவி வணங்கித் துதிப்பவர்
தாழ்த்த லின்றிச் சதுர்படச் செய்பவன்,
சூழ்த்த தேம்பொழில் துன்னும் உரும்பையில்
காழ்த்த பாசம் கழற்ற விளங்கினன். (2)

விளங்கு ஞானம் விளைவ தரிதரோ;
துளங்கு நெஞ்சத் துரிசற அன்பினில்
இளங்கு மாரன் எழிலார் உரும்பராய்க்
களங்கு லாவிய கந்தன் அருளறின். (3)

அருளு கின்றிலன் என்றயர் வாவதோ?
தெருளில் நின்று தினமும் உருகினல்
மருளை நீக்கி மணந்தருள் நல்குவான்,
இருளை நீக்க இருந்தான் உரும்பராய். (4)

ஆயும் நல்லறி வாரக் கொடுத்தனன்;
மாய மேவு மனத்தை அடக்கவே
தூய சோதி யுருவந் துதைந்தனன்;
நேய மாரும் உரும்பையில் நின்றவன். (5)

நின்றெ லாரும் நெகிழ்ந்துகண் ணீர்விட்டுத்
தன்றி ருப்பதம் தாழ்ந்து வணங்கினல்
அன்றெ னுமல் அருளை வழங்குவான்
குன்று ருத உரும்பையிற் கோமகன். (6)

கோமன் றேறும் உரும்பைக் குகன்இந்தப்
பூமி நாதன் புவனங்கள் நாயகன்
சாமி நாதன் தமிழ்க்குரு நாதன்நான்
காமி யாகலா வண்ணமே காத்தனன். (7)

தனந்த ருங்கல்வி தன்ம நெறிதரும்
கனந்த ருங்கவின் காட்டும் உடல்தரும்;
இனந்த ரும்பசு ஏயும் உரும்பையில்
தினந்தி கழ்குக தேவன் மலர்க்கழல். (8)

கழலை மேவிக் கடிமலர் தூவினுல்
சுழலு நெஞ்சிற் சுடரயில் காட்டியே
உழலல் நீவி உரும்பையிற் சேவகன்
நிழலும் இன்பமும் நேர்தரு வானன்றே. (9)

அன்று செய்குதும், அப்புறம் சேர்குதும்,
என்றெ ணுமல்நீ இன்னினி யேநினை,
மன்றுள் வாணன் மகனை, உரும்பையிற்
குன்றி லாத குணப்பெருங் கொண்டலை. (10)

(வேறு)

கொண்டலென் றருள்பொழி குமரனை என்னுள்
மண்டிய துயரினை மாற்றிய வேளை
அண்டர்கள் போற்றிய அண்ணலை இன்று
கண்டனன், உரும்பையிற் காவலன் என்றே. (11)

என்ருெரு கோடியி லங்கின என்ன
நின்றுறு சோதிநி றைந்தமெய்க் கோலன்,
வென்றுறு வேலவன் மேவுமு ரும்பை
சென்றடி சேவைசெய் வாரவர் தேவர். (12)

தேவரும் மூவரும் யாவரும் தேருர்;
யாவரும் யாவதும் எங்கணு மானுன்;
பாவரும் புகழுறும் உரும்பையிற் பாலன்,
நாவரும் என்புகழ் நயந்தனன்; என்னே! (13)

என்னையும் ஒருபொருள் என்னவி ரும்பிப்
பொன்னடி மலர்மனப் பொய்கையிற் பூக்கத்
தன்னருள் மதுக்குடித் தானந்தஞ் சார
முன்னினன் உரும்பையை மகிழ்ந்தசெவ் வேலன், (14)

வேலவன், மூலநல் வித்தகன், உம்பர்
மேலவன், நூலவன், மேலிலா வித்தன்,
சாலவன் புள்ளவர் சாருமு ரும்பைப்
பாலவன் என்றுவாய் பசனைசெய் தார்க. (15)

ஆரும் விரும்புறு மழகனை, நீபத்
தாரை விரும்பிய சாமியை, மாயை
வேரை அகழ்ந்தருள் வீசிய மன்னை,
ஏர்கொள்உ ரும்பையில் எய்துற லாமே. (16)

ஆமெனி லாம்;அவன் அன்றெனி னன்றாம்;
நாம்மனம் வைத்தெது நாட்டிட வல்லேம்?
தூமன மேஉரும் பைவளர் தூயன்
சேமல ராரடி சிந்தைசெய் வாயே. (17)

வாயுற வாழ்த்துதல் மலிதலை தாழ்த்தி
நோயற வணங்குதல் நுண்மனத் துள்ளே
பாயுற அன்பினைப் பண்ணுதல் செய்யின்
தாயென உரும்பையன் சார்ந்தருள் செய்வான் (18)

செய்நலம் மிக்குறும் உரும்பையிற் சேயோன்
பெய்கழல் ஏமனைப் பெயர்வுறப் போக்கும்;
நைசெயும் காமன்றன் நடலையை நீக்கும்;
மொய்பெறு ஞானமும் மோனமும் ஆக்கும். (19)

ஆக்கமும் நீக்கமும் அயர்ச்சியும் வாழ்வும்
தேக்கமும் இயக்கமும் திருவும்இன் மையும்
ஏக்கமும் உவகையும் இல்லவர் போற்ற
ஊக்கிய வேலவன் உரும்பையில் நின்றான். (20)

(வேறு)

நின்றே நினைவார், கிடந்தே நினைவார்,
குன்றா திருந்தே குளிர்ந்தே நினைவார்,
நன்றா குமனம் நலியா தணைவான்
இன்றோர் உரும்பை யிலமா யணைவான். (21)

அணைவாய் எனநான் அலறிப் பணியத்
துணையே எனவந் தருள்வான், சுடர்வேற்
கிணையாம் விழிமான் மகள்கேள், எழிலான்,
பணையார் உரும்பைப் பதிமே வியவன், (22)

வனமே வியடர் வழிமே வுதினைப்
புனமே வியினைப் புறுவேற் புனிதன்,
அனமே வுவளத் துரும்பைக் கதிபன்;
மனமே, அவனைத் தொழுவாய், வளர்வாய். (23)

வாயே உரையாய் வளமார் பெயரே,
சேயே முருகா திருமால் மருகா,
தூயோர் பயிலும் உரும்பைச் சுடரே,
ஏயா றுமுகா, எழில்வேள் எனவே. (24)

வேயார் தருதோள் உமையாள் விழைசெய்,
நோயா ரவரின் நுவல்வேன் நினபேர்;
தேயா தெனையாண் டிடவே யுரும்பை
தோயா வருவாய் எனவே துணிவேன். (25)

துணிந்தார் துணிவே, துறந்தார் துறவே,
மணந்தார் மணமே, மலிந்தார் மலிவே,
கணந்தாம் உரும்பைக் கடியார் பதியாய்,
நிணந்தா முடலை நெகிழப் பணியாய். (26)

பணியா ரணியாம் பரமன் மகனே,
தணியாய், தனியே ரகமெய்த் தலைவா,
அணியா ரலைவாய் அரசே, உரும்பை
மணியே, உனையான் மறவேன் மறவேன். (27)

மறவே லுடனே வனமே திரியும்
குறமா மகள்கா தலுளாய், குமரா,
அறமா ருரும்பைக் கணியே, மணியே,
தெறுமா யையினைச் செறவே அருளே. (28)

அருளே பொருளே அறமே மறமே
தெருளே இருளே திணியே மெலிவே
வெருளே துணிவே மிகையே குறைவே
உருள்தே ருரும்பை உறைவாய் அருள்வாய். (29)

வாயே மனனே மறையே தொடரா
நீயே அடையின் நினையார் அறியார்?
காயே துமிலாக் கனியே, உரும்பைத்
தாயே தமியேன் தனையாண் டவனே, (30)

(வேறு)

ஆண்டவன், எம்பெருமான், அருஞ்சுடர்ச் சோதியென
நீண்டவன், வடிவேலன், நிமிர்புகழ் உரும்பையினுன்,
வேண்டவந் தருள்தருவான் வேட்கையை நீத்ததவர்
பூண்டரு சிந்தையிலே பொலியவி ருந்தனனே. (31)

இருந்தன மாகியவன், எங்குரு வாகியவன்,
பொருந்துறு கல்விஅவன், போதமெய்ஞ் ஞானமவன்,
திருந்துறு செய்யிலனம் சேர்தரும் உரும்பைநகர்
இருந்தவன் எனையாண்ட எழில்முரு கேசனன்றே. (32)

நன்றெனை அடைந்தாலும் தீதெனை நலிந்தாலும்
அன்றென மறுப்பேனே? ஆமென உவப்பேனே?
என்றெனை அவனுண்டான், அன்றுள தறிந்தேன்யான்,
குன்றலில் உரும்பையினுன் கூட்டுவ இவைஎன்றே. (33)

இவையவன் வடிவென்றே எவர்சொல வல்லாரே?
இவையவன் வடிவன்றென் றெவர்சொல மாட்டுவரே?
எவையெவை யேனுமவன் எழிலுடை வடிவென்றே
சிவைமகன் உரும்பையனைச் சேவியென் மடநெஞ்சே. (34)

நெஞ்சுறும் அழுக்கெல்லாம் நீக்கிட வழிசொல்வேன்;
அஞ்சமு தத்தாலே ஆடுதல் மகிழ்வானை.
நஞ்சமு தாக்குபிரான் நல்கிய திருமகனைக்
கஞ்சமன் உரும்பையனைக் காதலின் அடைவீரே. (35)

அடைவுறு வளனெல்லாம் அடைபவர் யமன்வந்தால்
நடைமெலி வுடையாராய் நடலையை அடைவாரே;
திடமுற உரும்பையினுன் சேவடி நினைவாரேல்
அடநம வருவாயேல் அடர்குவன் எனமொழிவார். (36)

மொழிகுவர் பலநாமம்; முன்னுவர் பலஉருவம்;
வழிபட மலிகோயில் மாநில மீதுபல;
அழிவுறு மனமேநீ அருமையி னுரும்பையுறுய்;
பழியில தாகுமுயர் பதவியை அடைகுவையே. (37)

குவையுறு வளமுள்ளான், கொடைமிகு தருவுள்ளான்,
நவையறு தேனுவுளான், நன்மணி தானுமுளான்;
சுவைநுகர் இந்திரனே துயரடை கின்றனனேல்
எவருளர் குறைவில்லார்? எழிலுரும் பையனைநினை. (38)

நினைமனம் நெகிழ்ந்துக்கு நிறைவிழி நீர்மல்கித்
தனையளி பெறவாழ்த்தும் தகவினை யருள்செய்தனன்
வினையற உரும்பைநகர் விளங்கிய வேல்வலவன்
அனையெனத் தயைமலியும் ஆறுமு கேசனரோ.

அரகர அரவென்றே அடியவர் வருபழனி,
குருமலி மலையென்றே கூறிய ஏரகம்,நீர்
கரையலை திருச்செந்தூர், களிமணப் பரங்குன்றம்
உரைபெற நின்றவனே உரும்பையில் நின்றனனே. (40)

(வேறு)

நின்றூர்இன் றிறந்தாரென் றுரையேற நிலையார்
முன்தாழும் அதனாலே முளைபேறும் உண்டோ?
என்தாழ்வு கெடநீயே இரங்கியரு ளாயேல்
பின்தாழ யாருள்ளார்? பேணுமுரும் பையனே. (41)

உரும்பையிலே இருந்தாயை மனமார உன்னி
விரும்பிவிழி முன்கண்டு விரையுநீர் முடுக
அரும்பிவரு புளகங்கொண் டானந்தம் அடையேன்;
கரும்பிறவி இனிவந்தாற் காப்புண்டோ? கந்தா. (42)

கந்தா,செங் கடம்பா,சுப் பிரமணியா, காதல்
முந்தார்வ முறுவள்ளி முன்னணைந்த நாதா,
செந்தூராய், காந்தமலை சேர்வான செல்வா,
நந்தாத உரும்பைநகர் நாயக,நீ சரணே. (43)

சரணென்று வந்தவரைச் சற்றுவிழி நோக்கின்,
முரணென்றும் என்றுதடை மொழிபவரும் உண்டோ?
மருணின்ற மனமுடையேன் உரும்பைநகர் வந்தால்
அருள்இன்று செல்லெனவே அறைவதுவும் நன்றே? (44)

நன்றிதென நானறியேன்; நான்மறையை அறியேன்;
அன்றிதென, வுங்குறியேன்; ஆவதெதும் உணரேன்;
குன்றெறிந்த வடிவேலன், உரும்பையினன் குமரன்,
என்றுனையென் றுணர்கின்றேன்; இதுவொன்றே போதும். (45)

போதுநின்ற பொய்கையவிர் பொன்னுரும்பை மேவும்
நாதனுனை வேண்டிமொழி கின்றகுறை நல்காய்;
ஏதடியேன் எய்துகினும் இன்பமன்றித் துன்பம்
மோதுகினும் உனைமறவா முயற்சியெனக் கருள்வாய். (46)

வாய்தந்து மனந்தந்து வணங்கவுடல் தந்தாய்;
ஆய்தந்த மறைதந்தவ் வறிஞரையும் தந்தாய்;
தாய்தந்தை யெனநின்று தாங்குதலும் செய்தாய்;
காய்தந்த கனியுரும்பைக் கண்ணினிது நின்ருய்! (47)

கண்ணெனவும் கண்ணின்மணிக் கதிரெனவும் உள்ளாய்;
விண்ணெனவும் மண்ணெனவும் விரிபுவனம் ஆனுய்;
தண்ணெனவும் வெச்செனவும் தனித்தனியே உறைவாய்;
அண்ணலுருக் காணவுரும் பைப்பதியை அடைந்தாய். (48)

அடைந்தாயை நினைந்தேறி அருங்கோயில் சூழேன்;
இடைந்தாற லிலதாக இனைந்துநனி சோர்வேன்;
மடந்தாழும் மனத்தினை வணக்கஅறி யாயோ?
படந்தாழும் திருவுருவா, பரவுரும்பைப் பதியே. (49)

பதிநீயே, மனைநானே; பசுநீ,நான் கன்றே;
விதிநீயே; விதிக்குள்ளே விரவுடையேன் நாயேன்:
கதிநீயே; அதையடையக் கதிக்கின்றேன் அருளாய்:
உதியாதாய், உரும்பையிலே உத்தமவித் தகனே. (50)

(வேறு)

தகவார் மதியார் தகவே, உரும்பைநகர்
மிகவே மலியா ரருளாய், விரும்புபவர்
அகமே உறைவாய், அடியேன் இரும்புமனம்
நெகவே புரிவாய்: நினைந்து திருந்துவனே. (51)

திருந்து மனம்நோய் தீரத் தருந்தேவே,
மருந்து மணியாய் மலிமந் திரவுருவே,
அருந்தும் அமுதாய் உரும்பை யதிலார்வாய்,
பொருந்தும் எனக்குப் புகல்நீ; இதுநினையே. (52)

நினையே துணையா நினைத்துக் குறுகியுளேன்;
அனையே மகவை அடர்த்தல் முறையாமோ?
வினையே அறுத்தென் துயர்போம் விதமருள்வாய்;
கனையோர் மலியும் உரும்பைக் கதிர்சோதி. (53)

சோதி யுருவே சுடரும் திருவிளக்கே,
ஆதியே ஈறே அந்தம் இறுதியிலாய்,
நீதியாய் நின்ருய் நின்னை உளமுருக
ஓதி உறைய உள்ளாய் உரும்பையிலே. (54)

உரும்பையில் உள்ளாய், உளஊர் பலவுண்டு;
இரும்பை நிகரும் என்நெஞ் சுருகாதே;
கரும்பை நிகரும் கண்ணே மணியானாய்,
விரும்பி வணங்க விழையாய், அடியேனை. (55)

அடியேன் பலநாள் அவமே கழித்தனன்;இப்
படியே இராமல் படிய மனந்தருவாய்;
கொடியே ரிடையாள் குறத்தி மணவாளா,
நெடியாய், உரும்பை நின்றாய் இளமுருகா. (56)

முருகா, முதல்வா, முற்றும் முழுமுதலே,
அருகாப் பொருளே, அத்தா, திரவியமே,
கருகாப் பயிரே, காரார் உரும்பைநகர்
வருவாய், நீயே அடியேன் வழித்துணையே. (57)

துணைநீ எனவே துணிந்தேன்; இனிப்பயமென்?
அணியார் நினையே அகத்தில் இருத்துவன்யான்;
பிணியே தெனக்குப் பீடார் உரும்பையனே,
தணியா அருளாம் தனமார் பெருஞ்செல்வா! (58)

செல்வம் அருளாச் சிறிதும் நினையாமல்
சொல்வந் தனையை மக்கள் தொகுமிடமே
செல்வன் புரிவன்; சிறுமை அடைகின்றேன்;
மல்கும் உரும்பை வளர்ந்தோய், அடைக்கலமே. (59)

கலமே கவிழ்த்த செட்டி கலங்குதல்போல்
நலமே இழந்து நலிவேன் றனையெடுப்பாய்;
இலமே பொலியும் உரும்பை இருந்தவனே,
நிலமே விசும்பே நீரே எனஒளிர்வாய்! (60)

(வேறு)

நீரான குளிரே, நிலமான பொறையே,
ஊரான நிழலே, உறவான குடியே,
பேரான உரும்பைப் பெருமானே அருளாய்;
காரான வத்தைக் கழலும்வணம் பணியாய். (61)

பணியாத பிரமன் படமேலோர் குட்டுத்
துணிவாகக் குட்டும் துரையே,என் தந்தாய்,
அணியாரு முரும்பை அகமேவு மன்னே,
எணியாது செயினும் எனைநீதான் மறவேல். (62)

மறவாமல் நினைய மதிதந்த வள்ளல்,
கறவாத பாலாய்க் கசியாத தேனாய்த்
திறவாத கதவாய்த் தீராத பொருளாய்
அறவாணர் உரும்பை யதிலேற வந்தான். (63)

தானென்னை யறிந்தே தாளின்கண் ஆளாய்
நானென்ன லின்றி ஞானந்தந் தாண்டான்;
வானென்ன நின்றான்; மழையென்ன வந்தான்;
ஆன்மன்னு ரும்பை அருங்கோயில் உள்ளான். (64)

உள்ளானென் றிடவோ? இல்லானென் றுரைக்கோ?
கொள்ளானென் றிகழ்கோ? கொடுப்பானென் றிடவோ?
நள்ளாரும் உண்மை நாயனறி வேனோ?
கள்ளாரு ரும்பைக் கண்வளரும் அவனை. (65)

அவனேஎன் அன்னை; அவனேஎன் அப்பன்:
அவனேஎன் அண்ணன்; அவனேஎன் தம்பி;
அவனேஎன் தலைவன்; அவனேஎன் தெய்வம்:
அவன்யாரென் றுரைப்பன்; அருமையுரும் பையனே. (66)

பையுடைய பாந்தட் பணியணியும் ஆரனூர்
செய்யமகன் என்றே சிறிதெண்ணி யிருந்தேன்;
ஐயவிது பொய்யே; அவனும்வணங் குரும்பை
மெய்யனெவர் களுக்கும் மேலவனென் றுணர்ந்தேன். (67)

உணராத பாவம் உடையேனை உணர்த்தாய்;
புணராத சிந்தை புணரும்வணம் அருளாய்;
இணராரும் நீப எழில்தாரை அணியும்
மணியே,உ ரும்பை மணிநகரம் வாழ்வாய். (68)

வாழ்வான துன்னை வணங்குகின்ற வாழ்வே;
தாழ்வான துன்னைத் தாழாத தாழ்வே;
வீழ்வான துன்னை விரும்பாத வீழ்வே;
கேழ்வாய்ந லுரும்பைக் கிழவனுணர்த் தினையே. (69)

தினைப்புனமே சென்று திரிந்தலைந்து வள்ளி
மனத்துறவே நாடி மயங்கியதும் என்னே?
வனத்துறுநீர் உரும்பை வளநகரில் மன்னும்
கனத்தவரு ளுடையாய், கருதவரு வானே! (70)

(வேறு)

வானத்தன, தரையுற்றன, மலையுற்றன, உரும்பைத்
தானத்தன, கடலுற்றன, தவமுற்றவர் சிந்தை
மேனத்தின, ஞானத்துரு மிகமேவின, யோகர்
மோனத்தன, தேசுற்றன, முருகன்மலர்க் கழலே. (71)

கழலாதமெய் உணர்வேறநின் கழலேபணி வார்தம்
அழல்வாதனை யவையாவையும் அழியும்படி அருளும்
நிழலாய்வரு வாயென்றுனை நேடித்தனி அடைந்தேன்;
எழிலாயுரும் பையில்மன்னிய எந்தாயடைக் கலமே. (72)

கலமேறிய காகம்பறந் தாலும்பினர்க் கலமே
நலமேவுற வருமவ்வணம் நாயேன்பலர் பாலே
அலையாவுழ லாகிற்பினும் அலந்தேநினை அடைவேன்;
கலையாவள உரும்பைப்பதி காவற்கும ரேசா. (73)

சாவாவணம் பிறவாவணம் தளராவணம் நோயே
மேவாவணம் சினவாவணம் விழையாவணம் காமற்
பாவாவணம் பசியாவணம் உறங்காவணம் பணியாய்;
தேவாவுரும் பையிலேவளர் தேசா,முரு கேசா. (74)

ஏசாவணம் பழியாவணம் ஏங்காவணம் இகழே
பேசாவணம் கூசாவணம் பெரும்பயனில் சொல்லை
வீசாவணம் மாசாரவி லங்காவணம் அருளாய்;
ஈசா,உரும் பையிலேவளர் இறைவா,எனை மறவேல். (75)

வேலா,மறை நூலா,அநு கூலா,மலை மேலா,
பாலா,உமை பாலர்மகி பாலா,புலப் பாலே
தோலாதவர் பாலேயுறு துரையே,யுரும் பையினுய்.
மாலேதவி ரேன்என்றனை மறவேலினி மறவேல். (76)

மறவாதவர் இறவாதவர்; மருவாதவர் இறப்பார்;
துறவாதவர் பிறவேறுவர்; துரையே,என நின்னை
உறவேபுகழ் உரையார்பினர் ஊமைப்பிறப் புறுவார்;
மறவேலெனை, மறவேலெனை, மறவேலுரும் பையனே. (77)

நேயம்பெறு வார்தம்மொடு நேரும்படி அருளாய்;
சீயென்றினி யாருஞ்சொலச் சேராவகை அருளாய்;
நோயொன்றியும் பாயொன்றியும் நோவாவகை அருளாய்;
மேயொன்றிய வளமேதிகழ் உரும்பைநகர் விளக்கே! (78)

விளக்கே,ஒளிர் சுடரே,அருட் சோதீ,ஒளி விரிவே,
சளக்கேதம தறவேயருள் தருதாரைகொள் மழையே,
உளக்காதலர் எனுமாமயில் உவந்தாடிய காரே,
களத்தேறுநெல் லுரும்பைப்பதிக் கண்ணேஎனை மறவேல். (79)

மறவேல்மற வேலென்றனை மறவேலெனச் சொல்லி
அறவேவினை மாற்றும்வகை அறிந்தேன்; இனிப்பயம்என்?
அறமார்மனை உருர்பைப்பதி அறவா,மலைக் குறவா,
திறமார்மறைக் குறவா,சுகத் திருவா,முரு கையா! (80)

(வேறு)

கையாருஞ்மழ பிடித்தார்பணி கந்தா,அருட் குருவேநம;
மையார்விழி வளிநாயகி மணவாளநற் பரனேநம;
ஐயா,சுடர் மெய்யா,உரும் பைமேவுறும் ஆயாநம;
செய்யாநலம் செய்கின்றஎம் சேயேநம; கோவேநம. (81)

நமவேலவ, நமகாவல, நமதாணுவின் மகனேநம;
நமநான்மறைப் பொருளானவ, நமஅம்பிகை மகவேநம;
நமனுல்வரு துயர்ஓவுற நலமாவருள் தருவாய்நம;
நமர்மேவிய உரும்பைப்பதி நாதாநம, போதாநம. (82)

போதா,குரு நாதா,உரை போதாஎழில் மீதார்குக,
வேதாவினை மோதாவரு நீதா,மலர்ப் பாதா,என
தாதாரமாய் உரும்பைவளர் தாதாய்,முதல் ஆதீ,இனிச்
சேதாரம்நான் மேவாவகை சேராய்;அருள் தாராய்நனி. (83)

நனியாதரம் உறுமன்பினர் நண்ணுஞ்சபை சேராதவன்,
இனியேனுமுன் அடியாரொடும் இணையும்படி அருளைப்பொழி;
முனிவோர்தவ முயல்வோர்புகழ் உரும்பைவளர் முருகா,குக,
கனியே,மதுச் சுவையே,கணு வில்லாக்கரும் பே,கண்மணி. (84)

மணியே,மணி ஒளியே,ஒளி மன்னுஞ்சுடர் ஒருமூன்றினுக்
கணியே,அணி கடம்பாமலர் அவிர்ந்தார்திரு வுறுமார்பனே,
நணியேருறு முரும்பைநகர் நாதா,குக, மலைகாவல,
கணீயாருரு வெனவேவளி காணத்திகழ் வுறுவேலனே, (85)

வேலேறிய கரத்தாய்,அருள் விழியேறிய உரத்தாய்,வளி
மாலேறிய மனத்தாய்,திரு மறையேறிய பதத்தாய்,பல
நூலேறிய புகழாய்,பொருள் நுனியேறிய விதத்தாய்,பசுப்
பாலேறிய உரும்பைநகர்ப் பாலேறிய திருவாளனே, (86)

திருவாளனை உருவாளனை அருளாளனைத் திறலாளனை
மருவாளனை விறலாளனை மணவாளனை அறவாளனைக்
குருவாளனைக் குணவாளனைக் குலவாளனை நிலவாளனை
அருவாளனை உரும்பைநகர் அகத்தேயுறப் பணிந்தேனரோ. (87)

பணிந்தார்மயல் ஒழிப்பாயெனப் பணிந்தேன் அடி நாயேன்எனைத்
தணந்தாலினி யார்பாற்படர் தருவேன்?உரை தருவாய்;மகன்
குணந்தானிலன் எனமேவினும் குறைகாணரு தந்தையென
மணந்தாலுனை எவரேசுவர்? உரும்பைப்பதி வளர்வாணனே. (88)

வளர்வாழ்வினில் எனையேநிறை வுறவே அருள் வழங்குங்குகன்,
தளர்வானவை எவையாயினும் தாங்கிக்குறை தீர்க்கும்பரன்,
கிளர்வானமெய்ச் சுகமேபெறக் கிறியானவை அறவேகெட
நளிர்வானது வாராமலே நம்முன்னுரும் பைநின்றனன். (89)

நின்றும்புகழ், கிடந்தும்புகழ், இருந்தும்புகழ், நிமிர்ந்தும்புகழ்,
என்றுந்திய பகலும்புகழ், இரவும்புகழ், அகமும்புகழ்,
மன்றுந்திய புறமும்புகழ், மனமும்புகழ், வாயும்புகழ்,
என்றும்புகழ், உரும்பைப்பதி ஏந்தல்புகழ் மிகமன்னவே. (90)

### (தரவு கொச்சகக் கலிப்பா)

மன்னாதி மன்னரெலாம் மாய்ந்தார் எனக்கேட்டும்
பொன்னாதி யில்மயலே போக்கி வளர்ந்தாயே;
என்னாதி என்றே எனையடைந்து கேட்டக்கால்
இன்னாதோ? நீருரும்பை எம்மானே, சொல்லாயே. (91)

சொல்லாத மேனிலத்துச் சுத்தசுக வாரியிலே
செல்லாமற் சென்று திளைப்பதனை வேட்கின்றேன்;
நில்லா மனத்தை நிறுத்தும்வழி நீயுரைப்பாய்;
செல்லாரும் சோலை திகழுரும்பை மேயவனே! (92)

மேயபொருள் எல்லாமென் வேதனையை யேமிகுக்கும்;
ஆயதனால் எல்லாம் அகற்றிநினை என்மனத்தே
நாயகனாய் வைத்து நனிமோனத் தேயாழ
நீயருளாய்; இன்பம் நிறையுரும்பை மன்னவனே! (93)

மன்னவனே, மாதேவர் வந்துபணி யச்சுருதி
சொன்னவனே, செந்தமிழா, ஆரியனே, சூழ்எவர்க்கும்
முன்னவனே, முன்னும் முடிவும் இலாதவனே,
என்னவனே, சீருரும்பை இல்லுடையாய், வாராயே. (94)

வாராயோ? வந்தொருகால் மைந்தனென்றன் புன்முகத்தைப்
பாராயோ? பார்த்துப் பரிந்து வருந்துதுயர்
தீராயோ? கார்சேர் உரும்பைநகர்த் தேவேசா,
ஆராயோ என்னை அறிந்தாய்; இதுவறமோ? (95)

அறமே திருவுருவாய் ஆரருளே கண்ணுகி
மறவேல் எடுத்தருளி மாவுரும்பை வந்தோனே,
குறுமா முனிக்குக் குருவாய்த் தமிழ்சொன்ன
உறுவா, உரும்பைநகர் உள்ளாய், அடைக்கலமே. (96)

அடைக்கலமென் றேவந் தடிபணியக் கற்றேனை
இடைக்கலமென் றெண்ணி இகந்து புறக்கணித்தால்
கடக்கரிய பாவம் கடப்பதினி எப்போதோ?
முடக்கரிய செல்வத் துரும்பையினில் முன்னவனே. (97)

முன்னுபவர் நெஞ்சதனை முற்றெழிலார் ஆலயமாத்
துன்னுவையென் றேயறிந்து தூய்மையிலேன் என்மனத்தில்
நின்னை நினைய நினைத்தேன்; அதுநிலையா
தென்னை இனிச்செய்வேன்? ஏருரும்பை வாழ்பவனே! (98)

வாழாமல் வாழ்கின்றுய், வன்மனமே, என்றுன்னைப்
பாழானேன் எத்தனையோ பன்னிக் கடிகின்றேன்;
காழாளுய் அந்தோ! கடியார் உரும்பைநகர்
தாழாமல் வேலன்பால் சாரா துழன்றனையே! (99)

தனையே நினைந்துருகிச் சாந்தநிலை தன்னையுற
அனையே புரையவந்தான்; ஆரருளை ஈந்துகந்தான்;
வினையே யறமாய்க்கும் வித்தன்; உரும்பைநகர்
மனையேய் முருகன் மலரடிபெற் றுய்ந்தேனே. (100)

22 - 1 - 65.

௳

முருகன் துணை

# உரும்பராய்ச் சிதம்பர சுப்பிரமணியன்
# வெண்பா அந்தாதி

தேமாம் பொழில்சூழ் திருவுரும்பை மாநகரில்
பாமாண்ட வேலன் பரிந்திருந்தான் — நாமாண்ட
நாமம் பலசொல்லி நாடி வணங்கியுயர்
சேமம் பெறுவோம் தினம். (1)

தினமுந்து காலன் சினந்து வருமுன்
மனமுந்தி ஏருரும்பை மன்னை — இனமுந்தச்
சென்றுசே விப்பாருக் கில்லை திகைப்பவலம்;
நன்றுசே ரும்பன் னலம். (2)

நலந்தங்கும் உள்ளத்தார் நாண்மலர்த்தாள் போற்றப்
புலந்தங்கும் ஆசையெலாம் போகத் — தலந்தந்த
சீரார் உரும்பைச் சிதம்பரவே லன்றந்தான்
ஆரா அமுத அருள். (3)

அருளே உருவாம் உரும்பை அமலன்
கருவே அறியாத கந்தன் — மருவேறு
நீபத்தை ஏய்தோளான் நீசனே னுக்குவந்த
ஆபத்தைப் போக்கியருள் வான். (4)

வானேயும் மாமழைபோல் வாருரும்பை யான்கருணை
தானே யுவந்துமலர்த் தாட்கடிமை — யானுகச்
செய்ததுவால்; பாசமெலாந் தேய அழுக்ககலப்
பெய்ததுவால் போகப் பிழை. (5)

பிழையே புரிந்துதனைப் பேணுத நாயே
னுழையே இரங்கி உறுவான் — உழையாரும்
கானு ருரும்பைக் கருணைக் கடலனைய
கோன்ஆரும் போற்றும் குகன். (6)

குகனெனவென் னெஞ்சக் குகையில் ஒளிவித்
தகன்முருகன், ஈசன் தருசேய்—பகலின்மிக்குச்
செம்மா மணியிமைக்கும் சீரார் உரும்பராய்
அம்மான் எளியேற் கரண். (7)

அரணாக நின்னை அடைந்தே பணிந்தேன்;
சரணார விந்தம் தருவாய்—முரணாத
சிந்தைதரு வாயுரும்பைத் தேசிகனே, மாசிகந்த
கந்த,கும ரேசா,கு கா. (8)

காவேறு கோனும் கருடனே றும்பரனும்
பூவேறு நான்முகனும் பூண்மணிகொள்—சேவேறு
முக்கண்ண னுந்தன் முளரியடி போற்றநின்றான்
திக்கண் ணுரும்பைவளர் சேய். (9)

சேயென் றிரங்கித் திருவருட்பா லைத்தந்தால்
தாயென் றுனைப்புகழ்ந்து சார்வேன்யான்—சீயென்று
நீயே இகழ்ந்துரும்பை நீதா, வெறுத்தனையேல்
போயார்பால் சேர்வேன் புகல். (10)

புகலரிய கீர்த்தியுடைப் புண்ணியனே, என்றும்
அகலரிய மாகருணை ஆறே—இகலரிய
சாந்தத்தார் வந்துபணி சாலுரும்பை யாய்,மனத்தில்
ஏந்தத்தா நின்றாள் இணை. (11)

இணையாரும் இல்லா இளமையோன், ஏரான்,
துணையாக அன்பர் துருமப்—பணையாரும்
மாவுரும்பை யான்,முருகன், மாண்புறுநா மம்பலவும்
நாவரும்ப உண்டு நலம். (12)

உண்டுண் டுறங்கி யுழலாமல் என்பவத்தை
விண்டுண்டு தாளில் விழச்செய்தான்—டுண்டுண்டுண்
டென்றே முரசம் இயம்பும் உரும்பையான்
நின்றே புரக்கும் நிதம். (13)

தம்மைப் புகழ்ந்து தருக்குகின்ற கல்வியினர்
வெம்மைப் பவச்சிறையை வீடுவரோ?—எம்மைத்
துணையுடையேன் என்றுவந்து துன்னுரும்பை வேலன்
இணையடியே வீழார் எனின். (14)

வீழாமல் நின்னடியில் வீறியநின் பண்பினிலே
ஆழாமல் காமம் அவியாமல்—தாழாத
முத்திபெற வேண்டின் முடியுமோ? மாவுரும்பைச்
சத்திவடி வேலா,நீ சாற்று. (15)

சாற்றுபுகழ் எத்தனையோ சார்ந்தாலும் மேலேவரும்
கூற்றுவனைப் போக்குதற்குக் கூடுமோ?—நாற்றுவயல்
நண்ணுரும்பை யாறுமுகன் நாண்மலர்த்தா ளுக்கன்பு
பண்ணிலரேல் என்னே பயன்? (16)

பயனுவந்து நற்றருமம் பண்ணுதே; பண்ணி
நயனுவந்த ஈசற்கே காட்டிப்—பயமறவே
நில்லாய்நீ என்ருன், நிமலன் உரும்பைவளர்
வல்லாளன், செஞ்சே வலன். (17)

சேவற் கொடிநாதம்; தீரமயில் ஓங்காரம்;
ஆவ லுடையவள்ளி ஆம்இச்சை;—தேவர்கரி
நன்ருங் கிரியை;அயில் ஞானசத்தி; நல்லுரும்பை
நின்ருன் தனக்கிதனை நேர். (18)

நேர்மையுட னேவாழும் நேயமுடை அன்பர்களைக்
கார்மயின்மேல் வந்தெழிலார் காட்சிபெற—ஆர்மகிழ்வு
துற்றுய்ய வைக்கும் உரும்பையான், தூய்மையிலேன்
கற்றுய்யத் தந்தான் கழல். (19)

கழலேமெய்ஞ் ஞானம்; கழலேவான் முத்தி;
கழலே எழிலார் கமலம்—கழலேஎம்
மாயப் பிறப்புக்கு மாமருந்தென் றேஉரும்பை
நேயற் பணிவேன் நிதம். (20)

நிதம்பரவி அன்பர் நிறையும் உரும்பைச்
சிதம்பரவே லன்பெருமை தேறல்—மதம்பரவும்
ஊனேற்ற மாந்தர்க்கும் உம்பர்க்கும் மாலயற்கும்
ஆனேற்ற னுக்கும் அரிது. (21)

துப்புடையார் என்றும் துணையாவார் என்றுமுயர்
வைப்புடையார் என்றும் வணங்கினவர்க்—கெப்புடையே
காட்டுவார், காலன்வந்து கைப்பற்றின்? ஏருரும்பை
மாட்டுளான் அன்ருேநம் வைப்பு? (22)

புத்தமுத போகம் பொருந்தியஅவ் வேந்தனும்
சித்தமலேங் தேசூரால் தேய்ந்தலேந்து—பித்தானேன்;
எங்கள் உரும்பை எழில்வேலன் காவானேல்
மங்களமொன் றுண்டோ மதி. (23)

உண்டார் பசிபோன துண்டவர்தா மேயறிவார்?
மண்டுமனு பூதி மலிந்தவர்கள்—விண்டுரைக்க
வேண்டாம்; அவர்நிறைவு விள்ளும், உரும்பைநகர்த்
தூண்டா விளக்கின் சுகம். (24)

சுகமே, உரும்பைநகர்ச் சுந்தரன்பாற் சென்று
சுகமே எனக்குதவச் சொல்லாய்;—அகமேவும்
அன்னை யடர அயலார்கள் தாயடர
என்னையடர் மாலை இசைத்து. (25)

இசைத்தமிழும் நாடகமாம் இன்றமிழும் நல்ல
நசையியலாஞ் செந்தமிழும் நாட்டி—இசைகெழுமத்
தங்குபுல வோர்சாரும் சங்கத் தலைப்புலவன்
எங்களுரும் பைமே விறை. (26)

இறைவன், பழனி எழிலன், அலைவாய்த்
துறைவன், பரங்குன்றிற் சோதி—நிறைகுன்றம்
யாவுமுடை யான்சோலைக் குன்றான்,சீர் ஏரகத்தான்,
மேவுரும்பை நின்ற விளக்கு. (27)

கும்பமுனி வற்குநலம் கூடத் தமிழுரைத்த
நம்பனே, ஞான நலச்சுடரே,—உம்பர்பணி
தேவனே, ஏருரும்பைச் செல்வனே, நின்னருளை
மேவினுற் போகும் மிடி. (28)

மிடிபோல் ஒருபாவி வேறுண்டோ? சொல்லாய்;
அடியோ டெவையுமழித் தந்தோ—கொடிதான
துன்பந் தருமால்; சுடருரும்பை மாநகராய்,
என்பந்தம் நீக்காய் இசைந்து. (29)

துன்னுமயில் வாகன், துயரறுக்கக் கையினிலே
மின்னுமயில் வேலன், விளங்குரும்பை—மன்னனடி
பூண்டார் பிறர்பாலே போயெப் பொருளினையும்
வேண்டார், பெறுரே வெறுப்பு. (30)

வெறுத்தென்னைப் போக்கி விடல்வேண்டாம்; சற்றே
ஒறுத்துன்னை ஓத உஞற்றாய்;—பொறுத்தநிலம்
தொட்டாலும் தாங்காமற் சோருமோ? நல்லுரும்பை
யுட்டாழும் வேலா, உரை. (31)

உரையேறாப் பொன்னே, உணர்வேறாச் சோதீ,
பிரையேறாப் பாலே, பிறங்கு—நரையேறா
தென்றும் இளையாய், எழிலுரும்பை மாநகராய்,
ஒன்று வழியெற் குரை. (32)

வழியறியேன், வேத வகையறியேன், யான்துன்
னுழியறியேன், நீர்கசிந்தே ஊறும்—விழியறியேன்;
என்றாலும் நீயே இரங்குவாய் என்றிருந்தேன்,
குன்றா டுரும்பைக் குகா. (33)

காவென்றும் தேனுவென்றும் கன்னனென்றும் சீர்பாடிப்
பாவொன்றும் ஏறாப் பதகரிடை—நாவெந்து
போகாதே நெஞ்சே, புனலுரும்பை யாற்புகழின்
ஆகாத தேதிங் கறை. (34)

அறையோ முறையோ அறையோ முறையோ!
குறையீ தறியாய்; குணமோ?—மறையாத
செல்வமெனும் தண்கருணை யாருக்குச் சேரவைத்தாய்?
நல்வளவு ரும்பைமகிழ் நா! (35)

நாத்தந்தாய் வாழ்த்த; நலந்தந்தாய் வாழ்வதற்கு;ப்
பூத்தந்தாய் பூசை புரிவதற்கு—மாத்தந்த
வாரணமு கத்தான் வளர்தம்பி ஏருரும்பைப்
பூரணனே யாருண்டுன் போல். (36)

போலியாய் வாழாமல் உண்மையன்பு பூத்துன்றன்
பாலுறா நின்று பணிவதற்குச்—சாலுமருள்
தந்தருளல் வேண்டும்; தழையுரும்பை ஆறுமுகா
அந்தமுதல் காணாத்தே வா. (37)

ஆணவத்தோ டத்துவித மானபடி நின்கமலத்
தாணிழலில் அத்துவிதம் சாரவைப்பாய்—நீணிலத்தில்
இந்தப் பிறவியிலஃ தெய்துமா றேயுரும்பைக்
கந்தப்ப நன்கருளிக் கா. (38)

காதல் அருணகிரி கண்ட அநு பூதிஎனக்
காதலிச் சன்மத்தில் ஆகுமோ?—நீதயைத்
தாலெதுதான் கூடாதால்? அம்மான், உரும்பைநகர்
வேலவனே நானுய்ய வேட்டு. (39)

வேட்டுக் குமரனென வேடங்கொண் டேசென்று
காட்டுக் குறத்தி கழல்வீழ்ந்த—தூட்டுமயற்
காமமதோ? அன்றால்; கருணையன்றோ? நீருரும்பை
வாமனருட் குண்டோ வரம்பு? (40)

வரம்பெறவே நின்று வருந்துபல தேவர்
சிரம்பணிந்து வாழ்த்தச் சிறந்தாய்;—கரந்தவுள்ள
நாயேனை ஓர்பொருளா எண்ணி நணுகுவையோ?
சேயே, உரும்பையனே, செப்பு. (41)

செப்படங்காச் சீருடையாய், சிந்தையடங் காமேனி,
ஒப்பில் அடங்கா உருவஎழில்,—எப்பொழுதும்
மாறுக் கருணை உடையாய், வளவுரும்பை
வீறுஎன் பால்வருவாய் வேட்டு. (42)

உன்னுடைய கைவேலை உள்ளத்தே வைத்துநிலை
துன்னித்தி யானித்தால் சோதியுரு—மன்னுவதை
யான்றிந்தேன் ஐயா, எழிலுரும்பை யார்மெய்யா,
ஞானவுரு வாகுமகிழ் நா. (43)

நானெனுமக ந்தையினை நண்ணுமல், யாரிடத்தும்
ஈனமுறச் சீயென் றிசையாமல்—மானமுடன்
வாழும் வகையருள்வாய், மாணுரும்பை மேயவனே,
சூழுமுனை யன்பிற் றுதித்து. (44)

துங்கமுறு ஞானமட்டுந் துன்னிஅன்பு செய்யாமல்
தங்குவதால் ஏதும் தரமில்லை—பொங்குநின்றன்
சேவடியில் அன்பு செறிந்துருகின் ஞானம்வரும்;
தூவுரும்பை யாய்என் துணிபு. (45)

துணிந்துமறை மெய்ப்பொருள்நீ, துன்னுபிற வெல்லாம்
துணிந்தொழியும் என்றுசொல்லும் சொல்லை—எணந்திகழ
வைத்திடினும் நெஞ்சம் மலிபுலப்பாற் செல்லுவதென்?
கொத்துவள மாருரும்பைக் கோ! (46)

கோதறுத்தென் துன்பமெலாம் கூட்டழித்து நாயேனைப்
போதடிக்கண் ணேயாளாய்ப் போக்குவித்தான், — மாதிருக்கும்
பாகன் தருமதலை, பாய்ந்தபுன லாருரும்பை
ஏகன், முருகன், இறை. (47)

இறையாத தண்புனலே, ஏற்ற விளக்கே,
குறையாத செம்பொருளே, குன்றி — மறையாத
சோதீ, இலங்கையினில் துன்னுரும்பைக் கோயில்வளர்
ஆதீ, உனதடியென் ஆர்வு. (48)

ஆர்வலனல் லேன்;தவத்தேன் அல்லேன்;உன் நாமமொடு
சீர்வலனும் அல்லேன்; திருத்தொண்டர்ச் — சேர்வறியேன்;
குன்றே, வளவுரும்பைக் கோமானே, சீமானே,
என்றேநான் ஈடேறு வேன். (49)

ஏனென்று கேட்டென் இடர்தீர்ப் பவரிருந்தால்
நானின்றிவ் வாறு நலங்கெட்டு — ஞானமின்றிப்
போவேனே? ஈழத் துரும்பையினிற் புண்ணியனே,
சேவேறு வான்சேயே, செப்பு. (50)

புன்பிறவி என்று புகல்வாரே யானுலும்
நின்பதமே போற்றும் நிலையருளின் — இன்பிறவி
ஆகாதோ? ஐயா, அணியுரும்பைப் பூந்தேனே,
சாகாத மாட்சியினைத் தா. (51)

தாவென் றொருவர்பால் சார்ந்திரந்து வாழாமல்
போவென் றிரப்பவரைப் போக்காமல் — மாவென்ற
கண்ணி குறத்தி கணவா, உரும்பையிறைய்,
மண்ணிலெனக் கீவாய் வரம். (52)

வரந்தந்து போற்ற வழிசெய்து ஞான
உரந்தந்து ஞாலம்வாழ்ந் தும்மை — நிரந்தமுத்தி
வீடுபெற வைக்குஞ்சேய், வீறுமுரும் பைப்பதியாற்
கீடுயர்வு சொல்லற் கிலை. (53)

இலையென்று சொல்லல் இழிவேல் அடியேன்
விலையொன் றருளை விரும்பின் — இலையென்றல்
நில்லாதோ தாழ்வுன்பால்? நீருரும்பை மேயவனே,
வல்லார் வகுத்ததோ வாழ்வு? (54)

வாழ்வுவரி னும்தாழ்வு வந்துறினும் யாவுமற
வீழ்வுவரி னும்சலியேன்; மேவிமலர் — சூழ்பதத்தில்
வீழ்ந்தேன்; உரும்பை விமலா,உன் மெய்யன்பில்
ஆழ்ந்தேனுக் கச்சமுண் டா? (55)

ஆதாரம் ஆறினிலும் அவ்வவ் விடத்தேநின்
பாதார விந்தம் படருமென — மீதான
யோகுடையார் சொல்லும் உளவினை நா யேனுணரச்
சீகரவு ரும்பையினுய் செப்பு. (56)

புண்டரிகக் கண்மாலைப் போற்றுகின்ற மாமனெனக்
கொண்டனை;அன் னுன்றன் குமரர்களாம் — ஒண்டிறல்சார்
காமனெழில் தோற்பக் கமலன் றனையொறுத்தாய்
ஏமவுரும் பைக்கந்தா, என்? (57)

என்னென்று சொல்வேன் எனதிழிவை? நாய்போல்வேன்;
முன்இதனுல் துன்ப(ம்)நனி மூளுமென — நன்னர்
அறிந்தும் அதன்பாலே ஆழ்வேன்; உரும்பை
செறிந்தாய் இதுவென் சிறப்பு! (58)

சிறப்பும் புகழும்வளர் செல்வமும் கல்வி
உறப்பும்மெய் யாற்றலும் உற்ற — பிறப்பெனினும்
நண்ணுமுன தன்பின்றேல், நல்லுரும்பைப் பண்ணவனே,
கண்ணில் முகமன்றோ காண்? (59)

காணுத காட்சியெலாம் காட்டுவித்தாய்; நோயுறினும்
கோணுத உள்ளமைதி கூட்டினுய்; — நாணுமல்
நின்பெயரே கூறும் நிலைதந்தாய்; ஏருரும்பைக்
கன்புடையாய், என்னே யருள்! (60)

என்னே இவனழகீ தென்னே இவன்வீரம்!
என்னே இவன்கருணை! என்னேயோ — துன்னுற்றல்
என்றே அவுணர்களும் எண்ணிவியப் பார்;உரும்பைக்
குன்றே,யான் வாழக் குறி. (61)

குறியில்லை யென்றாலும் கொள்குறியெல் லாமுன்
குறியன்றி வேறில்லை; கூடும் — நெறியொன்றி
எந்நிலையில் எப்படிஅன் பெய்திடினும் நீஅருள்வாய்;
மன்னுரும்பை யாயீதுண் மை. (62)

மையணிந்த கண்டன் மலரணிந்த மாமனையான்
பையணிந்த பாந்தட் படுக்கையினன் — செய்தொழில்கள்
எல்லாம்நீ வல்லன் எனவறிந்தேன்; ஏருரும்பை
நல்லாய்,உன் தாள்பெறவே நாட்டு. (63)

நாட்டில் இருந்தாலும் நாற்கால் விலங்குகள்சேர்
காட்டில் இருந்தாலும் காண்குன்ற — மேட்டினிலே
நின்றாலும் எங்கும் நிறைந்தரணாய் வந்தருள்வான்,
குன்று உரும்பைக் குகன். (64)

குகனே, குமரா, குழகா, அரனார்
மகனே, சுடரே, மதியே, — சகநாதன்
போற்றும் மருகா, புகழுரும்பை வானவ,என்
றேற்றுதலே வேலை எனக்கு. (65)

எனக்குனருள் வேண்டுமென ஏமாந்து நின்றேன்
றனக்குவிர கொன்றுநனி சார — நினைத்தருள்வாய்;
நின்றொண்டர் கூட்டத்தில் நின்றிருக்கச் செய்துவிடின்
நன்றுரும்பை வேள்,இதனை நாடு. (66)

நாடு நகரமொடு நல்ல அரண்மனையாம்
வீடு பலவரணம் வீறுமர — சீடில்லா
வீரமவை மேவும் இறைவர் விளிந்தார்;செய்
ஏருரும்பை மன்னே இறை. (67)

இறையாக் கிணறாரு தென்னுமொழி நின்பால்
அறைவார் இலையோ? அடியேன் — குறைதீர
நின்னருளை ஈயின் நிறைவு குறையுமோ?
மன்னுரும்பை வாழ்வான வா. (68)

வாராய்;என் முன்வந்து மாண்கோலம் காட்டியருள்
தாராய் எனஅழுது சாம்பினேன் — தீராத
சன்மப் பிணிதீர்ப்பாய்; சாருரும்பை யாய்,என்பால்
வன்மமுண்டோ நின்றன் மனத்து? (69)

மனத்தின் வழியே மயங்கி அடியார்
இனத்தின் இணைந்தே இயங்கா — வினைத்துயரேன்
என்றுனடிக் கன்புசெய்வேன்? ஈரஉரும் பையரசே,
என்றுனருள் பெற்றுய்கு வேன்? (70)

வேனில்வேள் அஞ்சம்பு மேவத் தளராமல்
தீநவிலும் கோபம் செறியாமல்—ஈனமதம்
மோகம் உலோபமொடு மாற்சரியம் மூளாமல்
போகஉரும் பையாய் புகல். (71)

புகலாக நின்பாற் புகுந்தேனை ஆளா
திகலாக எண்ணி யிருந்தால்—சகவாழ்வில்
ஆர்பாற் புகுவேன்? அடைக்கலத்தை ஆளாரோ?
ஏர்பாய் உரும்பையனே எண்ணு. (72)

எண்ணறியா எண்ணே, எழுத்தறியாப் பேரெழுத்தே,
கண்ணறியாக் கண்மணியே, கற்பகமார்—விண்ணறியா
ஆரமுதே, தேனே, அடியார் பணியுரும்பை
யூரமைவாய் நீயே உறவு. (73)

உறவென்று மேவுவார் உற்றார் எவரும்
இறவொன்று போதினிலே எய்தார்—புறவொன்று
மாலின் மருகன் வளஞ்சேர் உரும்பைச்சேய்
காலன்றி யுண்டோ கதி? (74)

கதியே, விதியே, கதிரே, மதியே,
பதியே, பரனே, பனவா,—துதியேய்
உரும்பைநகர் உத்தமனே, என்றுருகி நின்றால்
தரும்பையப் பையத் தனே. (75)

தனையனையான்; வேறுவமை சாரான்; எனக்கே
அனையனையான்; சில்கால் அனலே—அனையன்;
அடித்தாலும் அன்றி அணைத்தாலும் ஒன்றே;
கடித்தார் உரும்பைமுரு கன். (76)

முருகன் எனும்நாமம் முற்றறிய லாகாப்
பெருமை யுடையதென்று பெட்டேன்;—அருமையுறு
தெய்வம் உரும்பைநகர் சேர்குகனென் றேபணிந்தேன்;
நைவதுமுண் டோஇனிமேல் நான்? (77)

நானென் றகங்கரித்தார் நண்ண ஒளித்தோடி
நானென் றதைமறந்த நல்லவர்முன்—நானென்று
தானேவந் தாரருளைச் சார்த்துவான், வாழுரும்பைக்
கோனேயங் கொண்ட குகன். (78)

கன்னின்றூர், வீரக் கதிபெற்றூர், முன்னூட்போர்
முன்னின்றூர் என்று மொழிந்தாலும் — என்னுண்டாம்?
காலன் முனர்வீரம் காட்டுவதே மெய்வீரம்;
சாலுரும்பைத் தேவன்மொழிந் தான். (79)

மொழிந்துபல சொல்லிஉரை மூட்டிடினும் நெஞ்சம்
அழிந்துருகத் தானே அரும்பி — இழிந்துவரும்
கண்புனலே சோரக் கருதினல் அன்றுரும்பைக்
கண்பொலிவாற் காணல் கடிது. (80)

கடிது பிறவி; கடிது மயல்நோய்;
கொடிது மனம்; அதனைக் கொண்டு — நெடிதேறல்
கூடுமோ ஐயா? கொழியுரும்பை யாய், எற்கு
வீடுமோ இன்னல்? விளம்பு. (81)

விளம்பரியன் என்றரிய வேதமுரைத் தாலும்
விளம்புவன்நின் நாமம்; விரிசீர்க் — களம்பெரிய
வாரிதியை யாரே வரையறிவார்? மாவுரும்பை
ஏர்நிதியே, ஈதென் இயல்பு. (82)

புண்ணியமுன் ஞள்செய்யாப் புன்மையால் நின்பதமே
நண்ணுகிலேன்; வீணே நலிந்துழன்றேன்; — எண்ணியிதை
நைந்தேன்; இனியருள்வாய், நாளும்வளர் செய்உரும்பைப்
பைந்தேன் அனையாய், பரிந்து. (83)

பரிந்து கரைந்து பணிந்து குறைந்து
புரிந்து கரங்கள் பொருந்தி — இரைந்துகுகா
ஐயாவோ அப்பாவோ அண்ணுவோ ஆருரும்பை
மெய்யாவோ என்றே விழு. (84)

விழுவார், தொழுவார், விழைதாள் அணிவார்;
அழுவார், பரிவார்; அயலே — நழுவார்;
அணியுடைய மாவுரும்பை ஐயன் பதத்தைப்
பணியுமவர்க் கீதன்றே பண்பு? (85)

பண்பினி லொன்றியு வந்துன பைம்பதம்
நண்பினி லுய்ந்துந லம்பெற — ஒண்பெறும்
பக்குவம்நா யேன்பெறப்பார்; பாவார் உரும்பையினய்,
திக்குனையே யன்றியுண்டோ செப்பு. (86)

செப்பரிய பொற்புடைய சிற்பரனை யற்புதனை
வெப்புமய லைப்பொடிசெய் வித்தகனை — அப்புமலி
சீருரும்பைக் கண்டேன்; செறியனையின் பாற்கருச்சார்
வாருறும்பை வாரேன் மறித்து. (87)

மறிதுன்று கையான் மகன்என்றன் காம
வெறிதுனறு பான்மை விளிய — அறிவொன்று
பாங்குதந்தான்; இன்று பலவளஞ்சேர் சீருரும்பை
யாங்குநின்றுன் ஈவான் அருள். (88)

அருளா தொழிந்தாயேல் அந்தோ அடியேன்
இருளே துறக்கவலி யில்லேன்; — மருளேதும்
வாராதே காவாயேல் மன்னுரும்பை வாழ்குகனே
தீராதே என்றன் செயிர். (89)

செயிரேதும் இல்லாதார் சிந்தையே கோயில்;
அயரா தழும்நீரே ஆட்டும் — உயர்நீராம்;
உள்ளாவி நைவேத் தியமாம்; உரும்பராய்க்
குள்ளான் உவந்த உகப்பு (90)

புத்தேளிர் தம்முலகிற் போதேன்; பிரமனெனும்
அத்தேவின் நற்பதத்தும் ஆசையிலேன்; — பித்தேறி
இப்புவியி லேபுழுவாய் எய்ந்தாலும் துன்னுரும்பை
அப்பவுனக் கன்பே அருள் (91)

அருளெனுந்தேன் ஊற்றும் அலர்ப்பொய்கை; அன்பர்
மருளென் இருள்தீர் மணியாம்; — குருள்ஒன்று
செந்தளிராம்; ஈழத் துரும்பைச் சினகரத்தெம்
அந்தணனுர் செய்ய அடி (92)

அடியார் பலநோய்க் கருமருந்தாம் பார்வை
மிடியாவும் கொன்று மிளிரக் — கடியோவாச்
செந்தா மரைபோல் திகழும், உருமபராய்க்
கந்தாம் முருகவேள் கண். (93)

கண்ணுமடி யார்பயத்தைக் கண்டஞ்ச லென்றவிர்ந்து
நண்ணிய துன்பம் நனிகடிந்து — புண்ணியவேல்
ஏந்தும், உரும்பராய் என்றும் உவந்தவள்ளி
காந்தன் மலர்ச்செங் கரம். (94)

கரமொட் டலரக் கனியுமெய்த் தொண்டர்
வரமெட்ட நின்ற மலைபோன்ம் — விரையொட்டும்
நீபத்தை ஏந்தும், நிமல உரும்பையன்பர்
தூபத்தை ஏற்றவேள் தோள்.

தோளணையும் வள்ளி துதையக் குளிர்ந்துசந்தம்
மூள மணந்து முதிரொளிசேர்ந் — தாள்பதக்கம்
மின்ன ஒளிரும், வினைவார் வளவுரும்பை
மன்னன் அகன்றஎழில் மார்பு. (96)

மார்பில் அரவணிந்த வள்ளல் வதனமலர்
ஏர்விரியச் செய்யும் இன்றுகும்; — காருமையாள்
நீல விழிக்குவளை நேர்விரிக்கும் நீள்நிலவாம்,
சீலஉரும் பையான் சிரிப்பு. (97)

புன்கணெல்லாம் போக்கும், புலையுடலின் நோய்தீர்க்கும்,
பொன்கவினல் போல்மெய் பொலிவிக்கும், — நன்குமணம்
ஏயும், உரும்ப எழில்நகர்சேர் கோயில்வள்ளி
நேயன் பிரசாத நீறு. (98)

நீறு படுமாறு நீள்வினையெல் லாம்மாய்த்துப்
பேறுநல்கி உள்தூய்மை பெய்யுமே — ஏறு
கலியவிய ஆருரும்பைக் கந்தவேள் ஆடப்
பொலியுமபி டேகப் புனல். (99)

புனலார ஆடிமனுப் பொறபச் செபித்துத்
தினம்நாடி யேவணங்கும் சீலர் — மனம்நாடி
ஏற்றணிவார், ஏரார் உரும்பை எழில்வேளைப்
போற்றும் அருச்சனைப் பூ. (100)

பூமன் முடிமேற் பொருந்தும்; சதமகனும்
காமன் முடிமேல் நனியொளிரும் — மாமன்
சிரம்பிறங்கும், நல்லுரும்பைச் சேயடியில் அன்பர்
விரும்பியணி யுங்கூ விளம். (101)

விளம்பரிய ஓங்கார வித்தகத்தை விள்ளும்.
உளம்பரிவார்க் கஞ்சல் உரைக்கும், — களஞ்சங்கே
அன்னவள்ளி முன்கெஞ்சும், ஐயன் உரும்பையுறை
மன்னவன்வேள் செம்பவள வாய். (102)

வாயா தனவெல்லாம் வாய்க்கஇம்மை வாழ்வினிலே
நோயாதும் இன்றி நுவலின்பம்—சாயாமல்
ஈயும், மறுமைவீ டேற்றும், உரும்பைவளர்
ஆயன் அமுத அருள். (103)

அருளே வடிவம்; அருளே மலர்த்தாள்;
அருளே அவன்அழகாம்; ஆற்றல்—அருளேதான்
பத்தர்க்கு நற்றுணையாம்; பண்ணை உரும்பராய்
நித்தறக்ஃ தேயோர் நிதி. (104)

நிதியார நல்கும்; நிறைகல்வி ஈயும்;
விதியார மாய்த்தருளும்; வீடாம்—கதியேற்றும்;
பங்கமறச் செய்யும்; பணையார் உரும்பராய்ச்
செங்கமலத் தாளுடைய சேய். (105)

சேய்யான்,என் தந்தை திருவுரும்பை யானென்று
நாயேன் மொழிந்தால் நலமெனகொல்!—நீயேநின்
மைந்தனென் றென்னை மனத்திற் பரிந்தேற்றல்
வந்தமையும் பேயேற்கு வாழ்வு. (106)

வாழ்வென்ப துன்னை வணங்கியன்பு செய்வாழ்வே;
தாழ்வுமற் றெல்லாம்; சதமாமோ?—பாழ்வினையேன்
தன்னையுமாட் கொண்டாய் தழையுரும்பை யாய்,அடியே
பொன்னெனவுள் வைத்தேன் பொதிந்து. (107)

பொதிசுமக்கும் மாடெனவே பொய்யுடலைத் தூக்கி
விதிவகுக்கும் வண்ணம் விழாமல்—துதிவழுத்தி
மேய கவலை விடுத்திங்கு வாழவைத்தான்
சேயன் உரும்பராய்த் தே. (108)

23 - 1 - 65.

WRAPPER PRINTED AT "MEIHANDAN" COLOMBO.